
யாழ்ப்பாண ரஸிக ரஞ்சனி சபா

யாழ்ப்பாணம்

# வெள்ளி விழா
# சிறப்பு மலர்



**17 - 4 - 76 — 30 - 4 - 76**

University of Jaffna
780
YAR
246406(AR; MAIN)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்நகரில் புதிய முயற்சி

# றிக்கோ ஹோட்டல்

***கோழிப் பிரியாணி *மட்டன் றோல்**

***பற்றிஸ் *கேக் வகைகள்**

பலதரப்பட்ட

**ஐஸ்கிறீம் வகைகள்**

**குளிர்பானங்கள்**

அத்துடன் சுவைமிக்க

## றிக்கோ கோப்பியை

சூடாகவும், குளிராகவும் எந்நேரமும்
பெற்றுக்கொள்ளலாம்

றிக்கோ கோப்பியை உங்கள் முன்னிலையில் அரைத்துப் பெற்றுக்கொள்ளலாம்

**றிக்கோ ஹோட்டல் - றிக்கோ கோப்பி (B பார்)**

70, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(நவீன சந்தைக்கு முன்பாக)

67, 68 நவீன சந்தை, யாழ்ப்பாணம்

குறிப்பு: ஓடர்கள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

தொலைபேசி: 464



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T Somasundaram
Jaffna April 76.

யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபா

# வெள்ளி விழாச் சிறப்பு மலர்

யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபா
யாழ்ப்பாணம்

780
YAR

AR

1952 — 1976

ARCHIVES

246406

★

246406

யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபா
யாழ்ப்பாணம்

17 - 4 - 76 —— 30 - 4 - 76

University of Jaffna
246406
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபா

**யாழ்ப்பாணம்**

(பதிவுபெற்றது)

## ஆட்சிக் குழுவினர்

| | |
|---|---|
| காப்பாளர்: | உயர்திரு. C. C. சோமசேகரம், J. P., U. M. |
| தலைவர்: | உயர்திரு. இ. செ. மன்மதராயன், J. P. |
| துணைத் தலைவர்கள்: | திரு. M. பாஸ்கரதேவன், B. A. |
| | திரு. நா. சி. சின்னத்துரை |
| கௌரவ செயலாளர்: | திரு. ச. தம்பையா |
| உப செயலாளர்: | திரு சி. பராராசசிங்கம் |
| பொருளாளர்: | திரு க. வை. தம்பு |
| உறுப்பினர்: | சங்கீதபூஷணம் திரு தா. இராசலிங்கம் |
| | இசையரசு திரு P. சந்திரசேகரம் |
| | இசைப்புலவர் திரு. C. செல்லத்துரை |
| | வித்துவான் திரு சி. சின்னத்தம்பி |
| | திரு. ஐ. சண்முகலிங்கம் |
| | திரு. செ. மகேஸ்வரன் |
| | திரு. K. கோவிந்தபிள்ளை |
| | திரு. V. M. K. சோமசுந்தரம் |
| | திரு. S. K. கணேசலிங்கம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணை மணிக்கூட்டு வீதி
அரசடி விநாயகர் ஆலய முன்றிலில் அமைந்துள்ள



யாழ் ரஸிக ரஞ்சன சபாவினரால் கட்டப்பட்ட
இசைவிழா மண்டபத்தின் முகப்புத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அழகுக் கலைகளில் அழிவிலாக் கலை, இசைக் கலை. செவிக்குத்
தெவிட்டாத கலை — தெய்வீகக் கலை. நாத வடிவத்தில் இறைவ
னைக் காண்பது சுலபம். நாதத்தை அறிந்தவன் நாதனை
அறிவான். இசையை அறிவதும் இறை பணியில் ஈடுபடு
வதும் ஒன்றுதான். இசைப்பணியில் ஈடுபட்டு இன்பம்
கண்டு ரஸிக ரஞ்சன சபாவின் இருபத்தைந்
தாவது மலராக, இவ் வெள்ளி மலரை நாத
சொரூபியின் பாதத்துக்குப் பணிவுடன்
சமர்ப்பிக்கிறோம்.

வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபா கீதம்

வாழிய யாழ்ப்பாண ரசிகரஞ் சனசபா
வாழிய வாழியவே
ஏழிசை போற்றிடும் இசைக்கலை தழைத்திட
என்றென்றும் வாழியவே
ஈழமணித்திரு நாட்டினில் யாழ்க்கொடி
ஏற்றிய இராவணனும்
யாழிசைமீட்டி இம்மாநிலம் வாங்கிய
இன்னிசைப் பாவலனும்
தமிழ் தமிழ் தமிழெனில் அமிழ்த மினித்திடும்
தாய்நிகர் தமிழ்மொழியும்
தந்த இசைக்கலை தழைத்திடத் துணைபுரி
சபா வென்றும் வாழியவே
இன்குர லின்னிசை யாழிசை முழவிசை
இசைதரு குழலிசையும்
பண்ணிசை பாவலர் பாட்டொலி வாழ்த்தொலி
பரத நடத்தொலியும்
என்று மினித்திட நன்கு புரந்திடும்
ஏற்றமுறும் பணியை
ஏற்று நடத்திடு ரசிகரஞ் சனசபா
இசைபெற வாழியவே.

வித்துவான் சு. சின்னத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



19o5-ம் ஆண்டு தலைமைப் பதவி யேற்று அரும்பணி புரியும் திரு. R.G.மன்மதராயன், J.P. அவர்கள்.



""கான கலாதரர்"" தனாதிகாரி திரு. க. வை தம்பு அவர்கள்.



1958-ம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து இச் சபாவுக்குத் தொண்டாற்றிவரும் செயலாளர திரு. ச. தம்பையா அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாதஸ்வர வித்துவான்.
லலிதஸ்வர நாத பூபதி,
இசைநாத லயமணி,
தேவகான இசைத்திலகம்,
யாழ்ப்பாணம்
பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை
அவர்கள்.



நாதஸ்வர கான கலா பூஷணம், நாதஸ்வர இசையரசு.
நாதஸ்வர மன்னன். நாதஸ்வர கான கலாநிதி
நா. க. பத்மநாதன் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1976-ம் ஆண்டு நிர்வாகக் குழு




இருப்பவர்கள் (இடமிருந்து வலம்):
திருவாளர்கள் தா. இராசலிங்கம் (சங்கீதபூஷணம்), K. V. தம்பு (தனாதிகாரி), நா. சி. சின்னத்துரை (உபதலைவர்), இ. செ. மன்மதராயன், J. P., (தலைவர்), M. பாஸ்கரதேவன், B. A. (உபதலைவர்), ச. தம்பையா (செயலாளர்).

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்):
திருவாளர்கள் சி. பரராசசிங்கம், (உபசெயலாளர்) S. K. கணேசலிங்கம், K. கோவிந்தபிள்ளை, வித்துவான் சு. சின்னத்தம்பி, சங்கீதபூஷணம் P. சந்திரசேகரம், இசைப்புலவர் C. செல்லத்துரை, V. M. K. சோமசுந்தரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளி விழா விசேட குழு



இடமிருந்து வலம்:

திரு. K. V. தம்பு (தனாதிகாரி), திரு. ச. தம்பையா (செயலாளர்),
பேராசிரியர் கலாநிதி கா. இந்திரபாலா (காப்பாளர்),
திரு. இ. செ. மன்மதராயன், J. P. (தலைவர்), திரு. V. M. K. சோமசுந்தரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண ரசிக ரஞ்சன சபாவின்
# வாழ்க்கையும் வளர்ச்சியும்

திரு. க. தம்பையா அவர்கள்
கௌரவ செயலாளர்.

இயலிசை நாடகம் என்னும் முத்திறத்தால் தம்மொழி வளர்த்தவர்கள் தமிழர். இசையினை நடுநாயகமாக வைத்து மனிதனின் எண்ணங்களை இனிமை பெற எடுத்துரைக்கும் பண்பு இசைத்தமிழுக்குரியது. பண்டு தொட்டே இசைத் தமிழ் தலை, இடை, கடைச் சங்கம் மூன்றிலும் இடம் பெற்று இனிது வளர்ந்தது. முதுநாரை, முதுகுருகு, இசைநுணுக்கம், போன்ற பல இசைத்தமிழ் நூல்கள் சங்க காலத்தில் இருந்தன. அத்தகைய அரும் பெரும் நூல்களை அறிய முடியா அளவிற்கு இடைக்காலத்தில் வேற்று நாட்டாரின் ஆதிக்கம், பிறமதத்தவரின் தலையீடு நம் நாட்டில் புகுந்தமையால் மாண்புடைய இசைத் தமிழ் அருகிப் போயிற்று. அக்காலத்தில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட புத்துணர்ச்சியால் இராசா சேர் அண்ணாமலைச்செட்டியார் முதலான பெரியார்கள் தமிழிசைச் சங்கம் போன்ற பல மன்றங்களையும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உயரிய இசைக் கல்லூரியையும் ஸ்தாபித்து இசைத்தமிழிற்குப் புத்துயிர் அளித்தனர். இப்புத்துணர்ச்சி ஈழத்திலும் தலையெடுத்து, சிறப்பாக யாழ்ப்பாணத்தில் வேரூன்றி இசைக் கலையை வளர்க்கவும், ரசிகத் தன்மையை மக்களிடையே புகுத்தவும் இசைபயிலும் மாணவருக்கு ஊக்கம் அளிக்கவும் அதற்கேற்றதொரு ஸ்தாபனத்தை இந்நாட்டில் ஏற்படுத்தப் பலவழிகளில் முயன்றது. அம்முயற்சியே இச் சபாவை நிறுவுதற்குப் காரணமாயிருந்தது.

## சபாவின் தோற்றம்

1-2-52 அன்று வெள்ளிக்கிழமை. மாலை ஆறு மணியளவில் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராசப் பெருமாள் ஆலய முன்றிலில் பெரியதோர் கூட்டம். திரு. து. சீனிவாசகம் B. A. அவர்கள் தலைமை தாங்க நல்லதோர் சுபவேளையில் ஆரம்பிக்கப்பட்டது இச்சபா. சபாவிற்கு நாமம் சூட்டுவதில் ஏற்பட்ட பல சர்ச்சைகளிடையே திரு. க. வை. தம்பு அவர்கள் சூட்டிய பெயரே இச் சபாவிற்குப் பொருத்தமுடையதாயிற்று. வண்ணை பாலகிருஷ்ண சங்கீத சபா, ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கீத சபா என்று கொண்டுவரப்பட்ட பெயர்கள் சமயச் சார்புடையவை என்ற காரணத்தால் தவிர்க்கப்பட எல்லாச் சமயத்தினர்க்கும் ஏற்புடையதும் சபாவின் நன்னோக்கத்திற்குப் பொருத்தமுடையதுமான ரசிக ரஞ்சன சபா என்னும் நாமமே இன்று எல்லோர் நாவிலும் இனிமையாகத் தவழ்கிறது. இந்நாமத்தைச் சூட்டிய தம்பு அவர்களே அன்றும் இன்றும் இச்சபாவின் தோன்றுத்துணைவன் என்பது உலகறிந்த இரகசியம். மேலும் இச்சபையை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக இருந்தவர்களுள் காலஞ்சென்ற க. சுப்பிரமணியம், சங்கீத பூஷணம் க. நடராசா என்பவர்களை இன்று நினைவுகூருவோமாக.

அன்று ஆரம்பிக்கப்பட்ட இச்சபாவிற்குச் சில ஆண்டுகளாக திரு. து. சீனிவாசகம் B. A. அவர்கள் தலைவராகவும் திரு. சு. காசிலிங்கம் அவர்கள் செயலாளராகவும், திரு. க. வை. தம்பு அவர்கள் பொருளாளராகவும் பதவி பெற்றுச் சபாவின் வளர்ச்சிக்குக் கண்ணும் கருத்துமாக உழைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது இசைவிழா

அன்று யாழ்ப்பாணத்தில் ஒரு பொன்னாள். அந்த அற்புதமான நாளை எவரும் மறக்க முடியாது. வண்ணை வெங்கடேசனின் வாசலில் அமைக்கப்பட்ட அலங்கார மான கொட்டகையில் திரு. சு. நடேசபிள்ளை B. A. அவர்கள் (அன்னாள் தபால் மந்திரி) தலைமை தாங்க கிருபாநந்தவாரியர் வெள்ளி விழா, வைரவிழாக் காணவேண்டும் என்று வாழ்த்துரைக்க மூன்று நாட்கள் யாழ்ப்பாணத்தில் இசைமாரி பொழிந்தது. இந்தக் குதூகலமான இசைவிழாவின் பின்னர் இந்நாட்டில் ரஸிகர்கள் என்று ஒரு கூட்டம் வளரத் தொடங்கியது. இதற்கு முன்னர் கோவில்களில் நடைபெறும் சதுர்க் கச்சேரிகளிலும். நாதஸ்வர ஓசையிலும் கதாப் பிரசங்கங்களிலும் அற்ப சொற்பமாக இசையை ரஸித்தவர்களுக்கு ரஸிக ரஞ்சன சபா அளித்த பெரு விருந்து அச்சபாவிற்கு மேலும் மேலும் ஆதரவளித்து, அச்சபாவை வளர்க்க உறுதுணை புரிந்தது, அன்றிருந்து கருகியிருந்த இசை நம்நாட்டில் மீண்டும் துளிர்த்து தளிர்விட ஆரம்பித்தது. இன்று வரை இச்சபா ரஸிகர்கட்கு இசை விருந்தை வரையாது வழங்குவதில் தன் கடமையைத் திருப்திகரமாகப் புரிந்து வருகிறது என்பதை ரசிக உலகம் நன்கறியும்.

## தொண்டர்கள்

தொண்டர்கள் பலரைக் கொண்டது இச்சபா. இச்சபாவை அயராது உழைத்து வளர்த்தவர்கள் பலர். அவர்களை நினைவு கூருவது இச்சபாவின் நன்றிக் கடன். இச்சபா உருவாக உழைத்தவர்களில் திரு து. சீனிவாசகம் B. A. அவர்களை மறக்கமுடியாது. அமைதியான போக்கும் தனது தொண்டை இரகசியமாகச் செய்வதில் மகிழ்ச்சியும் கொண்ட அன்னார் நீடூழி வாழப் பிரார்த்திக்கிறோம். அவரைப் பின் தொடர்ந்து இச்சபாவுக்குத் தலைமை தாங்கிய திரு. R. சிவராசா (வைத்தியர்) அவர்கள். காலஞ்சென்ற திரு சி. பொ. செல்லையா அவர்கள் ஆசிரியமணி தம்பிரத்தினம் அவர்கள் இசைப்புலவர் C. செல்லத்துரை அவர்கள் திரு S. P. கந்தையா ஆகியவர்கள் இச்சபா வளர்ச்சியில் ஈடு இணையற்ற சேவை மனப்பான்மை கொண்டு பணி புரிந்தமை யாவரும் அறிந்ததே. சபாவில் ஏற்பட்ட பூசல் பிணக்குகளிலும் இவர்களது தலையீடு அமைதியை நிலைநாட்டப் பேருதவி புரிந்தது.

## காரியதரிசிகள்

இச்சபா பல காரியதரிசிகளைக் கண்டுவிட்டது. ஆரம்ப வளர்ச்சியில் பங்கு கொண்டு அவ்வளர்ச்சியில் உறுதுணை புரிந்தவர் ஆரம்ப செயலாளராக இருந்த திரு. P. காசிலிங்கம் அவர்கள். கல்விப்பகுதியில் கடமையாற்றி ஓய்வு நேரங்களை சபாவின் சேவையில் ஈடுபடுத்திப் பல ஆண்டுகளாகத் தன்னலமற்ற சேவைபுரிந்த திரு. P. காசிலிங்கம் அவர்களை இன்று நாம் கருத்தில் கொள்ள வேண்டியது கடமையாகும். திரு வை. இராமகிருஷ்ண அவர்களும் திரு. சி. சீவரத்தினம் அவர்களும் திரு K. கந்தமூர்த்தி அவர்களும் இச்சபா வளர்ச்சிக்கு செயலாளர்களாக இருந்து தொண்டாற்றி வந்துள்ளார்கள். இச்சபாவின் இளவயதில் ஊக்கிவளர்த்த இவர்களை நினைவு கூருவது எம் கடமையாகும்.

## சோதனைக்காலம்

சபாவிற்கு வயது பதினன்கு பூர்த்தியாவதற்குள் அதற்கு ஏற்பட்ட சோதனைகள் பல. இவ் வேதனைகள் அனைத்தையும் வெகு சாதுரியமாகச் சமாளித்து அதனை வளர்க்க உதவியாக இருந்த உத்தமர்களை இச்சபா நினைந்து ஆனந்தக் கண்ணீர் பொழிகிறது. சபாவின் நன்னோக்கம் நிறைவேறி சபா அன்றிருந்து இன்றுவரை வீறு நடை போட்டு வளர்கின்ற தென்பதைக் கண்டு யாவரும் மகிழ்ச்சிக் கடலில் திளைக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாளர்

அன்றிருந்து இன்றுவரை பல தர்ம சங்கடங்களைத் தாங்கி, இச்சபாவிற்குத் தூணாக நின்று உழைத்தவர் ஒரேயொரு பொருளாளர் அவர்களே. பொருளாளர் சேவைக்கும் இன்று ஒரு வெள்ளி விழாவாகும். 25 ஆண்டுகள் பொருளாளராக இருந்து சபாவோடு இன்று இரண்டறக் கலந்து கொண்ட அந்தப் பொருளாளர் யார் என்று வாசகர்கள் நினைக்கலாம். அவரை அறியாதவர்கள் அறியாதவர்களே. அவரது சேவை என்றும் இச்சபாவுக்கு வேண்டுமென்பதை யாவர்க்கும் நினைவுறுத்த விரும்புகிறோம். அவர்கள் நீடூழி வாழ்க.

## இடமாற்றம்

வண்ணை ஸ்ரீ வெங்கடேசனின் வாசலில் பல ஆண்டுகளாக நடைபெற்று வந்த விழா இடைக்காலத்தில் சில அன்பர்கள் சபாவிலிருந்து விலகிய காரணத்தால் இடம் மாறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. விதியை வெல்ல யாரால் முடியும். அவ்விட மாற்றம் விநாயகப் பெருமானுக்கு வாய்ப்பாகி விட்டது. பின்னர் நடந்த இசை விழாகளெல்லாம் மகாகணபதியின் வாசலிற்றான் நடக்கத் திருவருள் கூட்டியது போலும்.

சோதனையான சூழ்நிலையில் இச்சபாவின் செயலாளர் பதவியை ஏற்கவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது. 1958-ம் ஆண்டு தொடக்கம் சபாவில் ஒரு அங்கத்தவனாகச் சேர்ந்து நிர்வாக உறுப்பினருள் ஒருவனாக விளங்கி சிலகாலம் உதவிக் காரியதரிசியாகப் பணிபுரிந்த என்னை அங்கத்தினர் பலர் காரியதரிசியாகப் பதவி ஏற்கு மாறு பணித்தனர். இசைக்கலையில் நான் கொண்ட பெருவிருப்பும், இச்சபாவின் வளர்ச்சியில் கொண்ட ஊக்கமும் அவர்கள் எனக்கிட்ட அன்புக்கட்டளையை என்னால் தட்டிக் கழிக்க முடியவில்லை. பலரின் எச்சரிக்கைகட்கும் பயமுறுத்தல்கட்கும் மத்தியில் 1965-ல் என்பணியைத் தன்னலமற்ற தூயபணியாகக்கொண்டு சேவை செய்ய ஈடுபட்டேன். பதவியேற்ற நாள்முதல் இன்றுவரை என்னாலான சில சேவையைப் புரிந்திருக்கிறேன் என்பதில் மனமகிழ்ச்சியடைகிறேன்.

## தற்போதைய தலைவர்

தலைவர் திரு. இ. செ. மன்மதராயன் J. P. அவர்களின் சேவையை இத்தருணத்தில் எடுத்துரைக்க வேண்டியது எனது கடமைகளுள் ஒன்றாகும். மறைந்து நின்று தன் காரியத்தைச் செய்வதில் மன்மதனை நிகர்த்த வேறு கடவுளர் இலர் என்று புராணங்கள் கூறுகின்றன. எங்கள் தலைவர் அவர்களும் அக் கடவுளின் நாமம் பூண்டவர். ஆதலின் தனது நன் நோக்கமாயுள்ள பொதுநல சேவையில் யார்க்கும் தெரியாத வகையில் நின்று எங்கும் தொண்டாற்றி வருகிறார். பிறவிச் செல்வராக விளங்குமவர் இந்நாட்டில் சைவ பரிபாலன சபை போன்ற பெரும் சபைகளிலும் பொதுப்பணி புரிவதிலும் ஈடுபாடு உடையவர். இச் சபா நடாத்தும் இசைக் கல்லூரிக்கு தர்மகர்த்தாவாக இருந்தும், சபாவின் இசைவிழா மண்டபம் கட்டுவதற்கு மூலகர்த்தாக்களில் ஒருவராக விளங்கியும் இவ் வெள்ளி விழாவையும் விமரிசையாக நடப்பதற்கு உறுதுணையாக இருந்து வருகிறார் என்பதை இத் தருணத்தில் கூறி வைப்பதில் பெருமையடைகிறேன்.

## செயலாளரின் கடமைகள்

ஒரு மன்றத்தை நடாத்துவதில் ஓர் அச்சாணி போன்றவன் செயலாளன். நான் சாதாரண நெசவாசிரியன் ஆயினும் பல மன்றங்களில் அங்கம் வகித்துச் செயலாளனாகவும் தலைவராகவும் பணி புரிநது வருகிறேன். அரசினர் நெசவாசிரியர் சங்கத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியதரிசியாகப் பலகாலம் தொண்டாற்றித் தற்போது தலைவராகவும் உள்ளேன். யாழ்-கச்சேரி இன்னும் பல அன்பர்கள் என்மேல் பல பணிகளைச் சுமத்தியுள்ளனர். யாழ்-கச்சேரி அரசாங்க அலுவலர் சிக்கனச் சேமிப்புச் சங்கத்திலும் செயலாளனைச் சிக்கிக் கொண்டேன். யாழ் - கச்சேரி கடன் வழங்கு சபையிலும் என்னை பிரதிநிதியாகப் பலர் தெரிவு செய்து விட்டனர். இவ்வித சிக்கல்கள் இருப்பினும் இம் மன்றத்தினர் எனக்கிட்ட பணியை முற்றிலும் திருப்திகரமாகச் செய்திருப்பேனே தெரியவில்லை. இவ் வரும் பணிக்கு ஆளாக்கி வைத்த அனைவர்க்கும் நன்றி.

## கஷ்டமான காரியம்

எனது பதவிக் காலத்தில் ரஸிகர்களைத் திருப்திப்படுத்துவதுதான் எனது முக்கிய நோக்கமாகும். நான் கலைஞன் அல்லன். ஒரு ரஸிகன் என்பது தான் அதற்குக் காரணம். ரஸிகர்களையும், கலைஞர்களையும் திருப்திப்படுத்துவது இயலாத காரியம். நடாத்தியவர்களுக்குத் தான் இதில் வரும் சங்கடங்கள் தெரியும். மனக் கசப்படைந்த கலைஞர்களும் உளர். நிகழ்ச்சி நிரல் தயாரிப்பது மிகக் கஷ்டமான விடயம். கலைஞர்களுக்குத் தகுந்த நேரமளிப்பதும் கஷ்டமான செயல்.

சபாவின் பொருள் வளத்தையும் மனதில் கொண்டே நிகழ்ச்சி நிரல் தயாராகின்றது: ஒரு ரசிகரின் கேள்வி இது. ''ஏன் நான் விரும்பும் கலைஞருக்கு இடமளிக்கவில்லை'' என்பது - இன்னொரு கலைஞர் தனக்கு இடமளிக்கவில்லை எனக் குறைப்படுகின்றார் - இத்தகைய தர்மசங்கடமான நிலைகளில் சபாவின் வளர்ச்சியில் ஊக்கம் கொண்ட அன்பர்கள் பலர் அங்கத்தினராயினும் சரி அல்லாதவராயினும் சரி என்னைத் தூற்றியுமுள்ளனர். சகிப்புத் தன்மையும் சஞ்சலமற்ற செயல் திறனும் தான் சபாவை வளர்க்கும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

## இசை விழாக்கள்

கலைஞர்களையும், ரஸிகர்களையும் திருப்திப்படுத்தும் நோக்கமாக இச் சபா சில ஆண்டுகளாக இரு இசை விழாக்களை நடாத்தி வருகின்றது. ஒன்று வருடாந்த விழா. மற்றொன்று கந்தசஷ்டி விழா. இருந்தும் இரு பகுதியாரின் குறைகளும் நீங்கின பாடில்லை. நம் நாட்டில் இசைக்கலை வளர்ச்சியே இக் குறைக்குக் காரணமாகும். ஆயினும் நம் நாட்டில் இசைக்கலை இவ்வளவு தூரம் வளர்ந்திருக்கின்றது என நினைக்கும் பொழுது அவ்வளர்ச்சியின் பெரும் பங்கு சபாவிற்கே உரியதாகும் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். கிராமங்கள் தோறும் இசை விழாக்கள் நடைபெற்றால் தான் இப்போதுள்ள கலைஞர்களின் இசைப் பசியை நீக்கலாம் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

## இசைக் கல்லூரி

இக் கல்லூரியின் வாழ்க்கையை இரண்டாகப் பிரிக்கலாம். 1962க்கு முற்பட்ட காலம், 1962க்கு பிற்பட்ட காலம் என்பன. மேற்படி கல்லூரி சன்மார்க்க போதனை மகா வித்தியாலயத்தில் இயங்கி வந்தது. இடைக் காலத்தில் ஏற்பட்ட பதவி மாற்றங்களினால் பொறாமை பூசல்களுக்கு உந்தப்பட்ட அங்கத்தினர் ஒரு சிலர் கல்வித் திணைக்களத்திலும் தங்கள் செல்வாக்கைப் பாவித்துச் சில காலம் கல்லூரியை மூடிவிட வேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டாக்கி விட்டனர். இதனால் சில காலம் கல்லூரி இயங்காது விட்டது.

தக்க வசதியின்றி கலையுணர்வு அற்று வாடும் இளம் சிறார்களிடத்தும் அடங்கிக் கிடக்கும் இசை ஞானத்தை வளர்க்க வேண்டும். பாடசாலைகளில் கல்வி கற்கும் சிறார்கள் சங்கீதம் போன்ற இன்பக் கலைகளைப் பயிலாது விட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது கல்வி பூரணத்துவம் அடையாது. சிறுவர்கள் பாட்டுக்களைப் படிப்பதில் அதிக விருப்பமுடையவர்கள். இறைவனை யறியவும் வழிபடவும் சங்கீதம் இன்றியமையாத சாதனம் என்பது யாவரும் அறிந்த உண்மை. இவற்றையெல்லாம் தன்னகத்தே கொண்டு சங்கீதம் கற்க விரும்பும் இளம் சிறார்களுக்குக் குறைந்த செலவில் சிறந்த முறையில் பிரபல வித்துவான்களைக் கொண்டு சங்கீதத்தை கற்பிக்கும் நோக்கத்துடனேயே இக்கல்லூரியைப் பல பெரியோர்களின் முயற்சியுடனும் ஆதரவுடனும் அப்போது வடமாநில கல்வியதிபதியாக இருந்த உயர்திரு சி. தணிகாசலம் அவர்களின் நல்லாசியுடனும் 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் எட்டாம் நாள் விஷயதசமியன்று ஒரு சில மாணவர்களோடும் மூன்று ஆசிரியர்களோடும் மீண்டும் ஆரம்பித்தது இச்சபா. கலைஞர்களையும் தரமான வித்துவான்களையும் உண்டாக்குவதுதான் இக் கல்லூரியின் நோக்கமாகாது. பாட முடியாதவர்களும் நம் நாட்டில் சிறந்த தரமான ரசிகர்களாக விளங்க வேண்டுமென்பதும் இக் கல்லூரியின் நோக்கமாகும்.

## கல்லூரியின் இன்றைய நிலை

வருடா வருடம் கல்லூரி தனது நிறைவு விழாக்களையும் கொண்டாடி வருகிறது. மாணவர்களுக்கு மேலும் உற்சாக மூட்டும் நோக்குடன் சபா தனது இசை விழாக்களிலும் பிற விழாக்களிலும் அரச கலாச்சாரப்பகுதியினர் நடாத்தும் கலை நிகழ்ச்சிகளிலும் அவர்களை ஈடுபடுத்துகிறது. அவற்றிற் பங்கு கொண்டு தங்கள் திறமைகளை காட்டுவதோடு பரிசில்கள் பெறுவதிலும் மாணவர்கள் முன்னேறி வருகிறார்கள்.

அன்று வாய்ப்பாட்டு வயலின் மிருதங்கம் ஆகிய பாடங்களைக் கொண்டு மூன்று ஆசிரியர்களோடும் குறைந்த மாணவர்களோடும் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி இன்று வீணை நடனம் ஆகிய வகுப்புகளையும் கொண்டதாய் 300க்கு மேற்பட்ட மாணவர்களுடன் 14 ஆசிரியர்களோடும் ஒரு லிகிதருடனும் சேவையாற்றி வருகிறதென்பதை நினைக்கும் பொழுது இறும்பூ தெய்தாதார் இலர் என்று எண்ணுகிறேன்.

## கல்லூரியின் சாதனைகள்

அன்று தொட்டு இன்றுவரை தொடர்ந்தும் சொற்ப சம்பளத்தோடு ஆசிரியராகப் பணியாற்றி வரும் தலைமை ஆசிரியர் சங்கீத பூஷணம் திரு. தா. இராசலிங்கம், வயலின் வித்துவான் ஸ்ரீ S. சர்வேஸ்வரசர்மா, மிருதங்க வித்துவான் வே. அம்பலவாணர் என்போரை என்றும் இச்சபா நினைவு கூரும் என்பதில் ஐயம் இல்லை. கிழமைகளில் சனி ஞாயிறு என்னும் இரு தினங்களில் நடைபெற்றுவரும் வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், வீணை, நடன வகுப்புகளுக்கு இக்குடா நாட்டின் பல்வேறு பாகங்களிலுமிருந்து மாணவர் வருகை தருகிறார்கள். இச்சபா தனக்கென ஒரு நிலத்தையும் தகுதியான ஒரு கட்டிடத்தையும் பெறுமாயின் கிழமைதோறும் ஐந்து நாட்கள் நடைபெறக்கூடிய ஓர் உயர்தர இசைக் கல்லூரியை நடாத்தக்கூடிய சக்தியைப் பெறும் என்பதில் ஐயமில்லை. கல்லூரியில் பயின்று வரும் மாணவ மாணவிகள் வட இலங்கை சங்கீத சபையால் நடாத்தப்படும் பல்வேறு படிவப் பரீட்சைகளில் தேறி இசையாசிரியர்களாகவும் கலைஞர்களாவும் பலரும் பாராட்டும் வகையில் நாட்டின் பல பாகங்களிலும் திகழ்ந்து வருகிறார்கள் என்பதில் இச்சபா பெருமகிழ்ச்சியடைகிறது. நடன வகுப்பு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து நடனக்கலை பயின்ற மாணவிகள் சிலரின் அரங்கேற்று விழா அண்மையில் வீரசிங்கம் - மண்டபத்தில் நடைபெற்று ரஸிகப் பெருமக்களின் நல்லாசியையும் பாராட்டையும் பெற்றுள்ளது.

இவ்விசைக்கல்லூரி யாழ் மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க தரமான ஒரு கல்லூரி என்பது அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளத் தக்கதாகும். எமது கல்லூரி மிகச் சிறந்த முறையில் சேவையாற்றுவதற்கு கல்லூரியில் கடமையாற்றுகின்ற சகலருமே இதய பூர்வமாக உழைக்கிறார்கள்.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விசைக் கல்லூரியைத் திறம்பட நடத்துவதற்கு லிகிதராய் இருந்து கடமை யாற்றிய திருவாளர் K. நல்லதம்பி அவர்கள் அமரர் ஆகிவிட்ட பொழுதிலும் அவரது சேவை நம்மால் மறக்கக் கூடிய தொன்றல்ல.

கல்லூரியை ஒழுங்கான முறையில் நடாத்துவதற்கு இடவசதிகள் தந்து எம் மோடு ஒத்துழைத்து அரும்பணி யாற்றிவரும் சன்மார்க்க போதஞ மகாவித்தியாலய அதிபர் திரு. M. பாஸ்கரதேவன் அவர்களுக்கு என் பாராட்டைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

அத்துடன் வருடந்தோறும் வகுப்பேற்றப் பரீட்சைகளும் எமது கல்லூரியில் நடை பெற்றுவருகின்றன. சித்தியடைந்த மாணவர்களுக்கு எமது கல்லூரியினல் வழங்கப் படும் தராதரப் பத்திரங்களை அங்கீகரிக்குமாறு வித்தியாபகுதியினரைக் கேட்டுக்கொள் கிறோம்.

## இசைவிழா மண்டபம்

ரஸிக ரஞ்சன சபா இதுவரை பெற்ற சிறப்புக்களில் யாமனைவர்க்கும் கண்காண எடுத்துக் காட்டாய் எம்முன் காட்சியளிப்பது இச்சபையினரால் கட்டி முடிக்கப்பட்ட இசை விழா மண்டபமாகும். சீரிய நற்பணிகள் புரிந்து தெய்வீக இசைக்கலையை வளர்த்து வரும் சபாவுக்கு இசை, நடனக் கச்சேரிகளை ஒழுங்கு செய்யவும் விழாக்கள் நடாத்தவும் அன்பர்கள் கூட்டம் வசதியோடு இருந்து கண்டு கேட்டின்புறவும் தனக் கென ஒரு நல்ல மன்றம் இல்லாது இருந்தது. அவ்வாறு இருந்தும் நல்ல தயாரிப்புக் களைச் செய்து இசையை வளர்த்து வந்தது ஓர் அதிசயம் என்றே கூறவேண்டும். ஆண்டுதோறும் நடக்கும் இசை விழாக்களுக்கு பந்தர் அமைப்பதில் ஏராளமான பணம் வீணுக விரையமாவது கண்ட சபையினர் நிரந்தரமான ஒரு கட்டிடத்தை அமைக்க முன்வந்தனர். அவர்களது அபிலாசையை நிறைவேற்றுமுகமாக அரசடி விஞயகர் ஆலய தர்மகர்த்தா சபையினர் கைகொடுத்துதவி விஞயகர் ஆலயத்துக்குச் சொந்தமான நிலத்தைச் சபாவிற்கு அன்பளிப்புச் செய்து ஆங்கோர் அழகிய மண்ட பத்தையும் கட்டுவதற்கு ஒத்தாசை புரிந்தனர். பல பெரியோர்கள் அளித்த நிதியுதவி யைக் கொண்டும் சபா ஈட்டிய பணத்தைப் பெற்றும் அழகியதோர் மண்டபத்தை அமைக்கத் துணிந்தோம்.

அதன் நற்பயஞக 29-2-68 திங்கள்கிழமை தைப்பூசத் திருநாளன்று சைவபரி பாலன சபைத் தலைவரும் சிவநெறிக்காவலருமான அமரர் திரு முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் அடிக்கல் நாட்டி வைக்க மண்டபம் பூர்த்தியாகி 29-4-72 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சர் கௌரவ செல்லையா குமார சூரியர் அவர்கள் குத்துவிளக்கேற்றி இசைவிழா மண்டபத்தை திறந்துவைத்த வைப வம் எமக்கு பெரும் மகிழ்ச்சியை தந்துள்ளது.

இம் மண்டபத்தில் இசைவிழா மட்டுமன்றித் பொது மக்களின் பொது நிகழ்ச்சி களும் கூட்டுப் பிரார்த்தனைகளும் இடம்பெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம். சனநெருக்கம் பெருகி வரும் யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் அமைந்திருக்கும் இம்மண்டபம் வருங்காலத்தில் ரஸிக ரஞ்சன சபாவின் ஆதரவில் பொதுமக்களுக்கு ஆற்ற இருக்கும் சேவை அம் மண்டபம் அமைப்பதற்கு செலவழித்த பணத்திலும் பன்மடங்கு அதிகமாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை. இம் மண்டபத் தில் காணப்படும் சில குறைபாடுகளை நீக்கி மண்டபத்திற் சகல வசதிகளும் இடம் பெறச்செய்ய வேண்டியது எமது கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்க உதவி

இப்படியான சபாக்களையும் கச்சேரிகளையும் அரசினர் ஒத்துழைப்பின்றி நடாத்துவது மிகமிகக் கடினம். 1953-ம் வருடம் இச்சபாவுக்கு அரசினர் 500 ரூபா நன்கொடை வழங்கினர். அதன்பின் அரசின் ஆதரவு கிடைக்கவில்லை. இதையிட்டு அவ்வப்போதுள்ள அரசாங்கத்திடம் பன்முறை வேண்டுகோள் விடுத்தும் பலன் கிடைக்கவில்லை. தற்போது கலை கலாச்சாரத்தைப் பேணிக்காத்து அவற்றை நல்ல முறையில் வளர்க்க முன்வந்துள்ள மக்கள் அரசாங்கத்துக்கு எமது கஷ்டங்களை எடுத்துக் கூறினோம். அதன் பயனாக 1974-ம் ஆண்டு 700 ரூபாவும், 75-ம் ஆண்டுக்கு 400 ரூபா உதவியாகக் கிடைத்தது. மக்கள் அரசுக்கு சபா நன்றியையும் ஒத்துழைப்பையும் நல்குவதுடன் குறித்த நிதியுதவி எமது சேவைக்கு போதுமானதல்ல பணிவுடன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று இலங்கையில் பல்வேறு பகுதிகளிலும் இசைமன்றங்களும் இசை விழாக்களும் இடம்பெற்று வருகின்றன. வருங்காலத்தில் இசைக்கலை வளர்ப்பதில் எல்லோரும் முன்னின்று உழைக்கவேண்டும். தரமான இசை வர்ணங்கள் தோன்றவேண்டுமாயின் சாஸ்திரீகமாய் இசைக்கலையைப் பயிலுவதற்கு ஏற்ற இசைக் கல்லூரிகள் தோன்றவேண்டும். எந்நாட்டவர்களும் சிறப்புத்தரவல்ல — எமது நாட்டுக்குப் புகழ் தேடித்தரவல்ல இசைக்கலைஞர்கள் தோன்ற வேண்டும் என்பது ரஸிக ரஞ்சன சபாவின் இலட்சியமாகும். எந்நாட்டிலும் தென்னாட்டிலும் புகழ்தேடித் தந்த அமரர் லயஞான குபேர பூபதி தெட்சிணாமூர்த்திக்கு எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

சென்ற 25 ஆண்டுகளில் எம்மால் குறிப்பிடப்படாத அனேகர் இச்சபாவின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி வந்திருக்கிறார்கள். அத்தகையோர் எல்லோரது சேவையையும் இக்கட்டுரையில் எடுத்துரைக்காது விடின் இச்சபாவின் வாழ்க்கை வரலாறு முற்றாகப் பூர்த்தியடையாது என்பது உண்மை அவைஎல்லாவற்றையும் எடுத்துரைக்க வேண்டியது கடமையாயினும் அவற்றை கூறுதற்கு இக்கட்டுரை இடம் தராமை காரணமாக அவற்றைக் கூறாது விடுத்தோம் ஆயினும் அவர்களது சேவையை சபாவின் வளர்ச்சியில் பெற்ற பங்கினை இச்சபா என்றும் மறக்காது என்பதை நினைவுறுத்துகின்றோம். இதுவரை என்னால் குறிப்பிடப்படாத பல நிகழ்ச்சிகள் உண்டெனினும் அவையெல்லாம் என்னால் வேண்டுமென்று விடப்பட்ட பிழைகள் அன்றென மதித்து என்னைப் பொறுத்துக் கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் ரஸிக ரஞ்சன சபா
# வெள்ளி விழா வாழ்த்துப் பாமாலை

### இசைப்புலவர் திரு. இ. செல்லத்துரை

(1) வண்ணையம் பதியொளிரும் வேங்க டேச
    வரதரா ஜப் பெருமாள் தலத்தில் தோன்றி
கண்ணியமாய்ப் பாலருக்காம் பருவம் தாண்ட
    கயமுகனும் அரசடியில் அணைக்க வாழ்ந்து
எண்ணருஞ்சீர் துலங்குமணி மண்ட பத்தே
    இனிதமர்ந்தின் னிசைமாரி பொழியக் கண்டோம்
இன்னும்பல நூற்றாண்டு சேவை ஆற்றி
    ரஸிகரஞ் ´சனசபா! வாழ்க! வாழ்க!

(2 ஆண்டுதொறும் சென்னைஇசை விழாவிற் கேகி
    ஆனந்த மாகவிசை நுகர்ந்து பக்தி
பூண்டகோ மான்தம்பு யாழ்ப்பா ணத்தும்
    புனிதஇசை விழாஎடுக்க உளமுங் கொண்டார்
நீண்டநாட் கொண்டஎண்ணம் மலர அன்பர்
    நினைவுதனக் குறுதுணையும் பலரும் ஈந்தார்
ஈண்டெழுந்து வெள்ளிவிழாக் காண்யாழ் ப்பாண
    "ரஸிகரஞ் ஜனசபா" நீடு வாழ்க.

(3) எத்தனையோ கலைஞரெலாம் மேடை ஏறி!
    இன்னிசைக்கச் சேரிசெய்ய இயற்றி வைத்தும்
சித்திதரு மிசைக்கல் லூரிஆக்கிச்
    சிறப்புடனே மாணவரைப் பயிற்றி வைத்தும்
பக்தியுடன் இசைபயின்ற மாண வர்கள்
    பாரதநா டேகிஇசை பயில வைத்தும்
இத்தனையும் செய்துவெள்ளி விழாவைக்கண்ட
    "ரஸிகரஞ் ஜனசபா" வாழ்க! நன்றே!

(4 வெள்ளிவிழா நிகழுமிந்தப் புனித நாளில்
    விருதுபெறும் கலைஞர்கள் நீடு வாழ்க
உள்ளமுவந் தயர்அதிதி யாக வந்த
    உத்தமர்யாழ் அரசாங்க அதிபர் வாழ்க
தெள்ளமுத ஆசியுரை செப்ப வந்த
    சீர்அறிஞர் சபாஅங்கத் தவர்கள் வாழ்க
அள்ளியிசை அமுதளிப்போர் அநுபவிப்போர்
    அரியரஞ் ஜனசபாவும் வாழ்க நன்றே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசார அமைச்சர்
## அவர்களின்
## ஆசிச் செய்தி

யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாவிற்கு இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி விழாக் கொண்டாடும் இவ்வேளையிலே, அதன் நினைவுச் சின்னமாக வெளியிடும் வெள்ளிவிழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த ரஸிக ரஞ்சன சபா, கடந்த இருபத்திஞறு வருட காலத்திற்குள் இசை விழாக்களையும், சமய வைபவங்களையும், கலை நிகழ்ச்சிகளையும் நடாத்திக் கலையின் வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள சேவை பாராட்டுதற்குரியது. சங்கீதக் கல்லூரி ஒன்றைத் தாபித்து இளையவர்களுக்குச் சங்கீத ஞானம் புகட்டுவதற்காக ரஸிக ரஞ்சன சபா எடுத்துவரும் முயற்சி மெச்சுதற்குரியதாகும்.

இச் சபை ஆற்றிவரும் சேவைகளை மனதார வாழ்த்துவதோடு, இதன் எதிர்காலக் கடமைகள் மேன் மேலும் வெற்றியடைய வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

ரி. பி. தென்னகோன்,
*கலாசார அலுவல்கள் அமைச்சர்*

*1976 மார்ச் மாதம் 31-ம் திகதி*
கொழும்பு – 7,
*கலாசார அலுவல்கள் அமைச்சு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவபரிபாலன சபைத் தலைவர்

### அவர்களின்

## ஆசியுரை

இசை வளர்ச்சியில் முதன்மை பெற்று விளங்கும் யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபா 1952-ம் ஆண்டு தொடங்கி அரும் பணியாற்றி இன்று வெள்ளி விழாக் கொண்டாடும் அளவிற்கு மிளிர்கின்றமை எமக்கெல்லாம் பெருமை அளிப்பதாகும்.

ஈழநாட்டின் இசைக் கலைஞர்களை ஒன்று சேர்த்து கலை அபிவிருத்தியில் முன்னின்றுழைத்து வருவது இச்சபையின் வளர்ச்சிக்கு ஏதுவாகின்றது.

இச்சபை 1965-ம் ஆண்டு தொடக்கம் சங்கீதக் கலாசாலை அமைத்து கர்நாடக சங்கீதம், மிருதங்கம், வயலின், நடன இசைவகுப்புக்களை நடாத்தி வடஇலங்கை சங்கீதசபை பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்று வருகின்றமையை நாம் அறிவோம் இக்கலாசாலை ஓர் இசைப் பல்கலைக் கழகமாக அமைய வேண்டுமென்பது எமது விருப்பாகும்.

இக்கலாசாலையில் கற்றுத் தேறிய பலர் இசையாசிரியர்களாகப் பதவி வகித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். ரஸிக ரஞ்சன சபா தனக்கென ஒரு சிறந்த கட்டிடம் அமைத்து இப்பணிகளை வெற்றிகரமாகச் செய்து வருவது போற்றத்தக்கதாகும். இக்கட்டிடத்துக்கு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைத் தலைவர் திரு. த. முத்துசாமிப்பிள்ளை அத்திவார மிட்டுள்ளதையும் வெள்ளி விழாச் சரித்திரம் நமக்குத் தெரிவிக்கின்றது.

தற்போது திரு. இ. செ. மன்மதராயன், ஜே. பி. அவர்கள் தலைமையில் இயங்கிவரும் இச்சபா பல்லாண்டுகாலம் நற்பணியாற்றி நாட்டுக்கு நன்மை பயப்பதாகுக.

யாழ்ப்பாணம்
16-4-76

சட்டத்தரணி த. சோமசுந்தரம்
தலைவர்
சைவபரிபாலனசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தபால் தந்தி அமைச்சர்
## அவர்களின்
## ஆசிச் செய்தி

கடந்த இருபத்தைந்து ஆண்டு காலமாக யாழ்நகரில் இசைக்கலை வளர்ச்சிக்காகவென ஆரம்பிக்கப்பட்டு, இன்று வரை கலை வளர்ச்சியினையே உயிர் மூச்சாகக் கொண்டு இன, மத, மற்றும் இளம் கலைஞர் முது கலைஞர், புதுமை பழைமை என்ற எந்த வேறுபாடுமின்றி இயங்கிவரும் யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபா தனது 25 ஆண்டு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இசைத்துறையில் விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்தும்பணியில் வருடாவருடம் இசை விழாக்களை நடத்திவரும் இச்சபா பல்லாண்டுகாலம் சிறப்புறச் சேவை செய்ய எனது அன்புகனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செ. குமாரசூரியர்
*தபால் தந்தி அமைச்சர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from The Government Agent, Jaffna

It is gratifying to note that the Yarlpana Rasikha Ranjana Sabha has continuously served the music world for a long period both by holding classes in instrumental and vocal music as well as by conducting annual festivals of Carnatic Music. This year has seen the completion of twenty-five years of such service. It is indeed a creditable record for any organisation.

I understand that the classes conducted by the Sabha are very popular, and a large number of students is annually trained, at moderate cost to the trainee.

Let me wish the Rasikha Ranjana Sabha of Jaffna all the best and many more years in the service of the community.

**W. A. L. Wijayapala**
Government Agent, Jaffna District

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from
## The Hon. Minister of
## Information & Broadcasting

I am pleased to observe that the Jaffna Rasika Ranchana Sabha has fulfilled its aims and objects during the long period of 24 years of its existence and with the birth of the Sinhala and Tamil New Year in April 1976, the Sabha will celebrate its Silver Jubilee Celebrations.

The promotion of musical education is one of the main objects of the Jaffna Rasika Ranchana Sabha. Music, as we all know, is the best entertainer at all times for human beings, whether in times of prosperity or in adversity. Just as music makes no difference in caste or creed, it makes no difference too in society or in politics.

I am really happy as Minister in charge of Information and Broadcasting in this country, to note that the Sabha has been able to conduct classes for more than 250 students hailing from families both rich and poor, without the least expense to the students themselves.

I therefore take this opportunity to congratulate the Jaffna Rasika Ranchana Sabha on the occasion of its Silver Jubilee Celebrations and the Board of Trustees of the music school in particular, for its devoted service to this country for the last 25 years.

**R. S. Perera**
**Minister of Information and Broadcasting**

246406

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச் செய்தி

யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபா சென்ற 25 ஆண்டுகளாக அரும்பெரும் பணியாற்றியுள்ளது. கல்வியில் கலை உயர்ந்த இடம் பெற்றால்தான் மாணவரின் ஆளுமை செப்பமாக உருவாக்கப்படும். இச்சபை ஆற்றிய தொண்டிற்கு நன்றி தெரிவித்து, வருங்காலத்தில் இச்சபை இன்னும் அதிகமான முறையில் தொண்டாற்ற வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

சே. தனிநாயகம்
பேராசிரியர், வணக்கத்துக்குரிய பிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே"

நமது ஈழத் திருநாட்டில் இசையை வளர்ப்பதே தமது தொண்டாகப் பல சங்கங்கள் தோன்றி நடைபெற்று வருகின்றன. தமிழிசை வளர்ப்பவர்களும், வித்வான்களும், இளம் கலைஞர்களும், தத்தமக்கென இசை வளர்ச்சியே நோக்கமாகச் சங்கங்களை உருவாக்கி உள்ளனர். ஆனால் ரசிகர்கட்கெனப் பெயர் தாங்கிய ஒரு சபை யாழ் ரசிக ரஞ்சன சபா. இதைப் பல ரசிகர்கள் வித்வான்கள் இணைந்து உருவாக்கியுள்ளனர். இச்சபை உருவாக்கியவர்களில் குறிப்பிடத்தக்கவர் திரு. K. V. தம்பு அவர்கள். அவர் சிறந்த சங்கீத வித்வத்துடன் ரசிகத்தன்மையும் உடையவர். அவரை இம்முறை நடைபெறும் விழாவில் கௌரவிப்பது, சபைக்கே ஒரு கௌரவம். யாழ்நகரில் மிகப் பழமையான சபையென்றால் மிகையாகாது. அத்துடன் நீண்டகாலம் இசைவிழாக்களை இடையீடின்றி நடத்திய பெருமை இச்சபையின் தனிச் சிறப்பு: வெள்ளி விழாக் காணும் இச்சபையின் சாதனைகள் பாராட்டப்படவேண்டியதே.

ஸ்ரீலஸ்ரீ பரமாசார்ய ஸ்வாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்துறைத் தலைவர்
## பேராசிரியர்
## அவர்களின்
## ஆசிச் செய்தி

உலகப் புகழ்பெற்ற சிறந்த கலைச்செல்வம் படைத்த இனம் தமிழ் இனம். பிரான்சு தேசத்திலே, பாரிஸ் பொன்னகரிலே, நடராஜச் சிலை அமைந்திருக்கின்றது. இங்கிலாந்திலே, பிரித்தானிய நூதனசாலையிலே, பழந்தமிழரின் யாழ் இன்றும் காட்சியளிக்கின்றது. உலகின் எம் மூலைக்குச் சென்றாலும் உலகப் பொதுமறையாம் திருக்குறள் கண்ணைக் கவருகின்றது. அமெரிக்காவிலே, பிலடெல்பியா நகரிலே, பிள்ளையார் உருவம் இருக்கின்றது. அத்தேசத்திலே, வாசிங்டன் நகரிலே, அங்குள்ள கிராமியக் கலைநூல் நிலையத்தில், மட்டக்களப்பு நாட்டுக்கூத்துக்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டுப் பெருஞ் செல்வங்களாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தமிழரின் கலைச் சின்னங்களையும் கலைப் பாதிப்பையும் உலகெங்கும் நாம் காணலாம். ஓர் இனத்திற்குப் புகழையும் பெருமையையும் மதிப்பையும் தேடிக்கொடுப்பன கலைகளே. இவ்வகையிற் கடந்த 25 ஆண்டுகளாக யாழ் ரசிக ரஞ்சன சபா இசைக்கலையைப் பேணி வளர்த்து, தமிழ் இனத்திற்குப் புகழைக் கொடுத்திருக்கின்றது. இச் சபா நடத்தும் வகுப்புக்களில் வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், நடனம், வீணை ஆகிய துறைகளிலே பயிற்சி அளிக்கப்படுகின்றது. சாதி சமய வேறுபாடின்றி இக் கல்லூரி பல இசைக் கலைஞரை உருவாக்கியுள்ளது.

மங்கலமான வெள்ளி விழா யாழ் ரசிக ரஞ்சன சபாவின் இருபத்தைந்தாண்டுப் பணியினைக் குறிக்கும் நற்பெரும் விழாவாகும். இச் சபாவின் தொண்டு மென்மேலும் வளர்ந்து நற்பயனுற வாழ்த்துகின்றோம்.

சு. வித்தியானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனிதப் பண்பியல் பீடாதிபதி
இலங்கைப் பல்கலைக் கழகம்
யாழ்ப்பாண வளாகம்

# பேராசிரியர்

அவர்களின்

# ஆசிச் செய்தி

இருபத்தைந்து ஆண்டுகளாக எந்த ஒரு நிறுவனத்தையும் நடத்திவருவது என்பது இலகுவான செயலன்று. யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபா இவ்வளவு நீண்ட காலமாக இயங்கி வருவதையிட்டு இன்புறுவதுடன், இன்னும் பல்லாண்டு சிறப்புறச் சேவை செய்து இந் நிறுவனம் வளரவேண்டும் என வாழ்த்தவும் விரும்புகிறேன்.

இருபதாம் நூற்றாண்டில் மனித இனம் பல துறைகளிலே முன்னேறியிருக்கும்போது, எந்த ஒரு மக்கட் சமூகமும் என்ன பங்களிப்பினை உலக நாகரிகத்துக்குச் செய்துள்ளது என்பதை வைத்தே அதனைப் பிறர் மதிக்கின்றனர். எம்மைப் பொறுத்த மட்டிலே, எவ்வளவுதான் திறம்பட நாம் விஞ்ஞானத்தைக் கற்கின்றோம் எனப் பெயர் பெற்றாலும் விஞ்ஞானத் துறைகளிலே முக்கிய தொண்டுகளைச் செய்து விஞ்ஞான அறிவை வளர்ப்பதற்கு நாம் உதவும்வரை விஞ்ஞானத்துறைகளைப் பொறுத்த மட்டில் நாம் உலக நாகரிகத்துக்குப் பங்களிப்புகளை வழங்குகின்றோம் என்று சொல்லிக்கொள்ள முடியாது. அத்தகைய பங்களிப்பினைச் செய்வதற்கு எமக்கு வசதியும் போதாது. ஆனால், வேறு துறைகளிலே நாம் தனித்துவமான பங்களிப்பினைத் தர வல்லோராய் உள்ளோம். அவைதான் கலைத்துறைகள். தமிழரைப் பொறுத்தமட்டில் உலக நாகரிகத்துக்கு என்ன பங்களிப்பினைச் செய்துள்ளனர் என்று யாராவது கேட்டால், அது இசைத்துறையிலும் நடனத்துறையிலும் பிற நுண்கலைத் துறைகளிலும் அவர்கள் ஈட்டிய சாதனை என்று கூறலாம். கர்நாடக சங்கீதத்தையும் பரத நாட்டியத்தையும் அவர்கள் வளர்த்துக் கொடுத்துள்ளனர். நவீன உலகிலும் தொடர்ந்து இத்துறைகளிலே தொண்டாற்றக்கூடிய நிலையில் நாம் உள்ளோம்.

அதுமட்டுமல்லாது, இலங்கைத் தமிழர் இத்துறைகளுள் தமக்கெனத் தனித்துவமான சில பண்புகளை வளர்த்து உதவக் கூடிய நிலையில் உள்ளனர். தமிழ் மொழிக்குள் இலங்கைத் தமிழ் எவ்வாறு தனித்துவத்துடன் விளங்குகின்றதோ, அதேபோல, கர்நாடக இசை போன்ற கலைத்துறைகளுள்ளும் தனித்துவப் பண்புகளை வளர்த்து, இவற்றை எம்முடைய பங்களிப்பாகக் கொடுக்கக் கூடிய நிலையில் இருக்கின்றோம். இது தொடர்பாகத்தான் ரஸிக ரஞ்சன சபா போன்ற நிறுவனங்கள் தொண்டாற்ற முயலவேண்டும். அப்பொழுதுதான் பிறரும் எம்மை மதிக்கத்தக்க வகையிலே நாம் பெருமையுடன் வாழலாம்.

*

கா. இந்திரபாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பாம்புரம்
## இசைத்துறைத் தலைவர்
## சங்கீத ஜோதி
### அவர்களின்
## ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் ரசிக ரஞ்சன சபா செய்யும் தொண்டுகளைப் பற்றி இச் சபைத் தலைவராகிய R. C. மன்மதராயன் அவர்கள் மூலம் அறிந்து மிக மகிழ்ச்சியடைந்தேன். 1952-ம் ஆண்டு தோன்றிய இச்சபா கடந்த 24 ஆண்டுகளாக இசைக்கும் தமிழுக்கும் தொண்டு ஆற்றி வருகின்றதென்பதையும் அடுத்த ஆண்டு சித்திரை மாதம் இச் சபையின் வெள்ளிவிழா நடைபெற இருக்கின்றது என்பதையும் ஈழத்தின் முதன்முதல் இசை விழா நடத்திய பெருமை இச் சபைக்கே உரியது என்பதையும் அறிந்து கழி பேருவகை கொண்டேன்.

வருடந்தோறும் இச்சபை இசைவிழா நடத்துவதோடு நின்றுவிடாது மேலும் இசை வளர்ச்சிக்காக 1962-ம் ஆண்டு ஒரு இசைக் கல்லூரியையும் தொடங்கியுள்ளது என்பதும் அக்கல்லூரியில் பயின்ற மாணவர்களிற் சிலர் அண்ணமலைப் பல்கலைக் கழகத்து இசைக் கல்லூரியில் எங்களிடமும் சென்னையில் அடையாறு போன்ற இசைக் கல்லூரிகளிலும் இசை பயின்று தம் நாடு சென்று இசைக்குத் தொண்டாற்றி வருகின்றார்கள் என்பதும் ஆகிய இவைகள் இச் சபையின் இசைக் கல்லூரிச் சிறப்பை விளக்கப்போதுமானவை. மேலும் இச் சபை வளர்ச்சி அடைந்து விளங்க இதனை நடத்துகின்றவர்களுக்கும் பயிலும் மாணவர்களுக்கும் மற்றும் தொடர்புடையவர்களுக்கும் இவ் வெள்ளி விழாவில் என்னுடைய நல்லாசி உரியதாகுக.

N. சிவசுப்பிரமணியபிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி

யாழ்ப்பாண ரசிக ரஞ்சன சபா இவ்வாண்டு தனது வெள்ளி விழாவைக் கொண்டாடுகின்றது என்று அறிகிறேன். இவ் விழாவை ஒட்டி இச் சபா ஒரு மலரை வெளியிடுகின்றது என்றும் அறிகிறேன். இம் மலருக்கு எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ் மக்களுக்குப் பெருமை கொடுக்கும் பாரம்பரிய சொத்துக்களில் எமது இசையும் ஒன்று. அதை இந்த நாட்டில் மக்களிடையே பரப்பி வளரச் செய்துவரும் சபாக்களில் யாழ்ப்பாண ரசிக ரஞ்சன சபாவும் ஒன்று. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக எமது பெருமை வாய்ந்த இசையைப் பல மாணவர்களுக்குப் பயிற்றுவித்துச் சேவை செய்துவரும் இச் சபா மேலும் தனது சேவையைத் தொடர்ந்து செய்துவர வாழ்த்துகிறேன்.

சா. ஜே. வே. செல்வநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம்
## மேல் நீதிமன்ற நீதியரசர்
### அவர்களின்
## ஆசிச் செய்தி

கலையும், கலாச்சாரமும் ஒரு சமூகத்தின் உயிர்நாடி. அச் சமூகத்தின் வளர்ச்சியையும், தளர்ச்சியையும் ஓர் முகக் கண்ணாடி போன்று அவை சித்தரித்துக் காட்டுவதுமன்றி, பின்வரும் சந்ததியினர்க்கும் ஒரு எடுத்துக் காட்டாகவும் இருக்கும். ஆனால் இவை அந்தச் சமூகத்தின் ஆத்மீகப் பெறுமதிகளுக்கு அமைய வளர்ந்தால் தான் அந்தச் சமூகமும் சிறப்புறும். மத, கலாச்சார கொள்கைகளுக்கு மாறுபாடாகத் திரும்பினால் தற்பொழுது மேற்கு நாடுகளில் காணக்கூடியது போன்று சீர்கெட்ட ஒரு நிலை உருவாகிவிடும். எனவே, ஒவ்வொரு சமூகமும் தமது கலையையும், கலாச்சாரத்தையும் வளர்ப்பதற்கு முயற்சி எடுக்கும்போது, கொள்கைகளின் அடிப்படையிலேயே அவையை வளர்ப்பதற்கு முயற்சிக்கவேண்டும்.

தமிழ் சமூகத்தினரின் வளர்ச்சிக்கு மேற்கூறிய குறிக்கோள்களை மையமாக அமைத்து யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபா உழைத்து வந்திருப்பதையும், உழைத்து வருவதையும் இச்சபையின் வளர்ச்சியும், மக்களிடையே இச் சபைக்குக் கிடைக்கும் நன்மதிப்பும் சான்றாக இருக்கின்றன. இப்பணியிலே இருபத்தைந்து ஆண்டுகள் சேவை செய்த இச்சபையின் அருந்தொண்டை நான் பாராட்டுகின்றேன்.

எம். எம். அப்துல் காதிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு
கூட்டுறவு உதவி ஆணையாளர்
மட்டக்களப்பு
சங்கீத சபாவின் பஞ்சாயத்து உறுப்பினர்
அவர்களின்

## ஆசிச் செய்தி

யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாவின் வெள்ளி விழாவிற்கு எனது மன மார்ந்த ஆசிகளைப் பெருமகிழ்ச்சியடன் அனுப்புகிறேன். அண்மையில் மட்டக் களப்பு சங்கீத சபாவின் வேண்டுகோளுக்கு இணங்க ஒரு சிறந்த கலைஞரை இவ்விடம் அனுப்பி மட்டக்களப்பு ரசிகர்களை மகிழ வைத்த யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாவின் சிறந்த சேவைகளை நாம் பாராட்டுகிறோம்.

இசையையும், நடனத்தையும் இப்பகுதியிலும் வளர்க்க வேண்டுமென்ற ஆவல் கொண்ட நாம் மீண்டும் மீண்டும் யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாவுடன் நெருங்கிப் பழகி, அவர்களின் கலைஞர்களையும், அனுபவங்களையும், புத்திமதி களையும் கேட்க நாடுகிறோம்.

இவர்கள் எங்களுக்குத் தந்த உற்சாகத்தால் இதுவரையும் அறிந்திராத பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் கூட கலாச்சார நிகழ்ச்சிகளைத் திறமாக நடத்தி ரசிகப் பெருமக்களை மகிழ்வித்தனர்.

இசையையும், கலையையும் ஊக்குவித்து வரும் யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபா மென்மேலும் சிறந்த முன்னேற்றம் அடைந்து இலங்கையில் எல்லாப் பாகத்துக்கும் ஒரு வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்று தியானிக்கின்றேன்.

வணக்கம்

ச. ஞானப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
தமிழ்ச் சேவை ஒன்று

## உதவிப் பணிப்பாளர்

அவர்களின்

## ஆசிச் செய்தி

எமது ஈழத்திருநாட்டில் இசைத்தொண்டு புரிந்துவரும் யாழ்ப்பாண ரசிக ரஞ்சன சபா வெள்ளிவிழாக் கொண்டாட விருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேம். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இத்தாபனம் ஈழத்தின் இசைக்கலையின் அபிவிருத்திக்காகச் சிறந்த தொண்டாற்றி வருகிறது. இச் சபா நடத்தும் இசைக்கல்லூரியும், இசை விழாக்களும் இத்துறையில் பெரிதும் உதவியுள்ளன. இசைக்கலையை வளர்ப்பதில் இச்சபாவின் சேவை மென்மேலும் சிறப்புற்று விளங்க ஏழிசையாய் இசைப்பயனாய் நின்ற இறைவனை வேண்டுகிறேன்.

செ. வி. இராஜசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
விசேட ஆணையாளர்
அவர்களின்

## ஆசிச் செய்தி

யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாவின் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்களை முன்னிட்டு ஒரு சிறப்பு மலர் வெளியிடுவது மிகவும் பொருத்தமானதே. ஆகவே, இச்சபா வெள்ளி விழா மலருக்கு ஆசிச் செய்தி விடுப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.


யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாவினர் கடந்த 25 ஆண்டுகளாக ஆற்றிவரும் பணி நாடறிந்தவை - ஏடறிந்தவை. தனது சேவை காரணமாக இச்சபா யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கை பூராவும் தனக்கென ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது என்பதை மக்கள் அறிவர். இச்சபாவினர் ஆற்றிவரும் பணி மேலும் வளர எனது மனமார்ந்த நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

" என்கடன் பணிசெய்து கிடப்பதே " என்ற முதுமொழிக்கு இணங்க இச்சபாவினர் ஆற்றிவரும் பணி அளப்பரியது. இசைக் கலை, நடனக்கலை முதலியனவற்றின் வளர்ச்சிக்கு அயராது தொண்டு செய்து வருகின்றனர். இவர்களது முயற்சிகள் தெய்வீகத் தன்மையோடு கலந்து பார்ப்பவர் கண்களையும் - மனத்தையும் காந்தம் போல் கவரும் தன்மை வாய்ந்தவை.

சைவமும், தமிழும், கலையும் வளர அயராது பாடுபட்டு, பணிபுரிந்து வரும் யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாவின் முயற்சி பெருமுயற்சியாகி வெற்றி பெறவும், வெள்ளிவிழாக் கொண்டாட்டம் சிறப்பாக இனிது நிறைவேறவும் எனது அன்பு நிறைந்த ஆசிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வே. நடராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாவின்

# பிறப்பும் பெருமையும்

"பன்னைமூலை" டாக்டர் ந. சுப்பிரமணியம்
M. B. B. S., F. R. C. S., F. R. C. S. E.
அரசினர் வைத்தியசாலை, கண்டி.

வெண்பா

ஐம்பத் திரண்டாமாண் டன்பர் அவனியிலே
இன்ப இசைவிளக்கை ஏற்றிடவும் — ஐம்புலனுக்
கின்பங் கொடுத்திடவும் இச்சபையை வாணியவள்
மென்பதத்தில் வைத்தார் விழைந்து. 1

விருத்தம்

இலங்கையில் முதலில் நல்ல
　　இசைவிழா எடுத்துச் சால
இலங்கிய மன்றம் என்றால்
　　ரஸிகரஞ் சனச பாவே!
பலபல வருட மாகப்
　　பண்ணொடு நடன மெல்லாங்
கலப்பிலா தளித்து நம்மைக்
　　களிப்பினி லாழ்த்தி னரே! 2

வேறு

தாரணியில் இரசிகரஞ் சனச பாவைத்
　　தானவர்க்குத் தந்தாரைம் பத்தி ரண்டில்.
பேருற்ற சபையாகப் பிறரும் மெச்சப்
　　பெருமையுறும் இசைவிழாப் பலவுந் தந்தார்.
சீருற்றுச் சிறப்புற்றுத் திகழச் செய்யத்
　　திவ்வியதோர் சங்கீதக் கலைக் கல்லூரி
பாரிலுளார் அறுபத்தி யிரண்டாம் ஆண்டிற்
　　பரதமொடு பண்ணிசையும் பயிலத் தந்தார். 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

அரசடிப் பிள்ளை யாரின்
அதிபர்கள் நிலத்தை யீய,
அரும்பெரும் அறுபத் தெட்டாம்
ஆண்டினில் மாசித் திங்கள்
அருள்பெறும் இருபத் தொன்றில்
அத்திவா ரக்கல் தன்னைப்
பெருதிரு முத்து சாமிப்
பிள்ளையும் நாட்டி னாரே. 4

எழுபத்தி யிரண்டின் ஏப்றில்
இருபத்தொன் பதாம்நா ளன்று
விழுமிய பெரியோர் கூடி
விலையுயர் மண்ட பத்தைக்
குழவிபோல் ஈன்றார், அன்று
கொட்டிடக் குழல்கள் மேளம்
அழகுறச் சபாவை அஞ்சல்
அமைச்சருந் திறந்திட் டாரே. 5

வேறு

மக்களிடம் இசைக்கலையை வளரச் செய்ய
வளமான மன்றங்கள் சபாக்கள் தோன்றித்
திக்கெல்லாம் மரம்போலக் கிளைகள் சேரச்
சீராக வேரூன்றிச் சிறக்கும் நேரம்,
தக்கபுகழ் இரசிகரஞ் சனசபாவுந்
தளிர்விட்டு மலர்பூத்துக் கனிகள் தொங்க
இக்கரையில் யாழ்ப்பாண ரசிகர் யார்க்கும்
இசைபொழிந்தும் எழில்கொழித்தும் இருக்கின் றாளே!

இவளுடைய கனிகளது விதைகள் எல்லாம்
இசைக்கன்றாய் வளர்ந்துவர இறையை வேண்டி,
அவனியிலே இசையொளிகள் அணையா வண்ணம்
அனைவருமே ஒருமனதாய் அவளுக் கூக்கந்
தவறாது கொடுத்துதவுந் தருணம் இஃதே!
தாரணியோர் தலைநிமிருந் தருணம் இஃதே!
தவமிருந்துங் கிடையாத தலைவன் பாதந்
தமிழிசையாற் கிடைத்துவிடுந் தருணம் இஃதே! 7

அலைகுமுறும் அறுபத்து நான்கு சான்ற
அருங்கலையின் அழகுசால் இசைக ளோங்க,
கலையிசையைச் சிறப்பிக்கக் காதல் கொண்டோர்
காலமெலாம் பெருகிநறுஞ் சேவை செய்ய,
விலைமதிக்க முடியாத வீறு கொண்ட
மேன்மையுறும் இரசிகரஞ் சனசபாவைக்
கலைமகளுக் கற்பணித்தே இருபத் தைந்தாங்
கலைவிழா இன்றளித்துக் களிக்கின் றாரே! 8

வெள்ளி விழா வெற்றி யடைக!!

*

246406
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு சங்கீத சபா
## பஞ்சாயத்து உறுப்பினர்
## அவர்கள் வழங்கிய
# ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபாவின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா, வெள்ளி விழாவாகக் கொண்டாடுவதை மட்டக்களப்புச் சங்கீத சபா மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது. வெள்ளிவிழாச் சிறப்பு மலர் வெளிவருவதறிந்து மிக்க மகிழ்ச்சி. ஈழத்திரு நாட்டில் இசை வளர்ச்சிக்காக இருபத்தைந்து ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் ரஸிக ரஞ்சன சபாவின் சேவை மேலும் தொடர்ந்து வீறுநடை போட்டு, மக்களின் காதுகளில் இசை மயமாக ரீங்காரமிட்டு, நாதவெள்ளம் பெருக மட்டக்களப்புச் சங்கீத சபாவின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

என். இராஜு (சங்கீதபூஷணம்)
பி. ரி. அரசன், (ஜே. பி.)
கே. ஜெயராஜா
திருமதி கௌரி இரத்தினசிங்கம்
எஸ். ஞானப்பிரகாசம் எஸ்.எல்.ஏ எஸ்
பஞ்சாயத்து உறுப்பினர்,
மட்டக்களப்பு சங்கீத சபா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கள் போஷகர் அவர்களின் ஆசியுரை

மாபெரும் ஆங்கிலக் கலைஞர் சேக்ஸ்பியரின் வாக்கின்படி சங்கீத ஞானம் அற்றவன் மிருகத் தன்மையிலிருந்து மிதந்தவனல்ல. அதற்கிணங்க இப்போ இருபத்தைந்து வருட காலமாக இச் சபாக் குழுவினர் சங்கீதக் கலையையும் எங்கள் கலாச்சாரத்தையும் வளர்க்க வேண்டுமென்று முனைந்து இச்சபையை ஸ்தாபித்தனர்.

வருடா வருடம் தவறாமல் இசைவிழாக்களை மாத்திரம் நடத்தினதோடு நில்லாமல் 1962-ம் ஆண்டில் ஓர் இசைக் கல்லூரியையும் ஸ்தாபித்து நடத்தி வருகிறார்கள்.

அதில் சங்கீதம் பயின்றுவரும் குழந்தைகளுக்கு அவரவர்க்கு ஏற்றவாறு எல்லாச் சங்கீதத் துறையிலும் பயிற்றப்பட்டு வருகிறது. எத்தனையோ மாணவிகள் இங்கு பயின்று சங்கீத டிப்பிளோமாவும் எடுத்திருக்கிறார்கள்.

இந்தச் சங்கீதக் கலையை வளர்க்க வேண்டுமென்று அபிமானிகள் ஒன்று சேர்ந்து நேரத்தையும் காலத்தையும் இதற்காகவே பயன்படுத்துகின்றார்கள். இதற்கு ஆரம்பகாலம் தொடக்கம் காரியதரிசியாகவும், தனாதிகாரியாகவும் இருந்து வருந்தி உழைத்தவர்களை நாங்கள் பாராட்டாமல் இருக்க முடியாது.

இப்படி தன் நயம் விரும்பாது இயங்கும் ஸ்தாபனங்களில் பூசல்கள் வரவும் கூடும். இவற்றைத் தவிர்த்து நடக்க வேண்டுமென்பதை உணர்ந்து இச்சபாவின் போஷகர் பதவியை ஏற்றுக்கொண்டேன்.

இச்சபை மென்மேலும் வளர்ந்து தமிழ் மக்களுக்கு சங்கீத ஞானம் வளர வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்து இந்த ஆசியுரையை வழங்குகிறேன்.

வழக்கறிஞர் க. செ. சோமசேகரம் J. P., U. M.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கள் தலைவர்
## அவர்களின்
# ஆசிச் செய்தி

இசையின் இனிமையால் இறைவனையும் நம்வயப்படுத்தலாம். சமய குரவர்கள் அருட்பாடல் இசையால் இறைவன் அருள் பெற்றனர். "தமிழோடு இசைபாடல் மறந் தறியேன்" என்கின்றார் அப்பர் சுவாமிகள். முத்தமிழில் இசைத்தமிழ் நடுநின்று தமிழைச் சிறப்பிக்கின்றது. இசையின் பெருமை அளவிடற்கரியதாகும்.

யாழ் இசைத்துப் பண் பாடிய பாணனுக்குப் பரிசாக அளிக்கப்பெற்றது யாழ்ப்பாண நாடு. யாழ்ப்பாணன் வாழ்ந்த நாடு இசை மிளிர்ந்த நாடாகவே இன்னும் நிலவுகின்றது. பாணன் வதிந்த வண்ணை நகரிலே யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபா தோன்றி வெள்ளிவிழாக் கொண்டாடுவது போற்றத்தக்கதாகும்.

1-2-52ல் ஆரம்பிக்கப்பெற்ற இச் சபா ஈழநாட்டின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள இசைக்கலைஞர்களையும் ஒன்றிணைத்து இசைவிழாவைத் தொடர்ந்து நடத்திவருவது மகிழ்ச்சிக்குரிய தாகும்.

1962-ம் ஆண்டு சங்கீதக் கல்லூரியை ஸ்தாபித்து நடத்திவருகின்றது. 14 ஆசிரியர்களும் 25 மாணவர்களும் இக் கலாசாலையில் உளர். இக் கலாசாலை நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து நாட்டுக்கு நற்பயனளித்து வருவது போற்றுதற்குரியதாகும்.

யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபா இசைவிழாக்களை ஆண்டுதோறும் தற்காலிகப் பந்தலில் நடாத்திவந்தது. 1965-ம் ஆண்டு நான் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டேன். இச் சபாவுக்கு நிலையான மண்டபம் அமைக்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து பெரியார்களின் உதவிபெற்று வண்ணை அரசடி விநாயகர் ஆலய பரிபாலகர் ஒத்துழைப்புடன் அக் காணியில் பெரும் பணச் செலவில் ஒரு மண்டபம் அமைக்கப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மண்டபத்துக்குச் சைவபரிபாலன சபைத் தலைவர் திரு. த. முத்து சாமிப்பிள்ளை அவர்களால் 21-2-1968ல் அத்திவாரக்கல் நாட்டப்பெற்றது.

இம் மண்டபத்தைக் கௌரவ அஞ்சல் தொலைபேசி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் அவர்கள் 29-4-72ல் திறந்து வைத்தனர்.

எமது இசைக் கல்லூரி மென்மேலும் வளர்ந்து ஓர் இசைப்பல்கலைக் கழகத்தை ஆக்கவேண்டுமென்பது பெருவிருப்பாகும். கடந்த *11* ஆண்டுகளாக நான் தலைவராக இருந்து பணி ஆற்றுவதற்கு மிக்க ஊக்கமளித்தவர்கள் நிர்வாக சபையாரே. மற்றும் பொருளுதவி யளித்து உதவிசெய்த பெரியார்களுக்கு எனது நன்றிக் கடனைச் செலுத்துகின்றேன்.

இச் சபா ஆரம்பமாகி இவ்வருடத்துடன் 25 ஆண்டுகளாகின்றன. இவ்வாண்டு வெள்ளிவிழாவாகக் கொண்டாடுவதனையிட்டு நாம் பெருமையடைய வேண்டும்.

R. C. மன்மதராயன், ஜே. பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எங்கள் முன்னைநாள் தலைவர்
### அவர்களின்
## ஆசிச் செய்தி

யாழ்ப்பாண ரசிகரஞ்சன சபா கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக வெற்றிகரமாக இயங்கி வருவதையிட்டும் இப்போ தனது வெள்ளி விழாவினைக் கொண்டாடுவதையிட்டும் பெருமகிழ்ச்சி யடைகின்றோம்.

இச் சபா 1952-ம் ஆண்டு மாசி மாதம் 1-ம் திகதி வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலின் முன்றலில் பிரமாண்டமாக அமைக்கப்பெற்ற பந்தலிற் காலஞ்சென்ற திரு. சு. நடேசபிள்ளை, B. A., B. L. அவர்களால் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டதாகும். அவ் விழாவிற் சொற்பொழிவாற்றிய திருமுருக கிருபாநந்த வாரியார் அவர்கள் இச் சபா மேலும் மேலும் வளர்ச்சியுற்றுத் தனது வெள்ளி விழாவினையும், அதன்பின் தனது தங்க விழாவினையும் மிகச் சிறப்பாகக் கொண்டாடக் கூடியதாக வளர்ச்சியுற வேண்டுமென ஆசிமொழிகள் கூறிப் போந்தார். அப் பெரியாரின் ஆசிமொழிகளுக்கமைய இப்போது நாம் வெள்ளி விழாவினைக் கொண்டாடுகின்றோம்.


சபா தனது சேவையைத் திறம்பட ஆற்றியவருடைய பாராட்டையும் பெற்று வருவது கண்கூடு. அது தொண்டாற்றிவரும் இந்த வட்டாரத்தில் தனக்கென ஒரு அழகான மணிமண்டபத்தை யமைத்துத் தனது விழாக்களையும், சங்கீத வகுப்புக்களையும் நடாத்தி வருவதும் அம்மணி மண்டபத்தை யமைத்துத் தனது விழாக்களையும், சங்கீத வகுப்புக்களையும் நடாத்தி வருவதும், அம்மணி மண்டபத்தை மற்றைய பொதுத் தேவைகளுக்கு உபயோகிக்க விடுவதும் பெரியதொரு சேவையாகும்.

மேலே காட்டப்பெற்ற வளர்ச்சிக்குக் காரணமாயிருக்கும் உறுப்பினர்களையும் குறிப்பாக நிருவாக சபை உறுப்பினர்களையும், பணவுதவி செய்த பெருமக்களையும் பெரிதும் பாராட்டுவோமாக.

யாழ்ப்பாண ரசிக ரஞ்சன சபா மேலும் மேலுஞ் சிறப்புற, வளர்ச்சியடைய வேண்டுமென்றும் இவ் வெள்ளி விழாவினைப் போன்று தனது தங்க விழாவினையும் மிக்க சிறப்பாகக் கொண்டாடுவதற்கு அருள்புரிய வேண்டுமென்றும் எல்லாம்வல்ல அரசடி விநாயகப் பெருமானையும் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமானையும் வழுத்துவோமாக.

திரு. து. சீனிவாசகம், B. A.
*முன்னை நாள் தலைவர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் ரஸிக ரஞ்சன சபா சங்கீதக் கல்லூரியின் தர்மகர்த்தா சபையினர்

இடமிருந்து வலம்

திரு. ச. தம்பையா (செயலாளர்), திரு. இ. செ. மன்மதராயன் (தலைவர்), சிவநெறிக் காவலர் திரு. த. முத்துசாமிப்பிள்ளை (போஷகர்), திரு. S. சுப்பிரமணியம், திரு. K. V. தம்பு (தனதிகாரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபா
## சங்கீதக் கல்லூரி ஆசிரியர் குழு



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்):

செல்வி S. கலாநாயகி, திருமதி லீலா ஆறுமுகஐயா (நடன ஆசிரியை),
திருமதி ந. ஜெயலட்சுமி திரு. கா. இராசலிங்கம் (தலைமை ஆசிரியர்),
செல்வி ந. ஸ்ரீரங்கராணி, திருமதி S. அம்பிகை,
செல்வி ச. சிவயோகி (வயலின்).

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்):

திரு. இ. தயாளசிங்கம் (நடன உதவியாளர்), திரு. வே. அம்பலவாணர், (மிருதங்கம்)
திரு. ப. சின்னராசா (மிருதங்கம்), ஸ்ரீ S. சர்வேஸ்வரசர்மா (வயலின்)
திரு. சி. ஆறுமுகம்பிள்ளை (வீணை), திரு. K. இராமநாதன்
திரு. பொ. புஸ்பரத்தினம், திரு. ம. பொன்னம்பலம் (லிகிதர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீதக் கல்லூரி ஐந்தாம் வகுப்பு மாணவர்கள்



வாய்ப்பாட்டு

நாலாம் வகுப்பு மாணவர்கள்



வாய்ப்பாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீதக் கல்லூரி மூன்றும் வகுப்பு மாணவர்கள்



வாய்ப்பாட்டு

இரண்டாம் வகுப்பு மாணவர்கள்



வாய்ப்பாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீதக் கல்லூரி முதலாம் வகுப்பு மாணவர்கள்




வாய்ப்பாட்டு

ஆரம்ப பிரிவு மாணவர்கள்



வாய்ப்பாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சங்கீதக் கல்லூரி நடன வகுப்பு மாணவர்கள்



சங்கீதக் கல்லூரி வயலின் மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கீதக் கல்லூரி மிருதங்க வகுப்பு மாணவர்கள் ஆசிரியருடன்



சங்கீதக் கல்லூரி வீணை மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. K. V. தம்பு (தறைதிகாரி) பாடுகிறார்.
அவரது குருநாதர், சங்கீத வித்துவான், அமரர் புத்துவாட்டி சோமசுந்தரம் அவர்கள் வயலின் வாசிக்கிறார்கள்.
திரு. A. கணேசசர்மா அவர்கள் மிருதங்கமும்,
திரு. க. சுப்பிரமணியம் அவர்கள் கெஞ்சிராவும் வாசிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபாவே!**

**தமிழிசைக்குத் தனித் தொண்டாற்றி**

**இருபத்தைந்தாண்டு வெள்ளிவிழா எடுக்கும் நீ**

**பொன்-வைர விழாக்களையும் பொலிவுடன் கண்டுவாழ்க!**

**"கவியரசர் ஞானம்"**

எண்சீர் விருத்தம்

1. பாப்பாவும் தமிழ்க்கீதம் ஒன்று கேட்டால்
பாடுங்க இன்னொருக்கால் என்று கெஞ்சும்
சாப்பாடு கூடமறந் திசையில் மூழ்கும்
சங்கரனும் தமிழிசைக்கு மனங் கனிந்தான்
மூப்போடு நோயுற்று வாடும் போதும்
முறையான சங்கீதம் இன்ப மூட்டும்
யாழ்ப்பாண ரஸிகரஞ் சனச பாவின்
இனியபணி மலர்ந்துமணங் கமழ்ந்து வாழ்க!

2. எத்தனையோ மன்றங்கள் பிறந்து சின்னாள்
இயங்கியபின் தாமாக மறையக் கண்டோம்
உத்தமனுந் தம்புவுடன் நண்பர் அன்று
உருவாக்கி வைத்தரஞ் சனச பாவாம்
முத்திரையில் இருபத்தைந் தாண்டு சேவை
முயன்றுழைத்து வெள்ளிவிரு தேந்தி நிற்கும்
சித்திரமே பொன்வைர விழாக்கள் கண்டு
தேசமெங்கும் புகழ்ந்தேத்த நீடு வாழி!

3. ஓரறிவுப் பயிர்விலங்கு குழந்தை தெய்வம்
உளமுருக்கும் இசைக்கடிமை யாகு மென்றால்
பாருலகில் அதன்மகிமை பகரப் போமோ?
பாட்டினிமை ஆகா! பேரின்ப மன்றோ?
ஆரமுது வெள்ளி. நிலா வசந்த காலம்
அதிமதுர கானத்தின் அடியிற் றாசி
ஈரமிலா நெஞ்சுருக்கும் பிணியுந் தீர்க்கும்
ரஸிகரஞ் சனசபாவின் தொண்டு வாழ்க!

4. அன்னியரும் தமிழிசைகேட் டாவல் கொண்டார்
ஆனந்தம் முதலான நவர ஸங்கள்
மின்னியெழுந் தாங்காங்கு பொங்க வைக்கும்
வெள்ளிமணிக் குரலிசைத்தேன் பாயும் போது
பொன்னிசைக்கு நிகரான செல்வ முண்டோ?
பூதங்கள் கூடஅடி பணியு மன்றோ?
தன்னிகரில் லாதரஞ் சனச பாவே!
தாய்நாட்டின் இசையிங்கே தழைக்க வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. காப்பாளர் பெருமானும் பிள்ளை யாரும்
கற்பகம்போ லிருக்கையிலே குறையு முண்டோ?
யாழ்ப்பாணம் வண்ணைநகர் மக்கள் செய்த
இனியதவம் விளைந்துதமிழ் ஈழ மெங்கும்
வாய்ப்பாட்டு - மிருதங்கம் - வயலின் - வீணை
மழைபோலும் பொழிந்திசையை வளர்த்து நல்ல
மேய்ப்பாளன் போலிருந்து தொண்டு செய்யும்
மின்னுகலா ரஸிகசபா வாழி! வாழி!!

# இயற்றும் பணிக்கு வணக்கம்

## வித்துவான் சு. சின்னத்தம்பி

வெள்ளி விழாநல்ல வேளையில் வருகுது
வேனிலும் மழை பெய்து குளிருது
துள்ளும் குயில்நன்கு கூவிடும் வேளையும்
தூய மாமலர் தூவிடும் நேரமும்
பள்ளிகள் இன்று படிப்பின்றி இருப்பதும்
பாடகர் பலர் ஓய்வெடுத் திருப்பதும்
கொள்ளை இன்பம் தருகின்ற இன்னிசை
அள்ளிப் பருகிட அனைவர்க்கும் இன்பமே.

தெட்சிண மூர்த்தியைத் தந்தயாழ்ப் பாணத்தில்
தேடுவா ரின்றி இருந்த இசைக்கலை
குப்பிளான் செல்லத் துரையன்று பாடவும்
கோல முருகையன் குழலெடுத் தூதவும்
செப்பவும் வேண்டுமோ சிறுதொகைக் கூட்டமே
சேவை இசைக்கலைக் காகப் புரிந்தவர்
இப்போ இம்மண்ணில் இருந்திடு வாரெனில்
இன்ப உலகினைக் கண்டு களிப்பரே.

பொன்னுன பரமவர்கள் புத்துவாட்டிச் சோமு
கண்ணுகக் காத்து வளர்த்த இசைக்கலை
அன்னுரிடங் கற்ற ஆசையால் இக்கலை
அழியா திருக்கவே அறிந்து அவர்வழி
இந்நாளில் தோன்றிய இசைக்கலை வாணர்கள்
ரசிகரஞ் சனசபா எடுத்து வளர்க்கிருர்
அன்னவர் செய்த ஆண்மைசேர் இப்பணி
பன்னெடுங் காலப் பயிரென வளருமே.

சதிராடும் பெண்களைச் சங்கீதக் காரரை
சற்றேனும் சட்டைசெய் யாதவர்
புதிதாகத் தம்மக்கள் பரதநாட் டியமாடப்
போகின்ரு ரென்று புகலவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயம் பிரமுகர் அனைவரும் கூடிட
    அரங்கேற்றம் செய்கின்ற புதுமையும்
இதுவேளை எங்கணும் மலிந்து வளர்ந்திட
    இசைக்கலை எங்கும் தழைக்குதே.

சின்னமே ளக்காரர் நாதசின் னக்காரர்
    சிறப்பான நாடகத் தொண்டர்கள்
அன்னாளில் இக்கலைக் காற்றினார் சிலதொண்டு
    அறியாது சிலபேர்கள் சிறுமையாய்
கன்னா பின்னாவென்று கத்துகின்றாரென்று
    கருத்தோடு கேளாத நாட்கள் போய்
பொன்னான இசைக்கலை என்றுநாம் போற்றிட
    பொற்காலம் ஒன்றின்று பிறக்குதே.

பொப்பிசை புயலடித் தோய்ந்திடும் வேளையில்
    போற்றும் இசைக்கலை வளர்த்திடும்
தப்பித் தடுமாறிச் சில்லறை மெல்லிசை
    சேர்த்து இசைக்கலை செவ்விதாய்
செப்பிடும் சாஸ்திரச் சங்கீதமே யெங்கள்
    சந்ததிக் கேற்ற இசைக்கலை
எப்பொழுதும் வாழ ரசிக ரஞ்சனசபா
    இயற்றும் பணிக்கு வணக்கமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிவிழா மலர்

ஆசிரியர் குழு

வித்துவான் திரு. சு. சின்னத்தம்பி

திரு. ச. தம்பையா

திரு. S. K. கணேசலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை

கலாநிதி V. இராமகிருஷ்ணன்
மெய்யியல்துறை
பெருந்தலைவர், சங்கீத நாட்டிய சங்கம்
இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை.

இசைவிப்பதும் அல்லது தன்வயப்படுத்துவதும் இசையெனும் பதத்தின் பொருளில் அடங்குமெனக்கொண்டால், அது மனிதனது சிந்தனாசக்தியோடுமட்டுமல்ல அவனது உணர்ச்சியோடும் தொடர்புள்ளது என்பது தெளிவாகும். உணர்ச்சி என்பது வினை அல்லது கன்மத்தின் பிரதான உறுப்பு. இவற்றின் தொகுப்பைக்கொண்டே ஒருவரது குணத்தையும் வாழ்க்கைத் தராதரத்தையும் மதிப்பிடலாம். ஒருவன் தான் வாழும் சமூக இயற்கைச் சுற்றாடலோடு உறவுகொள்ளும்போது மட்டுமே செயல் வாயிலாக இயங்குகின்றான் என்போம். இங்கு ஐம்பொறிகளை துவாரமாகக்கொண்டு இச்சையின் நிமித்தம் பெறும் தரவுகள்மீது விருப்பு அல்லது வெறுப்பு அடிப்படையில் இயங்கும் செயல்முறையைப் பாசமென்று எமது ஞானிகள் கூறுவர். 'வஞ்சப் புலன்' என்பதன் பொருளும் இதுவே. இவ்விதமாக எழும் வேகத்தை கட்டுப்படுத்தி நிறைவுகண்டு இன்புறுவதே வாழ்க்கையின் பிரதான குறிக்கோள் என்பதை அவர்களது வாழ்க்கை வரலாறு எடுத்துக்காட்டும். உணர்ச்சிகளை அடக்கும் முறைகளைக் கையாள்வது (இது பல பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும்), அவற்றை தக்கவழிகளில் பண்படுத்தி மனித உறவுமுறைகளை இன்பமயமாக்குவதில் இசைக்குரிய பங்கு பெருமளவானது. பண்படுத்தப்பட்ட உள்ளங்களை ஆதாரமாகக்கொண்டே இசையின் முக்கியத்துவத்தை நாம் வற்புறுத்தக்கூடியதாக இருக்கின்றது.

இசைக்கு முக்கியமாகிய நாதம், படைப்பு ஏற்பட்டகாலந்தொட்டே உள்ளதென்பதையும் அது எக்காலத்திற்கும் பொதுவானதென்பதையும் எமது பாரம்பரிய தத்துவம் வலியுறுத்தும் பரிணாம வளர்ச்சிக் கொள்கை விளக்குகின்றது. ஆனால் அது சூழலுக்குச் சூழல், நாட்டிற்கு நாடு வெவ்வேறு சம்பிரதாய அடிப்படையில் வளர்ந்து தனித்துவத்தை அடைந்துள்ளது. ஞானிகளது தலைமையில் உட்பொருளை அணுகி அதன் பொருள் அறிந்து வாழ்க்கை இலட்சியங்களைச் சிருஷ்டித்து தமக்கென ஒரு பாரம்பரியத்தை வகுத்த வரலாறும் அதுவே. சுருங்கக்கூறின் ஒரு சமூகத்தில் நிகழும் பெறுமானங்களைப் புரிந்துகொள்ளவேண்டுமானால் பண்படுத்திய நுட்ப அறிவுடையோர் அச்சமூகத்தின் பாடல்களைக்கொண்டும் அவற்றிற்குரிய பண்களைக்கொண்டும் அவற்றினை அறிந்துகொள்ளலாம். தமிழ் மக்கள் மத்தியில் தனித்துவம்பெற்ற கருநாடக இசை வளர்ந்த வரலாறும் இப்பொதுத்தன்மைக்குட்பட்டதாகும். தமது அநாதி சுய உருவமாகிய சிவரூபத்தை அடையும் வண்ணம் இலக்கணவிதிகளுக்கேற்ப ஞானிகள் பரம்பொருள்மீது கொண்ட உணர்ச்சிப் பெருக்கால் இசைவித்ததே குரு சந்தான வழியாகப் பேணிப்பாதுகாத்து முத்தமிழின் நடுநாயகமாகத் திகழ்ந்தது. குழந்தைப் பருவந்தொட்டு சாகும்வரையிலுள்ள வெவ்வேறு கட்டங்களுக்குரிய பாடல்களும், புவியியல் அமைப்பிற்கும் காலம் பொழுதுபோன்றநிலைகளுக்குமுரியபண்களும் அவற்றிற்கேற்ற கருவிகளும் எமது முன்னோர் நமக்கருளிய அரும்பெருஞ் செல்வமாகும். சமூகத்தில் வாழும் மக்கள் மத்தியில் அன்பைப் பெருக்கி ஆருயிரை வளர்க்கும் பணியில் இசை தகுந்த பயிற்சிக் கருவியாகவும் அமைந்தது. எமது பாரம்பரிய சமூக அமைப்பில் இவ்வித கல்விமுறை மறைமுகமாக நின்று பணி புரிந்து மக்கள் மத்தியில் விசேட நற்குணங்களைப் பேணிவந்ததென்பதில் ஐயமில்லை. பக்தி மார்க்கத்தின் வாயிலாக தமிழ் மக்கள் மத்தியில் வேரூன்றிற்று என்றும் உறுதியாகக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் சமீபகாலங்களில் ஏற்பட்ட அரசியல் சமூக மாற்றங்களினால் கல்விக்கு குறுகியதோர் வரைவிலக்கணம் வளங்கப்பட்டு வருகின்றது: எழுத வாசிக்கத் தெரிவதும் சிந்தனைசக்தியை வளர்ப்பதும் மட்டுமே கல்வியின் நோக்கமாகிவிட்டது. நம் மத்தியில் உருவாகிய கலாச்சார சீரழிவினாலும் நான்கு நூற்றாண்டுகளாக தடையின்றி நிகழ்ந்த அந்நிய தாக்கத்தினாலும் ஏற்பட்ட தனியுடமைத் தத்துவத்தின் விளைவு இது. (ஆங்கிலக்) கட்டுரை வரைதலும் கணிதம் பயில்வதுமே கல்வித்துறையில் அடங்கிய பாடத்திட்டத்தின் பிரதான அம்சமாக இருந்து வந்துள்ளதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. உணர்ச்சியைப் பண்படுத்தக்கூடிய ஒழுங்குகள் ஒன்றும் அடங்கவில்லை. இது அந்நிய ஆட்சிக்கு முண்டு கொடுக்குமுகமாக ஒரு சிலரைப் பயிற்றுவித்து கீழ்மட்ட ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்குரிய பயிற்சியாக விருந்ததென்பதை பலர் உணர்வதில்லை, இலங்கையில் இக்கல்விமுறை பெரும்பாலும் (யாழ்ப்பாணத்) தமிழர்களையே பாதித்துள்ளது என்பது திடமானதாகும். எம்மை யந்திரமயமாக்கிய வரலாறும் இதுவே. மேனாட்டு இக்கல்விமுறை மிருகத்தனத்தையே மேலோங்கச் செய்யும் என்பதை எமது தலைசிறந்த ஞானிகளுள் ஒருவராகிய கலாயோகி ஆனந்த குமாரசுவாமி பல கட்டுரைகள் வாயிலாக வலியுறுத்தியுள்ளார். கற்றறிந்தவர் மத்தியில் வற்புறுத்தி கைநீட்டி சீதனம் வாங்கும் வழமையும் மனித உறவுமுறைகளில் ஏற்பட்ட சீர்கேட்டையே குறிக்கும். ஆகவே தான் ஆறுமுகநாவலர், விபுலானந்தர் போன்ற தலைவர்களது கல்விப்பணி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றதெனலாம். அவர்கள் எமது பாரம்பரியத்தைப் பேணிப்பாதுகாக்க முயன்றது, இக்கோணத்தினின்றும் மதிப்பிடும்போது, பெரும்பணியாகவே தென்படுகின்றது.

நாடு சுதந்திரம் அடைந்தபின்பும் இப்போக்கில் அடிப்படை மாற்றங்கள் ஏதேனையும் அவதானிக்கக்கூடியதாக இல்லை. நிருவாகம் மத்தியமயமாக்கப்பட்டதும் எமது தேசியவாதிகள் முயற்சி எடுத்ததன் பயனாக ஏற்பட்ட பிரதேச கலாச்சார தாக்கங்களுக்கு தொடர்ந்தும் இடமளிக்கப்படுமோ என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கின்றது. சீர்திருத்தங்கள் பரிசோதனைவகையாகும் என்று கூறி தொடர்ந்தும் அந்நிய தாக்கங்கள் செல்வாக்குப் பெற்றுவருவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. சுய மொழி போதனைமொழியானதும், கல்வி இலவசமானதும், இதனது தாக்கம் பரவுதலாக முழு 'இளஞ்சந்ததியினரையும் பாதித்துக்கொண்டுவருவதை நாம் காணலாம். திரைப்படம் வானொலி வாயிலாகத் தரப்படும் ஜனரஞ்சகமான இசைமெட்டுகளும் இப்போக்கின் பிரதிபலிப்பென்றே கூறல் வேண்டும்.

இவ்வித தாக்ககங்ளுக்கிடையே யாழ் ரசிகரஞ்சன சபா தளராது நின்று வெள்ளி விழா எடுக்க முயல்வது வியக்கத்தக்கதோர் செயலாகும். பல முட்டுக்கட்டைகளுக்கிடையே இசைப்பயிற்சியளித்து மக்கள் மத்தியில் கலைஞர்களையும் இன்னிசை ரசிகர்களையும் வளர்க்க முயலும் பணி தேசாபிமானச் செயலென்றே கூறவேண்டும். இச்சபை தனது கல்வித் தொண்டினை தொடர்ந்தும் வெற்றிகரமாகச் செய்ய வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ரசிக ரஞ்சன சபா - வெள்ளிவிழா

இசையரசு P. சந்திரசேகரம்
சங்கீதபூஷணம் - இசைமணி Dip. Music

[இச்சபாவின் 25 வது ஆண்டு நிறைவு விழா—வெள்ளிவிழாவாக நடைபெறுகிறது. சங்கீத ஆசிரியர்கள் அனைவரும் நமது நாட்டின் இசை மணிகள். நாம் நமது நாட்டிற்கு உழைக்கவேண்டும். எத்தனை புதிர்கள் இசையுலகில் ஏற்படினும், அவை எல்லையை மீறி வந்தாலும் நாம் முன்னின்றதைச் சமாளித்துச் சலியாது உழைத்து முன்னேற வேண்டும். இந்த இலட்சிய அடிப்படையில் யாழ் ரசிகரஞ்சனசபா நிருவாகிகளினது சலியாத உழைப்பால் இச்சபை 25 ஆண்டுகள் வளர்ந்து, விறுநடை போட்டுக் கொண்டு முன்னேறியுள்ளது. பிறந்த நாட்டிற்குப் பெருமைதேட, நம்நாட்டுச் சங்கீத விற்பன்னர்கள் முன்னேற—நமது வித்துவான்கள் வெற்றிவாகைசூட இச்சபை மேலும் சலியாதுழைக்கவேண்டும். நமது நாட்டு இசைவளமும் தேசியவளமும் கொழிக்க நமதிசைச் சிருர் ஆடிப்பாடி மகிழவேண்டும். இச்சபை இசைக்கல்லூரியில் 300 மாணவ, மாணவிகள் இசை படித்து வருகின்றனர். இலங்கையில் கருநாடக உயரிய சாஸ்திரீய சங்கீதத்திற்கென முதலாரம்பிக்கப்பட்ட இசைக்கல்லூரி இதுவாகும். இக்கல்லூரியின் ஆரம்ப நாட்டொடங்கி இந்நாள்வரை வட இலங்கைச் சங்கீதசபை 6 பிரிவுப் பரீட்சைகட்கும் பெருவாரியான மாணவ, மாணவிகளைப் பயிற்றியனுப்பி நல்ல சித்திகளைப் பெறுவதில் முன்னிற்பது இந்த யாழ்-ரஸிகரஞ்சனசபாவேயாகும்.

இச்சபை வெள்ளிவிழாவை ஒட்டி ''இசைக்கலையின் அடிப்படைத் தத்துவங்கள்'' என்ற தலைப்பில் இக்கட்டுரை உருவாகிறது.]

# இசைக்கலையின் அடிப்படைத் தத்துவங்கள்

இசைக்கலைஞன் தனது அநுபவ முதிர்ச்சியினல் இராகமலர்களைத் தனது கச்சேரியில் கூடை, கூடையாக உதிர்த்துக் கொட்ட வேண்டும். கீர்த்தனைகட்கு ஸ்வரம்பாடும் போதும், ஸ்வரப் பிரஸ்தாரம் ஒரு கோட்டுக்குள் அமையப் பாடுதல் அவசியம். சங்கீதக் கச்சேரியில் பாடகர்கள், மூன்று நாலு மணிநேரம் ஆடாமல் அசையாமல் ஒரே இடத்தில் நிமிர்ந்திருந்து கல்லால நிழலின் கீழுள்ள தட்சிணமூர்த்தியைப் போல் உட்கார்ந்திருக்கவேண்டும். சங்கீத ஆற்றல், பாணி, வித்வத்தன்மை, விறுவிறுப்பு இவையெல்லாம் படிப்படியாக அக்கலைஞனது அயராத சாதனையால் ஏற்படவேண்டும். சங்கீதம் வயதேற ஏறத்தான் நிறைவுபெறும்.

சங்கீத உலகில் அரியாசனத்திலிருந்து செங்கோல் ஓச்சிவாழ்ந்தோர் பலர் இருந்துளர். சங்கீதத்திற்கு பாவம் பிரதானம். பாவம் என்பது சாகித்தியத்தின் பொருளுக்கேற்ப கலைஞன் உணர்ச்சியோடு ராக பாவத்தை இணைத்துப் பாடுதலாகும். சங்கீதப் பாடகரின் குரல் இனிமையாக இருக்க வேண்டும். அத்துடன் பாடும் சங்கீதம் உயர்தரமாக இருக்கவேண்டும். இராகங்களை மனேதர்மத்துடன் இராகபாவம் தோன்றப் பாடவேண்டும். கீர்த்தனைகள் அதற்குரிய காலங்களில் வேண்டிய அளவு சங்கதிகளுடன், அட்சரசுத்தத்துடன் பாடப்பட வேண்டும். பல்லவிஸ்வரங்கள், மிருதங்கம், வயலின், கஞ்சிரா, கடம் ஆவர்த்தனங்கள் கூட அளவுக்குட்பட்டுப் பாடப்பட்டால் ரஸிகர்கட்குக் குதூகலக் களிப்பு ஏற்படும். பாடகரது பாட்டில் பிடிப்பு, அழுத்தம், கமகம், இத்தனையுமிருந்து இதய உணர்ச்சி பொங்கப் பாடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருநாடகசங்கீதத்திற்குப் புத்துயிரளித்தவர் தியாகையர். மகாவைத்திய நாதையரைப் போன்ற ஓர் மகா இசைவித்துவான் இதுவரை பிறக்கவில்லை. கலாட்சேபக் கலைக்காகவே பிறந்தவர் கிருஷ்ணபாகவதர் வயலினுக்காகப் பிறந்தவர் திருக்கோடிக் காவலூரர் கிருஷ்ணையர். 1933ம் ஆண்டிற்குப் பின் சங்கீத உலகில் ஓர் மறுமலர்ச்சி. 1933 ற்கு முன்பும், ஏன் சிலசில கலைஞரிடம் இப்பவும் தான் சங்கீதக் கச்சேரிகளில் அவர்கள் செய்யும் அங்கசேஷ்டைகள் பார்க்கப் பார்க்க நம்மை இறும்பூதெய்தப்பண்ணுவன.

வைரகர்வரதாச்சாரியார், செம்மங்குடி, சித்தூரார் இன்னும் பலர் தங்கள் சங்கீதக் கச்சேரியில் ''ஸ்வரங்களின் மகாயுத்தமே ''செய்வது சகஜம். இவர்களது, நடை உடை, பாவனை எல்லாமே சுத்த கரு நாடக மானது. இவர்கள் வைதிகக் குடுமியுடன், வெள்ளையுடை உடுத்தி தோற்றமளித்தனர். பார்ப்பதற்கு பரமசாதுவாக இருந்தனர். கச்சேரி மேடையில் ஏறி இவர்கள் உட்கார்ந்துவிட்டால் ''அப்பப்பா'' என்ன ஆச்சரியம்; சங்கீத ஸ்வரங்களை பாடிப்பாடி அங்கேயே நில்லு, என்று தங்கள் இரண்டு கைகளாலும் தடுத்து நிறுத்துவர். இன்னொரு சந்தர்ப்பத்தில் ஸ்வரங்களை இங்கேயே, வந்திடு, என்று இரு கைளாலும் அச்சுரங்களை அணைத்துப் பிடித்துத் தலையோடு முட்ட விடுவர். மறுகணம் பேயறைவதுபோல ஒரே அறையாய் ஸ்வரங்களை அறைந்தறைந்து பாடுவர். பின்பு ஸ்வரங்களை உரலில் போட்டு உலக்கையால் இடிப்பதுபோல இடித்து இடித்துப் பாடுவர்; கழுத்தைப் பிடித்து நெட்டுவர். தான் நினைத்தபடி பாடவரவில்லையானல் ''இதோ வேருடன் கல்லி எறிந்து விடுவது போல இரண்டு கையையும் கீழே கொடுத்து வேரைப் பறிப்பித்துப் பாடுவர். இம்மாத்திரமல்ல தாங்கள் உட்கார்ந்திருக்கும் தரையைக் குழிதோண்டி அவற்றுள் ஸ்வரங்களைப் புதைப்பதுபோல சமிக்ஞை செய்வர்; என்றாலும் ஓரளவு அங்கசேஷ்டைகள் சங்கீதக் கச்சேரிக்கு ஜீவசக்தி அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

நமது சங்கீதத்தில் ஒவ்வொரு ராகத்திற்கும் ஒரு தனிப்பட்ட ஸ்வரூபம், அழகான வடிவம், அற்புததோற்றம் இருக்கிறது. நல்ல சாரீரமில்லையாலும் ராகஸ்வரூபத்தைக் காட்டிப் பாடினல் ரஸிகர்கள் பிரமிப்பர். ராகம்பாடும் போது சுருதியோடு குழைந்து பாடவேண்டும்.

குறைந்த சொற்களைக் கொண்ட கீர்த்தனைகளில் தான் ராகபாவம் நிறைந்திருக்கும். இதற்கு இலட்சியமாகத் திகழ்வது தியாகையர் கிருதிகள். சங்கீதமும்மணிகளது சாகித்தியங்கள் சங்கீத யாப்பு நிறைந்த கவிகட்கும், சங்கீத சாகித்தியங்கட்குமுள்ள வித்தியாசத்தை நாம் பார்க்க வேண்டும். யாப்பமைதி நிறைந்த கவிக்கு நல்ல சங்கீதமெட்டு அமைந்துவிட்டால் அதை நாம் சாகித்தியம் என்கிறோம். யாப்பிலக்கணம் கற்றுக் கவிபாடும் புலவரினும் ஒரு படி கூடியவர்கள் சங்கீத சாகித்திய கர்த்தாக்கள். அவ்வரிசையில் தியாகையர், கம்பர் – புகழேந்தி போன்றாரினும் பெருமையுடையோர். தியாகைய்யர் நாயன்மார் கட்கு ஒப்பானவர். சங்கீதமே இராமன், இராமன் தான் சங்கீதம் எனக் கண்டவர் தியாகையர்.

ஆனயநாயனரது புல்லாங்குழலிசை அண்டசராசரங்களையும் தம்வயமிழக்கச் செய்தது. தியாகையரதிசை நம்மனைவரையும் உருகச் செய்கிறது. பாபநாசம் சிவன் தியாகையரது மறுபிறவியென்றும், பேராசிரியர் P. சாம்பமூர்த்தி அவர்கள் புரந்தர தாஸரது மறுபிறவி என்றும் நாம் ஊகித்தறியக் கிடக்கிறது. வால்மீகி இராமாயணத்தில் எத்தனைசுலோகங்கள் உளவோ அத்தனைகீர்த்தனைகளை – உருப்படிகளை தியாகையர் இயற்றிப் பாடினர் என்பது ஆன்றோர் கருத்து.

சங்கீதம் மும்மூர்த்திகள் பரம்பரையில் வந்த இசைமேதைகளே , மகாராஜபுரம், அரியகுடி, செம்மங்குடி, G. N. B மதுரைமணி, சித்தூரார் முசிறி ஆகியோராம்.

சங்கீதம் எழுதாக்கல்வியாகும். குருவின் பின்னல் அவர்தம் நிழல் போலிருந்து குருவுக்குவேண்டிய கடமைகள், பணிவிடைகள் செய்து படியாது படித்துப் படிப்படியாகப் பாண்டித்தியம் பெற்று குருவருளும் பெற்றுத் திகழ்பவரே முறைமையான இசை மேதைகளாகும். பேச்சைக் குறைத்து உணர்ச்சி வயத்தால் உருவாகுவது சங்கீதம். இன்பங்களுட் சிறந்த இன்பம் தருவது இசை. மனிதரஸனை, உணர்விற்குத் தன்னை அர்ப்பணித்தவன் சங்கீதகாரன்.

சங்கீதத்தில் சுருதி லயம் இரண்டும் மனிதஉடலும் உயிரும் போன்றது. உடல், மனம், உயிர் மூன்றும் சேர்ந்து ஒருமைப் பட்ட இடத்தில் தான் சங்கீதம் பரிமளிக்கிறது. சுருதிலயம் சேர்ந்த இடம் மனதிற்கின்பம் தருவது. நமது சாரீரத்தில், இந்த உடலில் சங்கீதம் உருவாகிறது. சங்கீத வித்துவான்கட்கு அவர்களது உடம்பு, சாரீரம் உயிரைக் காட்டிலும் மேம்பட்டது. இன்பமான இந்தச் சங்கீதம் இந்த உடல் மூலம் பெறுகிற அநுபவத்தால் உயர்நிலையை அடைகிறது. உயரிய சங்கீதத்தை தோற்றுவிக்கும் இவ்வுடலை சங்கீதகாரர் நன்கு ஓம்பு தலவசியம். வாக்கியத்தில் வாய்ப்பாட்டிலுள்ள ஆனந்தம் எமக்குக் கிட்டாது. சங்கீதத்தின் ஜீவன் பூரணமாய்ப் பொலிவது வாய்ப்பாட்டில்தான்.

1300 ஆண்டுகட்கு முன் திருமுறை இசை செங்கோலோச்சியது. 16ம்17ம் நூற்றுண்டுகளில் சங்கீதமும்மணிகள இசை செங்கோலோச்சியது. திருமுறைகள் இக் காலத்தைய இசைக்குவேர். சங்கீதமும் மணிகளதிசை இன்று விழுதுகள் பலவிட்டு கொழுத்த ஆலவிருட்சமாகத் திகழ்கிறது. இசைக்கலைஞர்கள் இவ்வுலகில் ஓர் இயக்கம், மறுமலர்ச்சி ஏற்படுத்த வந்தவர்கள்; சமயத்தை, சமூகபழக்க வழக்கங்களை வளம் படுத்த வந்தவர்கள்.

முப்பது வருடங்களுக்கு முன் பொது மக்கள் தங்கள் குடும்பப் பிள்ளைகளுக்கு, ஒருவருக்குத்தானும் இசை படிப்பிக்க வேண்டுமென்ற சிந்தனையே அறவேயில்லாதிருந்து வந்தனர். இசைக்கல்வி தனியொரு சமூகத்தினரது சொந்தச் சொத்தாக அக் காலத்திலிருந்து வந்தது. இன்று நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. இன்னும் சொற்ப காலத்துள் நாதஸ்வரமும், மேளவாத்தியமும்நமது பாடசாலைகளிற் கூட ஒரு பாடமாகப் படிப்பிக்கப்படும் காலம் வந்துவிடும். இனமதபேதமற்ற முறையில் இவ்வாத்தியங்களைப் பயிலும் காலம் நமது பொது மக்களிடையே விரைவில் ஏற்படலாம். யாழ் நல்லூர் இசைச் செல்வன் ஆத்மானந்தன் இதற்குச் சாட்சியமாக விளங்குகிறுர். இச் செல்வன் மேளவாத்தியம் நன்ருக வாசிக்கப் பரிச்சயமுடையர். இவரது மேளவாத்தியப் பயிற்சி நமது மற்றும் பொதுமக்களது பிள்ளைகளுக்கு எடுத்துக் காட்டாகும். புதிய பாதையில் கருநாடக சங்கீதம் காலமாறுதலுக்கேற்ப வளர்ச்சியடைய வேண்டும். ஆயினும் சாஸ்திரீய கருநாடக சங்கீதத்தின் உயர்ரக மரபிற்கு பங்கமேற்படப்படாது.

யாழ் ரஸிகரஞ்சனசபா உயர் சாஸ்திரீய சங்கீதத்திற்குத் தனது இசைக்கல்லூரியின் தரத்தை உயர்த்தி இலங்கையின் இசைக் கலைக்கு வழிகாட்டட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கீத வித்துவான் புத்துவாட்டி சோமசுந்தரமும் அவரது பிரதம சிஷ்யர் திரு. K. V. தம்புவும்

[தா. இராசலிங்கம், சங்கீதபூஷணம்]

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் புத்துவாட்டியார் பரம்பரையில் உதித்த பிரபல சாரந்தா வித்துவான் நாகலிங்கத்தின், மகனுகப் பிரபல வயலின் வித்துவான் புத்துவாட்டி சோமசுந்தரம் அவர்கள் பிறந்தார். இவர் இளமையில் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், சமஸ்கிருதம் முதலிய பாஷைகளைப் படித்தும், வயலின், சாரந்தா, ஆர்மோனியம், புல்லாங்குழல், வீணை, மிருதங்கம் முதலிய வாத்தியங்களை வாசிக்கப் பழகியும் இருந்தார். எனினும் தனக்கென ஓர் பிரதான வாத்தியமாக வயலின் வாசிப்பதையே மேற்கொண்டு, தன் தந்தையாரிடமே இயல் இசை ஞானம் கற்றுத்தேறினுர்.

முருக பக்தி நிறைந்த இவர் முருகன் பெயரில் பல இனிமையான இராக வர்ண மெட்டுக்களில் ஸ்வரஜதி, வர்ணம், கீர்த்தனைகள் போன்றவற்றை இயற்றியுள்ளார். யோகஸ்வாமிகள் சில சமயம் இவர் வீட்டிற்கு வந்து சில பாடல்களை பாடிக் காட்டுவார். அவற்றிற்கும் இவர் அழகான வர்ண மெட்டுக்களை அமைத்துள்ளார். மிக நுட்ப ஸ்வரக்ஞானியான இவர் இசைத் தட்டுக்களில் உள்ள பாட்டுக்களை அவை எவ்வளவு வக்கிரமான, கடினமான சங்கதிகளாய்ப் பாடி இருப்பினும், நுட்பமாக ஸ்வரப்படுத்தித் தன் மாணவர்களுக்கு ஸ்வரசாகித்தியமாய்ப் போதிப்பார்.

அந்நாளில் தாய் நாட்டிலிருந்து அடிக்கடி இலங்கைவரும் சங்கீத வித்துவான்கள் புத்துவாட்டியார் வீட்டிற்கு வந்து இவரின் வயலின் வாசிப்பைக் கேட்டுச் சந்தோஷித்துப் போவர். ஒரு சமயம் பிரபல வைத்தியர் வைரமுத்து என்பவர் நாதஸ்வர வித்துவான்களுக்கு யாழ் சாந்தயர்மடம் பிள்ளையார் கோவிலில் ஓர் போட்டி நடாத்தினுர். அதில் சேவல் சோமநாயனக்காரர், முத்துக்கிருஷ்ண நாயனக்காரர், அண்ணுச்சாமி நாயனக்காரர் போன்ற பல வித்துவான்கள் பங்கு பற்றினுர்கள். அப்போட்டிக்குத் தலைமைதாங்கி மத்தியட்சம் வகிக்கும் பெருமையும் திருவாளர் புத்துவாட்டி சோமசுந்தரம் அவர்களுக்கே கிடைத்தது.

ஒரு சமயம் சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணியபிள்ளை அவர்களும், மிருதங்கம் ராமதாஸ்ராவ் அவர்களும் புத்துவாட்டியார் வீட்டிற்கு வந்தபோது சங்கீத சம்பந்தமான ஆராய்ச்சிகள் நடாத்தினர். அதில் புத்துவாட்டி சோமசுந்தரம் அவர்கள் இயற்றிய உருப்படிகளை வயலினில் வாசித்துக்காட்டியும், அத்துடன் இவர் விசேஷமாய்ப் பிரஸ்தரித்து வைத்திருந்த சப்தாங்கப் பிரஸ்தாரக் கணித முறைகளையும், அதனுல் உண்டாகும் நன்மைகளையும் விளக்கிக்காட்டினுர். இவற்றை அவதானித்த திருவாளர் சித்தூர் சுப்பிரமணியபிள்ளையவர்களும், ராமதாஸ் அவர்களும் இவரது மிகுந்த திறமையை மெச்சியும், புகழ்ந்தும் போயினர்.

இவர் நாவலர்வீதியில் தந்தையாரின் நினைவாக "நாகலிங்க சங்கீத நிலையம்" என்ற ஒன்றை ஸ்தாபித்துப் பல மாணவர்களுக்குச் சங்கீதம் கற்பித்து வந்தார். அவர்களில் பிரதம சிஷ்யராக அமைந்தவர் திரு. K. V. தம்பு அவர்களே, இவரைத் திருவாளர் சோமசுந்தரம் அவர்கள் குரு சிஷ்யராகவும், தன் பிள்ளையாகவும் மதித்தவர்.

கடவுள் பக்தி, குருபக்தியிற் சிறந்த திரு. தம்பு அவர்கள் ஓர் வியாபாரியாக இருந்தும், கர்நாடக சங்கீதத்தில் மிகுந்த ஆசையுடையவர். தன் அன்றுட வேலைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் பகுதியைச் சங்கீதத்திற்காகவே செலவு செய்து, கலைக்காகவே தன் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்தும் தன் உழைப்பில் ஓர் பகுதியைச் செலவுசெய்தும் வருகிறார். இவர் 35 வருடம்வரை குருகுலவாசம் செய்து சங்கீதம் கற்றுக் குரு இறக்கும் பொழுதும் குருவுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து முடித்தார்.

இவர் பொறுமையுடன் குருவின் அந்திமக்காலம்வரை அவரின் எண்ணப்படி எண்ணற்ற உருப்படிகளைக் கற்றுள்ளார், என்பது இவரிடமுள்ள பல்வேறுவகையான பாடல்கள் எழுதிய நூல்களைக்கொண்டும், விசேஷமாக இவரது குரு போற்றிவந்த மகாவைத்தியநாதயர் மேளராகமாலிகை சோடசாங்க அங்கப் பிரஸ்தாரம் முதலியவற்றை இவர் குரு இவருக்குப் போதித்ததிலிருந்தும் அறியக்கூடியதாயிருக்கிறது. இவருடைய பாட்டுக் கச்சேரி கேட்க விறுவிறுப்பாய் இருக்கும். இவர் பாடும்போது எமக்கு அரியக்குடி, செம்பை, மகாராஜபுரம் போன்ற பிரபல வித்துவான்களின் பாணிகள்தான் நினைவுக்கு வரும்.

இவர் தாய் நாட்டில் காலத்திற்குக் காலம் சென்னை, திருவையாறு போன்ற இடங்களில் நடைபெறும் சங்கீத உற்சவங்களைப் போய்ப் பார்த்தும் கேட்டும் மகிழ்வார். அத்துடன் இந்திய வித்துவான்களைப் போன்று ஈழத்து வித்துவான்களையும் மேடையில் ஏற்றிவைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இசைக்கலை வளர்ச்சிக்காக அல்லும் பகலும் பாடுபட்டு யாழ்ப்பாண ரசிக ரஞ்சன சபாவை 1952 ம் ஆண்டு ஸ்தாபித்தார். அன்றுமுதல் இன்றுவரை இச்சபாவின் தனாதிகாரியாகக் கடமையாற்றிப் பல நண்பர்களின் அயரா ஒத்துழைப்புடன் சபாவை 25 ஆண்டுகளாக முன்னணிக்குக் கொண்டுவந்துள்ளார்.

இதற்கு எடுத்துக்காட்டாக ஷை சபாவுக்கு விழா மண்டபத்தைப் பல அன்பர்கள் மூலம் ஒவ்வோர் பகுதியை ஒவ்வொருத்தருக்குக் கட்டக்கொடுத்தும், தான் மண்டபத்தின் முகப்பைத் தன் குருநாதன் நினைவாகவும் கட்டி முடித்துள்ளார்.

அத்துடன் இவர், தான் பாடவும் மற்றையோருக்குக் கொடுத்து உதவவும் என நிறையச் சங்கீத நூல்களை வாங்கி வைத்துள்ளார். பல வித்துவான்கள் இவரிடம்சென்று தங்களுக்குக் கிடைக்காத சில பாடல்களை ஸ்வரசாகித்தியமாய் எழுதிப்போவர். யார் கேட்பினும் இல்லையென்னாது எல்லோரிடமும் அன்பாயும் பண்பாயும் பழகும் இவரிடம் வித்துவான்களும் தனிமதிப்பு வைத்துள்ளனர்.

ஷை சபாவின் சங்கீதக் கல்லூரியின் பஞ்சாயத்துச்சபையில் இவரும் ஒருவர், சங்கீதக் கல்லூரியின் வளர்ச்சியிலும், மாணவரின் முன்னேற்றத்திலும் கருத்துக்கொண்டு அடிக்கடி இவர் தக்க ஆலோசனைகள், படிப்பித்தல் முன்மாதிரிகள் கூறிவருவதால் ஷை கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் இவரிடம் மிக்க அன்பு வைத்துள்ளனர். அயல் நாடு சென்று சங்கீதம் கற்கும் மாணவர்களுக்கு இக்கல்லூரி மிக்க நன்மையை அளிக்கிறது. தன் குருநாதர் தனக்கு எவ்வாறு கற்பித்தாரோ அதே நினைவோடு இக்கல்லூரியைக் கவனித்தும், தன் குரு விட்டுச் சென்ற இசைத்தொண்டைத் தான் இக்கல்லூரியின் மூலமாக நிறைவேற்றியும் வருகிறார். தற்போது இக்கல்லூரியில் 300 பிள்ளைகளும் 12 ஆசிரியர்களும் உள்ளனர்.

இவர் இன்னும் பலகாலம் இச்சபையில் இருந்து தொண்டுசெய்யக் கடவுள் இவருக்குத் தீர்க்க ஆயுளைக் கொடுக்கவேண்டுமென்று இறைவனை வேண்டிக்கொண்டு, இவ்விழாச் சபையார் ஷை சபாவின் வெள்ளி விழாவில் இவரைக் கௌரவிக்குமுகமாகப் பட்டம் கொடுப்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடும், சந்தோஷத்தோடும் வரவேற்கிறேன். இப்பட்டமளிப்பைச் சங்கீத உலகமே முழுமனதுடன் வரவேற்குமென்பதில் ஐயமில்லை.

அத்துடன் ஷை சபாத் தலைவர் R. C. மன்மதராயன், காரியதரிசி S. தம்பையா இவர்கட்கும் ஓர் வேண்டுகோள்! அதாவது: இவரது குருநாதர் ஞாபகமாய் இவரிடமுள்ள ஸ்வரசாகித்தியரூபமான உருப்படிகள் முழுவதையும் ஒரு புத்தக வடிவில் வெளியிட்டால், இச்சபாக் கல்லூரியின் ஆரம்ப வகுப்புத் தொடக்கம் ஆசிரிய வகுப்புவரையுள்ள மாணவர்கள் படித்துப் பயன்பெறக் கூடியதாய் இருக்கும் என்றும் ஷை வித்துவான்களின் கட்டுரையை இவ் வெள்ளிவிழா மலரில் எழுதுவதையிட்டும் மிக்க சந்தோஷம் அடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்கீதத்தில் புரட்சி ?

W. S. செந்தில்நாதன்
சட்டத்தரணி

புரட்சி என்பது இக்காலத்தில் ஒரு நாகரிகமான வார்த்தையாகிவிட்டது. பல ஆண்டுகளுக்குமுன் ஐரோப்பாவில் கைத்தொழில், அரசியல் முதலியவற்றில் ஆரம்பமாகிய இப்புரட்சியானது இப்போது உலகத்திற் பலபாகங்களிலும் பரவியதுமல்லாமல் நுண்கலைகள் உட்படப் பல துறைகளிலும் அடியெடுத்து வைக்கத் தொடங்கியிருக்கிறது. புரட்சி எழுத்தாளர், புரட்சிக் கவிஞர், புரட்சி நடிகர் என்றிவ்வாறெல்லாம் பல்வேறு துறைகளிலுள்ள சிலர் இந்த அடைமொழியினுற் குறிக்கப்படுவதை நாம் காண்கிறோம். அதிர்ஷ்ட வசமாகப் புரட்சிப்பாடகர் என்றொருவர் இன்னும் தோன்றவில்லையாயினும் மிகவும் பூர்விகமானதும் தெய்வீகமானதுமான எமது கர்நாடக சங்கீதத்திலும் தற்போது இப்புரட்சி நுழைய எத்தனிப்பதை நாம் பார்க்கக்கூடியதாக இருக்கிறது.

சங்கீதக் கல்லூரிகள் தோன்றாத அக்காலத்திலே ஒருவர் சங்கிதம் படிக்க விரும்பினுல் தான் விரும்பிய ஒரு குருவிடம் சென்று அவர் வீட்டிலேயே வாசஞ்செய்து அவருக்கு வேண்டிய பணிவிடைகள் எல்லாம் செய்துகொடுத்து அவர் எப்போதாவது மனம்வந்து சொல்லிக்கொடுக்கும்போது அதைக் கவனமாகக் கேட்டுக் கிரகித்தும் அவர் தான் சாதகஞ் செய்யும்போது அதைக்கேட்டு அதிலுள்ள சில நுண்ணிய விஷயங்களை யறிந்தும் தனது இசையறிவைப் பெருக்கிக்கொள்வதுண்டு. மேலும் வானெலி முதலிய சாதனங்கள் இல்லாததனுல் சிறந்த வித்வான்களுடைய கச்சேரிகளைக் கேட்பதற்காக நீண்டதூரம் பயணஞ் செய்து பலமணி நேரமாக நடக்கும் அக் கச்சேரிகளைக் கேட்டு ரசித்து மகிழ்ந்து வந்தனர். சம்பிரதாயப்படி வர்ணத்துடன் ஆரம்பித்து சௌக்ககால உருப்படிகள் பலவற்றையும் இடையிடையே சிறு உருப்படிகளையும் பாடிப் பின் ராகம் தானம் பல்லவியும் இறுதியில் விருத்தம் திருப்புகழ் முதலியவற்றையும் முறைப்படி பாடி முடிப்பார்கள். இவற்றில் ராகம், நிரவல், ஸ்வரம் முதலியன மிகவும் விஸ்தாரமாகப் பாடப்படுவதனுல் இவற்றைக் கேட்பவர்கள் இறுதியில் பூரணதிருப்தியுடன் செல்வதோடு பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புது விஷயங்களையும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஆனால் இக்காலத்திலோ தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் இசைக் கல்லூரிகள் பல தோன்றி இளம் மாணவ மாணவிகளுக்கு வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், நடனம் முதலிய கலைகளை மிகவும் இலகுவாகப் போதிக்கின்றன. மேலும் பல சங்கீத சபாக்கள் மாதாந்தம் அல்லது வருடத்துக்கொருமுறை கச்சேரிகள், இசை விழாக்கள் முதலியவற்றை நடாத்தி ரசிகர்களுக்கு இசை கேட்டு மகிழப் போதிய சந்தர்ப்பங்கள் அளித்து வருகின்றன. இதை விட வானொலியிலும் அடிக்கடி பல சிறந்த வித்துவான்களின் கச்சேரிகளைக் கேட்டு ரசிக்கக்கூடியதாக இருக்கிறது. இலங்கையில் இருந்து பல இளைஞர்கள் தமிழ் நாட்டுக்குச் சென்று அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னை அரசினர் இசைக்கல்லூரி முதலியவற்றிற் சேர்ந்து முறைப்படி இசை பயின்று வந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட இப்போது சங்கீதம் கற்றவர்களின் தொகை பன்மடங்கு பெருகியிருக்கிறது. ரசிகத் தன்மையும் வெகுவாக அதிகரித்துள்ளது. இந்தச் சூழ்நிலையில் சங்கீதம் நடனம் முதலிய கலைகள் முன்னைவிட இப்போது மிகவும் நன்றாக வளர வேண்டுமென்றே நாம் கருத இடமுண்டு. ஆனால்

பலர் திரளாக வந்து பலமணிநேரமிருந்து கச்சேரிகளைக் கேட்டு ரசித்த அக்காலம்போய் இப்போது இலவசக் கச்சேரிகளிற்கூட வந்திருக்கும் மக்களின் தொகை மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. நாடகம், நாட்டியம் முதலிய நிகழ்ச்சிகளுக்கு அநேகமாக மண்டபம் நிறைந்திருக்கும். கலையறிவு சிறிதும் இல்லாதவர்கள் கூட நாடகம் நாட்டியம் முதலியவற்றைப் பார்த்து ஓரளவு ரசிப்பது சுலபம். ஆனால் இசையறிவு சிறிதளவாயினும் இருந்தாற்றான் சங்கீதத்தைக் கேட்டு ரசிக்கலாமென்று சிலர் இதற்கொரு காரணம் கூறுவார்கள். ஆனால் இதை நாம் ஏற்பதற்கில்லை. மிரு



கங்களும் தாவரங்களும் இசையின் வசப்பட்டு இயங்குமாயின், மக்களில் இசையறிவுள்ளவர்தான் இசையை ரசிக்கலாமென்று கூறுவது சிறிதும் ஒவ்வாது. சிறந்த வித்வான்களின் தெய்வீகமான அந்த இசையில் இசையறிவு எள்ளளவேனும் இல்லாத பாமர மக்கள்கூட லயித்து மகிழ்கிறார்கள். மகாராஜபுரம், அரியக்குடி, செம்மங்குடி, ஆலத்தூர் சகோதரர்கள், ஜி. என். பி., மதுரை மணி முதலிய வித்துவான்களின் கச்சேரிகளைக் கேட்கும்போது நாம் எம்மையே மறந்து அந்தத் தேவகானத்தில் இரண்டறக்கலந்து ஏதோ வேறோர் உலகத்தில் சிலமணிநேரம் சஞ்சாரம் செய்து வந்ததுபோன்ற ஓர் உணர்ச்சி எமக்கு ஏற்படுவது சகஜம். இவர்களிற் பல வித்துவான்கள் இப்போது இல்லை. இப்போதுள்ள வித்துவான்களின் கச்சேரிகளில் இப்படி ஓர் உணர்ச்சி கேட்போருக்கு ஏற்படுவது மிகவும் அருமை. மேலும் பலமணிநேரம் இருந்து கச்சேரிகேட்கிற தன்மையும் இப்போது மிகவும் குறைந்து வருகிறது. மக்கள் இப்போது எதிலும் விரும்புவது சுருக்கமாகவும் இனிமையாகவும் (short and sweet) இருப்பதையே. சௌக்க காலக் கீர்த்தனைகளை யாராவது பாடினால் அவருடைய பாட்டு ''இழுவற் பாட்டாக'' இருக்கிறதென்று பொதுவாகக் கூறுவதைக் கேட்கலாம். இதனாலேயே இக்காலக் கச்சேரிகளில் சௌக்ககாலக் கீர்த்தனைகள் பாடுவது மிகவும் குறைந்து வருகிறது. என்றாலும் சில வித்வான்கள் தம் கச்சேரிகளில் ''மெயின்'' கீர்த்தனமாக ஒரு உருப்படியாவது இரண்டு களைச் சௌக்கத்திற் பாடுகிறார்கள். முன்பெல்லாம் இந்திய வானொலியில் ஒவ்வொரு கிழமையும் தவறாது ராகம், தானம், பல்லவி நிகழ்ச்சி இருந்து வந்தது. இப்போது இதுவும் நன்றாகக் குறைந்து விட்டது. பதிலாக மெல்லிசை நிகழ்ச்சிகள் பல இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருக்கின்றன. பொது மக்களின் விருப்பத்தையறிந்து சில வித்வான்கள் தமது கச்சேரிகளில் சில ஜாலவித்தைகளைப் புகுத்தி வருகிறார்கள். சிட்டிபாபுவின் வீணையிலும் குன்னக்குடி வைத்தியநாதனின் வயலினிலும் இவற்றை நாம் காணலாம். மேலும் சில வித்வான்கள் ரசிகர்களைக் கவரும் நோக்கத்துடன் தாள வாத்தியக் கச்சேரி அல்லது வாத்யக் கோஷ்டி எனக் கூறும்படியாக அநேக பக்கவாத்தியங்களுடனும் சிலர் சம்பிரதாயத்துக்கு மாறான சில வாத்தியங்களுடனும் கச்சேரி செய்கிறார்கள். இப்படி மேடைச்சித்தி (platform success) அடைவதற்குப் பல யுக்திகள் கையாளப்படுகின்றன. அண்மையில் ஒலிபெருக்கியுடன் நடத்தப்படும் கச்சேரிகளில் தாம் மிருதங்கம் வாசிப்பதில்லையென்று கலியுக நந்தி என்றழைக்கப்படும் இந்தியாவின் தலைசிறந்த மிருதங்க வித்வான் ஸ்ரீ பாலக்காட்டு மணி ஐயர் கூறி அப்படியே நடந்தும் வருகிறார். கடந்த ஆண்டில் சென்னை மியூசிக் அகடமியில் நடந்த இசைவிழாவின் தலைமைப் பேருரையில் வர்ணத்தைக் கச்சேரி ஆரம்பத்திற் பாடாமல் இடையிற் பாடுவது நல்லது என்று குறிப்பிடப்பட்டது. இப்படியான பல புரட்சி முறைகளும் புரட்சி எண்ணங்களும் நமது சங்கீதத்தில் புகுந்து வருவதை நாம் காணுகிறோம்.

ரசிகர்களிடையேயும் நாம் பல மாற்றங்களைக் காண்கிறோம். கச்சேரியிடையிடையே கண்டபடி ''அப்ளாஸ்'' கொடுப்பதும் கச்சேரியைக் கெடுக்கிறது. தகுந்த இடங்களில் ''அப்ளாஸ்'' கொடுக்கத்தான் வேண்டும். ரசிகர்கள் தம்மையே மறந்து உணச்சிமேலீட்டினால் இயற்கையாக (Spontaneous) வருவதுதான் உண்மையான அப்ளாஸ். 1952ம் ஆண்டில் சென்னை மியூசிக் அகடமியில் ஜி. என். பி. யின் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. டி. என். கிருஷ்ணன் வயலின், பாலக்காட்டு ரகு மிருதங்கம். ராகம் தானம் பல்லவி நிகழ்ச்சியில் ராகமாலிகை ஸ்வரம். சிந்து பைரவியில் ஸ்வரம் பாடினதும் டி. என். கிருஷ்ணன் வயலினில் மிகவும் பிரமாதமான ஒரு ஸ்வரக் கோர்வையை வாசித்தார். உடனே சபையிலிருந்து எழுந்தது கரகோஷம். ஜி. என். பிக்குக் கூடக் கிடைக்காத 'அப்ளாஸ்' கிருஷ்ணனுக்குக் கிடைத்தது. ஆனால் இப்போது பாடகர் சிறிதுநேரம் மேல் ஸ்தாயியில் சஞ்சரித்து மேல் பஞ்சமத்தைத் தொட்டவுடன் அல்லது ஸ்வரம் பாடும் போது அடுக்காக ஒரு ததிங்கிணதோம் போட்டவுடன் விழுகிறது ''அப்ளாஸ்.''

கடைசியாக விமர்சகர்களைப் பற்றி ஒரு வார்த்தை. ஒரு கச்சேரி அல்லது ஒரு நடன நிகழ்ச்சி நடந்தால் அதைப்பற்றிப் பத்திரிகைகளிலோ சஞ்சிகைகளிலோ விமர்சனம் வருவது சகஜம், வரவும் வேண்டும். ஆனால் இவை நல்ல கலையறிவுள்ளவர்களால் பாரபட்சமற்றமுறையில் எழுதப்படவேண்டும். தமிழ் நாட்டில் எழுதப்படும் விமர்சனங்களை வாசிப்பதே தனி ஆனந்தம். ஒரு முறை மதுரை மணி ஐயர் பாடிய மோகனத்தைப்பற்றிக் கூறிய அமரர் 'கல்கி ''எல்லோரும் மோகனம் பாடுகிறார்கள். மணி ஐயரும் எல்லா ராகங்களும் பாடுகிறார். ஆனால் மதுரை மணிக்கும் மோகனத்துக்கும் ஒரு தனிப் பொருத்தம்'' என்று தொடங்கி மிகவும் அழகாகக் கூறி முடித்தார். இதே போல நமது நாட்டிலும் சங்கீத அறிவுள்ளவர்கள் இங்கு நடக்கும் கச்சேரிகளைப் பற்றி அழகாக விமர்சனம் எழுதும் நாள் எந்நாளோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரஸிக ரஞ்சன சபா மண்டபத்தை
கௌரவ அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் அவர்கள் திறந்த வேளையில்
சபாவின் கௌரவ செயலாளர் திரு. சு. தம்பையா அவர்கள்
உரையாற்றுவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர்களின் படங்கள்



திருமதி சரஸ்வதி பாக்கியராஜா
சங்கீத வித்துவான் (*1st Class*)
சங்கீத விரிவுரையாளர்.
இராமநாதன் அரச நுண்கலைக்
கல்லூரி.



இசைமணி K. சித்திவிநாயகம்
வயலின் வித்துவான்
முன்னைநாள் சங்கீதக் கல்லூரி
இசையாசிரியர்



இசைக் கல்லூரியின்
ஆசிரிய வகுப்பு மாணவன்
செல்வன் S. K. கணேசலிங்கம்



திரு. V. K. குமாரசாமி
வயலின் வித்துவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இசையும் பிரார்த்தனையும்'

திருமதி சரஸ்வதி பாக்கியராசா
சங்கீத வித்துவான், சங்கீத விரிவுரையாளர்,
இராமநாதன் அரச நுண்கலைக்கல்லூரி

இருபத்தைந்து வருடங்களாக யாழ் கலாரசிகர்கட்கும், இசைப்பிரியர்கட்கும் உன்னத சேவையை வழங்கி வரும் யாழ் ரசிகரஞ்சன சபாவினர் இவ்வருடம் வெள்ளிவிழா கொண்டாடுகின்றனர்.

சிறப்பாக இசைவகுப்புகள் நடாத்துவதுடன், நாட்டியமும் கற்றுத் தருகின்றனர். வட இலங்கைச் சங்கீத சபை பரீட்சைகட்கும் இச்சபை பரீட்சார்த்திகளை அனுப்பி, கர்நாடக இசையை பரப்பவும் முன்னேற்றவும் ஈடுபட்டுள்ளது.

ரஸிகரஞ்சன சபையினர் ஓர் அழகிய கலாமண்டபம் அமைத்துள்ளனர். யாழ் மக்களுக்கு அரிய இசைவிழாக்களை அளிப்பதுடன் இம்மண்டபம் பலதரப்பட்ட சேவைகளைச் செய்கின்றது.

என் போன்றவர்கட்கு இம் மண்டபம் செய்யும் பணியை எங்ஙனம் பகர்வேன். சங்கீதம் - பிரார்த்தனைக்குத்தான் முதலில் பயன்பட வேண்டும், என்னும் கொள்கையை உடையவர்களில் ஒருவர் யான். இறைவனை பக்தியால்தான் கட்டுப்படுத்தல் சாத்தியமாகும். பக்திக்கு சங்கீதம் ஸாதன மார்க்கம். நாதோபாஸனையின் மூலமே இறைவனின் அனுக்ரஹம் நமக்குக்கிட்டும்.

இதை மும்மூர்த்திகளான தியாகராஜர், ஸ்யாமாசாஸ்திரிகள், முத்துஸ்வாமி தீக்ஷதர், ஜயதேவர், நால்வர், பக்தமீரா போன்ற சான்றோரது வாழ்க்கை வரலாறு நிரூபிக்கின்றது. ''ஸங்கீதஞானமு பக்திவினு ஸன்மார்க்கமுகலதே''. என்ற க்ருதிக்கமைய- பாவமற்ற பக்தியற்ற சங்கீதத்தினுல் இறைவனை அடைய முடியாது. பக்தியோடும், பாவத்தோடும் பாடும்பொழுது தான் கேட்பவர் மனம் இதில் ஈடுபட்டு உணர்ச்சி பொங்கி நிற்கும். பிரார்த்தனைக்கு சங்கீதம் முக்கிய துணைக்கருவியாகும். பாட்டின் பொருள் அறிந்து பாடுவது மிகவும் அவசியம். ஏகாந்தமான சங்கீதத்தோடு கூடிய நாம சங்கீதத்தில் பகவான் ஈடுபடுவது போல் மற்றெந்த மார்க்கத்திலும் இலகுவில் ஈடுபடார்.

இந்த அரிய அநுபவத்தை நுகர யாழ் ரஸிகரஞ்சன சபாவினரின் மண்டபம் எனக்கு உதவுகின்றது.

யாழ் ரசிகரஞ்சன சபா யாழ் மக்களின் அமோக ஆதரவில், கர்நாடக இசைப் பணியில் வளர்ச்சியடைந்து ''பொன் விழா'' வையும் சிறப்பாக கொண்டாட எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் இசை வளர்ச்சி

சங்கீதவித்துவான் ஜெகதாம்பிகை பரமநாதன்

புராண காலத்திலிருந்து ஈழம் இசையிலே சிறந்து விளங்கி வந்துள்ளது. பாணபத்திரனின் மனைவியோடு இசைபாடிப் போட்டியிட, பாண்டிய அரசன் ஈழத்திலிருந்து ஒரு பாடினியைத் தருவித்தான் எனத் திருவிளையாடற் புராணம் கூறுகிறது. யாழ்ப்பாணம், யாழ்ப்பாடிக்குக் பரிசாகக் கொடுக்கப்பட்டது என ஒரு வரலாறு உண்டு.

இவ் யாழ்ப்பாணத்திலே இசை மரபுகளை ஆராய்ந்தால், இம்மரபு புத்துவாட்டி நா. சோமசுந்தரம் காலத்தில் இருந்தே ஆரம்பித்ததெனலாம். புத்துவாட்டி சோமசுந்தரம் அவர்கள் சிறந்த கர்நாடக மேதையாகத் திகழ்ந்தார். ஈழத்தில் தோன்றிய விபுலானந்த அடிகள், அண்ணாமலை சர்வகலாசாலையில் தமிழ்த்துறைத் தலைவராகவும் இசைத்துறை மேற்பார்வையாளராகவும் இருந்த காலத்தில், அங்கு இசைப் பேராசிரியராக இருந்த க. பொன்னையா பிள்ளை அவர்களோடு கலந்து இசையை ஆராய்ந்து யாழ் நூல் இயற்றினர். இவரது இசைச் சேவை இலங்கைக்குப் பெரும் மதிப்பைத் தேடித்தந்து, இசை வரலாற்றிலே ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. தொடர்ந்து சங்கர சுப்பையர், புத்துவாட்டி சகோதரர்கள், அண்ணாசாமி நாயினக்காரர், திருநாவுக்கரசு, வைரவநாதன், தவில் வித்துவான் ராமநாதபுரம் நாகரத்தினம், காமாக்ஷி சுந்தரம் ஆகியோர் இசைவளர வழி வகுத்தவர்கள் ஆவர். காமாக்ஷி சுந்தரம் அவர்களது அடிச்சுவட்டில் அமரர், தவில் மாமேதை தக்ஷிணாமூர்த்தி உலகமா மேதையாகத் திகழ்ந்தார்.

ஈழத்தில் இசை, நடனம் ஆகியவற்றின் வளர்ச்சி நல்ல நிலையை அடைந்து கொண்டிருக்கிறது. வட பெரும்பாக கல்வித் திணைக்களத்தோடு இணைந்த வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சைகள், ஈழத்தின் இசை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. இச் சபையைத் தாபிப்பதற்கு முன்னின்றவர்களுள் திரு. பரம் அவர்களும் கல்வித் திணைக்கள கல்விமா அதிபர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். ஈழத்துப் பட்டினங்கள் இன்று இசை, நடனத்துறையில் முன்னேறிக் காணப்படுகின்றன. பாடசாலைகளிலும், அரங்குகளிலும் சிறுவர், சிறுமியர் தமது திறமையைக் காண்பிக்கின்றனர். எங்கும் இசை ஒலி கேட்டுக் கொண்டிருக்கிறது. கலைப்பண்பு, கடவுட்பண்பு என்ற கொள்கை எங்கும் நிலவுகின்றது. தென் இந்தியாவில் இருப்பது போன்ற சங்கீத சபைகள் ஈழத்தின் இசை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. யாழ்ப்பாணத்தில் இருக்கும் ரசிகரஞ்சனசபா. அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம், வித்துவத் சபை, நுண்கலை மன்றம், இளம் கலைஞர் மன்றம் ஆகியனவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். யாழ். ரசிகரஞ்சன சபா 25 வருடகாலம் ஈழத்து இசை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி புரிந்து, தனது வெள்ளிவிழாவைக் கொண்டாட இருப்பது மிகவும் பெருமைக்குரியதாகும்.

ஈழத்திலே இசையை வளர்ப்பதில் பேரார்வம் கொண்டு உழைத்தவர்களில் சேர். பொன். இராமநாதன் அவர்களின் மருகரான காலஞ்சென்ற செனற்றர் நடேசன் அவர்களுக்குச் சிறப்பான ஓர் இடம் உண்டு. தமிழையும் தமிழர் தம் பண்பாட்டையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு பணியாற்றிய சேர். பொன். இராமநாதன் அவர்களுடைய கனவை நனவாக்குமுகமாக இராமநாதன் இசைக் கல்லூரியை அவர் 1960ம் ஆண்டு ஆரம்பித்து வைத்தார். தமிழகத்திலிருந்து, இசை வல்லுனரான ஸ்ரீ மகாராஜபுரம் விஸ்வநாதையர் அவர்களை அழைத்து, அங்குரார்ப்பணம் செய்து, அதிபராக நியமித்தார். பின்னர் அவரது புத்திரரான மகாராஜபுரம் சந்தானம் அவர்கள் அதிபராக இருந்து நீண்டகாலம் சேவைசெய்தார். அவரைத் தொடர்ந்து வீணை வித்துவான் கல்யாணகிருஷ்ண பாகவதர், கலாநிதி சித்தூர் சுப்ரமண்யபிள்ளை ஆகியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கல்லூரியின் அதிபர்களாக விளங்கி இசைக் கலை ஈழத்தில் வளர்ச்சி பெற பெரிதும் உதவினர். இவ்விசைக் கல்லூரியில் நான்காண்டு காலம் பயிற்சி பெற்று சங்கீத ரத்தினம் என்ற பட்டத்துடன் வெளியேறியவர் பலர். இக் கல்லூரியே இன்று இலங்கைப் பல்கலைக்கழக யாழ்வளாக நுண்கலைப்பிரிவின் பீடமாகப் பரிணமித்துள்ளது. ஈழத்தின் கர்நாடக இசை வளர்ச்சியில் இது ஒரு முக்கியமான முன்னேற்றமான படியாகும்.

ஈழத்து இசை வளர்ச்சியில் கதாப்பிரசங்கமும் ஒரு முக்கிய இடம் பெறுகிறது. நல்லை திருஞான சம்பந்த ஆதீன கர்த்தாவாகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள் தாயகத்திலும் ஈழத்திலும் மற்றைய அயல் நாடுகளிலும் கதாப்பிரசங்கம் செய்து தமக்கும் தமது நாட்டிற்கும் புகழ்தேடித் தந்து கொண்டிருக்கிறார். அவருடைய இச்சேவை சைவத்துக்கும் தமிழுக்கும் பல்லாண்டுகாலம் பயன் கிடைக்கவேண்டும்.

# வளர்ச்சியடைய வாழ்த்துகிறேன்

**திருமதி சி. தியாகராஜா**
யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர்

1952 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று 25வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள இவ் ரசிகரஞ்சனசபாவின் வளர்ச்சியினை நோக்கும் பொழுது நாம் பெருமிதம் கொள்ளாமல் இருக்கமுடியாது. யாழ் மாவட்டத்தில் உள்ள தனியார் துறை இசை நிறுவனங்களில் முன்னணியில் நிற்கும் இச்சபாவில் 250 க்கு மேற்பட்ட மாணவர்கள் பயில்கின்றனர் என்பது இவ் இசை நிறுவனத்தின் வளர்ச்சியின் எடுத்துக் காட்டும் அளவுகோலாகும்.

இசை— அது தனித்தன்மை வாய்ந்தது. தெய்வீகத்தன்மை பொருந்தியது. ஆத்மீக உணர்ச்சியைத் தூண்டவல்லது.

''சந்தையில் விற்கும் பொருளல்ல கீதம்
சிந்தையில் எழும் ஓசை நயம்'' எனும்

கூற்றிற்கிணங்க சிறந்த தெய்வீகத் தன்மை பொருந்திய இசையினை விலைக்கு வாங்க முடியாது. அவ்இசை இதயத்தினின்றும் எழுவது, தானகவே ஊற்றெடுப்பது. தூய இசையுடன் உள்ளம் ஒன்றின், அவ் உள்ளம் வேறொன்றினையும் நாடாது. இத்தகைய மேன்மைமிகு இசையினை 25 வருடங்களாக வளர்த்துவரும் இச்சபாவின் சேவையினைப் போற்றாமல் இருக்க முடியாது.

வசதி படைத்தவர்கள் தான் ஆசிரியர்களை அமர்த்தி இசை பயிலலாம், வசதி இல்லாதவர்கள் இசை ஞானம் இருந்தும் பயில முடியாது எனும் நிலை இருந்த காலத்தில், இசை சந்தைப் பொருளாகக் கூடாது என எண்ணி, தனிப்பட்ட முறையில் இசை நிறுவனத்தினை நிறுவி, வசதி இல்லாதவர்களும் தங்கள் இசை ஞானத்தை வெளிப்படுத்த வழிவகுத்த இவ் ரசிகரஞ்சனசபாவினைச் சமுதாயம் ஒரு காலமும் மறக்க முடியாது.

சித்திரை பிறந்து விட்டாலே போதும் சபாவின் இசைவிழாவும் ஆரம்பித்துவிடும். மக்களிடையே குதூகல உணர்ச்சியும் தொடங்கிவிடும். விழாக்களிப்புடன் மக்கள் இசை விழாவில் பங்கு கொள்ள விரைந்து செல்லும் காட்சி.

''சித்திரை வந்ததடி—சபாவில்

இசையும் முழங்குதடி'' என்று பெண்கள் தங்கள் தோழிகட்குக் கூறி அழைத்துச் செல்லும் காட்சி. இவை வருடாவருடம் நாம் கண்கூடாகக் காணும் காட்சிகள் ஆகும்.

அண்மைக் காலத்தில் இவ் ரசிகரஞ்சன சபா நடனத் துறையிலும் ஈடுபட்டுள்ளது. மாணவர்கள் பலரிற்கு நடனப் பயிற்சி அளிப்பதுடன் பல நடன நிகழ்ச்சிகளையும் அளித்துள்ளது. மேலும் நாம் எச் சந்தர்ப்பத்தில் இலவசக் கலை நிகழ்ச்சி அளிக்கும்படி கேட்டாலும், மகிழ்ச்சியுடன் நமக்குத் தந்துதவும் தன்மை, சபா அங்கத்தவர்களின் பெருந்தன்மையை மட்டுமன்றித் தன்நம்பிக்கையையும் காட்டுகின்றது.

இறுதியாக இத்தகைய சிறப்பாக இயங்கும் நிறுவனம் இசை, நடனத்துறையில் மட்டுமன்றி நாடகத் துறையிலும் சமயத் துறையிலும் ஈடுபட்டு மென்மேலும் வளர்ச்சி அடைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை

திருமதி கௌரி - இரத்தினசிங்கம்
மட்டக்களப்பு சங்கீத சபா பஞ்சாய உறுப்பினர்

முத்தொழில் நடாத்தும் முழுமுதற் கடவுளாகிய இறைவன் செவிக்கும் மனத்திற்கும் இன்பம் பயக்கும் படியான நாதத்தினால் ஆக்கியருளிய கலையே இசை என்பர். இறைவனைத் தொழுது நினைப்பதற்கும், இறைவனை அடைவதற்கும் இசையே சிறந்த அம்சமாகும். இசை இறைவன் முகமாக வெளிப்பட்டாலும், கலைமகளே இசைக்கு ஆதி தெய்வமாகக் கொண்டாடப்படுகிறாள்.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழிலே இசையே முதலானது. இசையானது செவிக்கு இன்பம் ஊட்டும் அளவில் நிற்காமல், உள்ளத்தைப் பண்படுத்திப் பேரின்பப் பேற்றையும் தரவல்லது. இக்கலை நம் உள்ளத்தின் பரவசத்தையே வெளியிடும் கலையாக விளங்குகிறது. இசையானது கேள்வி, சுரம், இராகம், தாளம், கருத்து, அலங்காரம், சுவை என்பவற்றைத் தன்னுள் அடக்கியுள்ளது.

மேலும் பலவித கலைகளுள் முதன்மை வாய்ந்ததாக இசைக்கலை கருதப்படுகிறது. அது ஒரு உன்னதமான கலை. சிவபெருமான் கையில் டமருகமும், கண்ணபிரான் கையில் குழலும், சரஸ்வதி தேவியார் கையில் வீணையும் இருப்பதால் இசை தெய்வத்தோடு, இணைக்கப்பட்ட, தெய்வாம்சம் பொருந்திய ஒரு கலை என நம்மால் உணரக் கூடியதாக உள்ளது.

மற்றக்கலைகளை அநுபவிப்பதற்கு வேண்டிய திறமையைக் காட்டிலும், இசைக் கலையை அநுபவிக்கக் கூடுதலான திறமை, கலையார்வம், இசைஞானம், தாளஞானம் எல்லாம் சேர்ந்திருக்கவேண்டும். வாழ்க்கைக்கு இசைக்கலை மிக அவசியம் என்பதைத் திருவள்ளுவர்கூடத் திருக்குறளிலே அழகுற எடுத்துக் கூறியுள்ளார். அக்குறளானது;

வசையொழிய வாழ்வாரே—வாழ்வார்
இசையொழிய வாழ்வாரே—வாழாதவர்

என்பதாகும்.

நுண்கலைகளாகிய ஓவியம், சிற்பம், கவிதை, இசை என்பவற்றுள் நம் உள்ளத்தைத் தொடுவது இசையாகும். மற்றக் கலைகள் பொதுவாகப் பல விஷயங்களைக் குறித்து நம் மனோநிலையை வெளியிடுகின்றன. ஆனால் ஆன்மிக உணர்ச்சிகளை இசையினால் வெளியிட முடிகின்றது.

ஒரு மனிதன் எந்த நாட்டைச் சேர்ந்தவனானாலும், எந்த மொழி பேசுபவனானாலும், எந்த ஜாதியானாலும், அவனால் இசையை உணர முடிகின்றது. மனிதர், மிருகங்கள், பண்டிதர், பாமரர், விருத்தகர், பாலகர் முதலிய எல்லோருக்கும் இன்பத்தைத் தரக் கூடியது இசையாகும். இசையானது கவலையில் இருப்பவரைக் கூட இன்பமடையச் செய்கின்றது. பசியாலே அழும் குழந்தை கூட இசை கேட்டு, பசியையும் மறந்து தூங்குகின்றது. சர்ப்பம் படம் எடுத்து ஆடுகிறது. பாஷை விளங்காத எத்தேசத்தவரும் இசையின் ஓசையினால் இணைகின்றனர். இந்த இசையின் மூலம் மரம், செடி, கொடிகள்கூட வளர்வதாக இன்றைய விஞ்ஞானம் கூறுகின்றது.

இசையைப் பண்படுத்தித் தரப்படுத்துவது தாளமும், சுருதியுமாகும். இசையை மேலும் அலங்கரிக்க, அணிகலன்களாக மிருதங்கம், வயலின், கடம், வீணை, புல்லாங்குழல், தவில் என்பவை விளங்குகின்றன. இவ் இசைக் கருவிகள், இசைஞான வளர்ச்சிக்கு உதவியதுடன், சுத்த இசை என்பதன் பெருமையையும் உணர்த்துகின்றன. மேலும், தன்வீணையின் இசையாலேயே இறைவனைத் தன்வசப்படுத்தி இராவணன் கைலாசநாதனிடம் பெறுதற்கரிய வரங்களைப் பெற்றான். யாழ்பாடி, என்பவன் தன் யாழின் மகிமையினாலேயே யாழ்ப்பாணத்தைப் பரிசாகப் பெற்றான். இவ்வரலாறுகள் இசைக்கருவிகளின்மேன்மையை எமக்கு விளக்குகின்றன.

பண்டைக்காலத்தில், கலைமகள், சதாசிவன், நாரதர், வர்ணன், அகத்தியர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகண்டி, அனுமான், இராவணன், அருச்சுனன் என்பவர்களும், தவமேன்மையினால் விளங்கப் பெற்ற முனிவர்களும் நமது இசைக்கு ஆசிரியர்களாக இருந்தனர். தும்புரு, நாரதர் என்னும் இருவரும் யாழேந்திய கையராய் இடையருது பாடி இறைவனை மகிழ்வித்தனர்.

நமது சமய குரவர்கள், சந்தான குரவர்கள், ஆழ்வார்கள், தியாகராஜ சுவாமிகள், முத்துசுவாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள், முத்துத்தாண்டவர், அருணகிரிநாதர், கோபாலகிருஷ்ணபாரதியார் முதலியோர் இன்னிசையால் இறைவனைப் பாடிப் பேரின்பப் பதம் அடைந்தவர்கள்.

உள்ளத்தில் ஆழ்ந்திருக்கும் இன்பங்களை வெளியிட்டுத் தானுகவே ஆன்மிகமான முறையில் அனுபவிக்கப் பிறந்தது இசையாகும். இசையைப் பயிலுவதனுல் அன்பு, அடக்கம், பக்தி, நட்பு, மனத்திருப்தி முதலிய நற்குணங்கள் விருத்தியாவதுடன், புத்திக் கூர்மை, கற்பனுசக்தி, ஞாபகசக்தி முதலியவையும் உண்டாகின்றது.

இசையின் பிரிவுகளான ''ஸங்கீதமும் ஸாகித்தியமும், சரஸ்வதி தேவியாரின் இருஸ்தானங்களாகும்''. ஸங்கீதம், எமக்குக்கேட்டவுடனேயே இன்பத்தையும்; ஸாகித்தியம், அதைக் கேட்டு விளங்கிய பின்னரே எமக்கு இன்பத்தையும் உண்டாக்குகிறது. இசையுடன் கூடிய, உத்தமமான சங்கீதத்தை நாம் அடிக்கடி கேட்பதால், உட்காதிலுள்ள துல்லியமான நரம்புகளுக்கு உணர்ச்சி உண்டாகி, அதன் மூலம் தெய்வீக உணர்ச்சி நமக்கு ஏற்படுகின்றது.

''செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்.
அச்செல்வம் செல்வத்துளெல்லாம் தலை''

எனும் குறளால் எமக்கு அறியக் கூடியதாக உள்ளது. இசையானது புராதன காலத்திலிருந்து நமக்கு வந்துள்ள விலையற்ற நிதிகளில் ஒன்ருகும். ஏனைய கலைகளையும் சாஸ்திரங்களையும் கற்பதனுல் அடையக் கூடிய பிரயோசனத்தை, ஒருவன் பலவித கலைகளுள் முதன்மை வாய்ந்த இசைக் கலையை முறைப்படி அப்பியாசம் செய்வதால் நிச்சயம் அடையலாம்.

ஜாதி, மதம், மொழி போன்றன இசை வளர்ச்சிக்கு இடையூருக இருப்பதில்லை. இசைக் கலைஞர்கள் எல்லோரும் ஓரினத்தவரே. இசை உலகிற் சஞ்சரிப்பவர்கள் வேற்றுமையை ஏற்படுத்தாமல் அன்புடனும், சகோதர மனப்பான்மையுடனும் பழகுவதைப் பார்க்கலாம்.

ஒரு நாட்டில் இசைக்கலை நன்ருக வளர்ந்திருந்தால், அந்நாட்டில் மக்கள் வாழ்க்கைத் திறனும் நல்ல பண்பாட்டுடன் கூடியதாக விளங்குவதை நாம் காணலாம். இசைக் கலையானது அறம், பொருள், இன்பம் இம்மூன்றையும் விளக்க வல்லது. பெரிய துறவிகள், முனிவர்கள் எல்லோரும் இக்கலை முக்தி தரவல்லது என்று கூறியுள்ளார்கள். மனிதனின் துர்க்குணங்களைப் போக்கி, நற்குணங்களைப் பெருக்கி, அவனை ஜன சமூகத்திற்கு ஒழுங்கானவனுக ஆக்கக்கூடிய சக்தி இசைக்குண்டு.

நல்லதோர் இசையைக் கேட்டதும் நமக்கு ஒரு பரிசுத்த பாவமும், மன அமைதியும் ஏற்படுகின்றது. இசையைப் பயிலாத ஒருவன் இவ்வுலகில் இயல்பாகத் தனக்குக் கிடைக்கக்கூடிய ஓர் அரிய கலை இன்பத்தை வீணுக இழக்கின்ருன் என்பது எவரும் மறுக்க முடியாத ஓர் உண்மையாகும்.

இசையின் பெருமை கடலைப் போன்றது, வற்ருதது. உலகில் நிம்மதி நிலைக்க வேண்டுமாயின், இசை ஓங்கி வளர்ச்சி பெற வேண்டும். முன்கூட்டியே இந்த நற்பணியைச் செய்து, அதன் 25வது ஆண்டுப் பூர்த்தியை நிறைவுபடுத்தும் யாழ்ப்பாண ரசிகரஞ்சன சபாவுக்கு எங்கள் பாராட்டைத் தெரிவிக்கின்ருேம். இதன் நன்முயற்சி மேலோங்கி வளரவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து இசை வானில்

# கர்நாடகத் தென்றலும் பொப் இசைப் புயலும்

S. K. கணேசலிங்கம்

செயலாளர் சங்கீத, நாட்டிய சங்கம் இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை

உலகில் வாழ்கின்ற பல்வேறு மக்களிடையேயும் வெவ்வேறு கலை, கலாசாரங்கள் நிலைபெற்றிருப்பதைக் காணமுடிகின்றது. கலைகளும் கலாச்சாரங்களும் மனித வாழ்க்கையில் இரண்டறக் கலந்து, அதன் நாகரீகப் போக்கினைப் பிரதிபலிக்கும் நிலைக் கண்ணுடிகள் போன்றவை. நுண்கலைகள் எனப் பாதுகாக்கப்பட வேண்டியவற்றுள் இசை அதி முக்கிய பங்கைக் கொண்டுள்ளது. அதுமட்டுமன்றி, மனித இனத்தையும் மற்றும் உயிரினங்களையும் இலகுவிற் கவர்ந்து கொள்ளும் ஆற்றல் படைத்தது இக்கலைஎந்தவொரு கலைக்கும்சில கலை நுணுக்கங்கள் உண்டு. அந்த வகையில் இசை நுணுக்கங்களைக் கொண்டது சாஸ்திரிக இசை. (Classical Music) இது பிரயோக நியதிகளையும் இசை இலக்கண மரபையும் ஒட்டியது. சாஸ்திரிக இசையை கீழைத் தேச, மேலைத்தேச சாஸ்திரீக இசை என இரு பெரும் பிரிவினுள் அடக்கலாம். இவ் விருபிரிவுகளில் எமது கர்நாடக இசையானது கீழைத் தேசசாஸ்திரீகஇசைப் பிரிவில் அடங்கும்.

தமிழவர்களது பாரம்பரிய சாஸ்திரீக இசை கர்நாடக இசை. இது நிருத்த, கீத, வாத்தியமென மூவகைப்படும். இவ் இசை, தாளக்கட்டுப்பாடுகளையும் சப்த ஸ்வரங்களை மூலமாயும் கொண்டெழுந்தது. சங்கீத திரிமூர்த்திகளான சியாமா சாஸ்திரிகள், தியாகராஜ சுவாமிகள், முத்துச்சாமி தீட்சிதர் மற்றும் பாபநாசம் சிவன், கோபால கிருஸ்ணபாரதியார் போன்றவர்களால் இராக தாள நியமத்துடன் இயற்றப்பட்ட இசைப்பாடல்களே பெரும்பாலும் இன்று நமது கர்நாடக சங்கீதத்தின் ஜீவநாடியாக இருந்து வருகின்றன. உலகில் தமிழர்கள் வாழும் இடங்களிலெல்லாம் இவர்களது இசைச் சொத்தாகபேணப்படுவதும் வளர்க்கப்பட்டு வருவதும் இவ் இசையே என்பதை யாவருமறிவர். கர்நாடக இசையானது கீதவாத்தியங்களது துண் சுருதிச் சேர்க்கையினுலும் லய நிதானத்தினுலும் மெருகூட்டப் பட்டு தென்றலில் மிதந்துவரும் இன்னிசைத் தென்றலாகின்றது. காதலைப் பாடுதற்குச் செஞ்சுருட்டி, பக்தியைப் பாடக் காம்போதி, சோகத்தை வெளிப்படுத்த முகாரி, தாலாட்டைப் பாட ஒரு நீலாம்பரி, பள்ளிஎழுப்பாடுவதாயின் பூபாளம் என இசை அறிஞர்களால் வகுக்கப்பட்ட இராக வைப்பு முறைகளே இன்றும் நமது கர்நாடகத் தென்றலின் இனிமையையும் சிறப்பையும் தெளிவாகக் காட்டுவன.

பொப் இசை என்பது சாஸ்திரிக இசையன்று. மேல்நாட்டு சாஸ்திரிக இசைக் கருவிகள் இவ்விசைக்குப் பயன்படுத்தப்படுவதால் மட்டும் இது சாஸ்திரிக இசையாகிவிடமுடியாது. மக்களுக்கு ஜனரஞ்சக இசையே (Popular music) தேவை. ஆகவே சாஸ்திரீக இசைக்கலையானது எளிமைப்படுத்தப்படவேண்டும் என்று வாதிடும் சிலரும் எம்மிடையே இல்லாமலில்லை. நுண்கலைகளை எளிமைப் படுத்த முயன்றால், அது கலையாக மாட்டாது. பதிலாகக் காலப்போக்கில் வழக்கற்ற ஒரு கலையாக மாறிவிடும். ஓவியன் ஒருவன். மக்களது எளிய இரசனைக்காக ஓவிய நுணுக்கங்களை நீக்கி ஓவியத்தை வரைவானுயின், அது காட்டூன் படமாகிவிடுதல்போல, சாஸ்திரீக இசையும் மங்கிவிடக் காலம் அதிகஞ் செல்லாது. இன்று ஈழத்து வைபவங்கள் எதுவாயினும் கோவில் கும்பாபிஷேகந் தொடக்கம் குடிபுகுதல் வைபவம் வரைக்கும் பொப் இசைப் புயல் வீசத் தவறுவதில்லை. தலைநகரிலும், ஏனைய நகரங்களிலும் ஆரம்பித்த இப்புயலானது தற்போது கிராமங்கள்தோறும் வேகமாக வீசி வருகின்றது. இவ் இசையின் வேகம் நிறைந்த போக்கினாலோ அதன் சூறுவளி இரைச்சல் காரணமாகவோ, என்னவோ இவ் இசை அறிஞர்களே இதற்கு இசைப்புயல் எனப் பெயர் சூட்டியுள்ளனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்திற் கடந்த கால் நூற்ருண்டு கால மாக கர்நாடக இசை அருங்கலையைப் பயில்வோரும் இரசிப்போரும் படிப்படியாகப் பெருகினராயினும், அதனை முழுமையாக இரசிப்பதற்கும் வரவேற்பதற்கும் நம்நாட்டு இரசிகர்கள் இன்னும் வளரவில்லையென்றே கூறவேண்டும். தமிழினத்தின் மொழியுரி மைக்கும் கலை, கலாசாரங்களது பாதுகாப் பிற்கும் ஏகோபித்த குரலெழுப்பும் இவ் வேளையில், கர்நாடக இசையல்லாத பிறி தொரு பொப்இசையை வரவேற்றுக் கரகோ ஷம்செய்வதுநமதுஅருங்கலையை நாமே பிறர் உதவியின்றிக் குழிதோண்டிப் புதைப்பதற் கொப்பாகும். இன்று கணிசமான தொகை கொண்ட சாஸ்திரீக இசைக் கலைஞர்கள் இலங்கையில் உள்ள போதிலும் இவர்கள் எல்லோரும் அரங்கம் ஏறுவதற்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. இசை விழாக்களையும் இசை நிகழ்ச்சிகளையும் நடாத்தும் நிறுவ னங்கள் ஒரு சில. பல நெருக்கடிகளின் மத்தியில் நடாத்தப்படும் இசை நிகழ்ச்சி களை இரசிக்க முன்வருவோர் மிகச்சிலர். பொது விழாக்களிலும், கலைவிழாக்களிலும் நமது சாஸ்திரீக இசைக்கு முக்கிய இடம் வழங்க விழா அமைப்பாளர்கள் விரும்பி முன்வரவேண்டும். ஆண்களைவிட இன்று பெண்களே சாஸ்திரீக இசையைப் பயில் வதிலும் ஆதரிப்பதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். இன்றைய நிலையில் இளைஞர் கள் பெண்களைவிடஅதிக ஆர்வம் காட்டவே ண்டியது மிக அவசியமானதும், அவரசமா னதுமாகும். கலை உணர்வும், கலைத்தாகமுங் கொண்டு பல நூற்றுக்கணக்கான இளைஞர் கள் இக்கலையைப் பயிலவும், இசை மன்றங் கள் சபாக்கள் நடாத்தும் இசைவிழாக்களில் ஆயிரமாயிரமாகக் கலந்து கொண்டு சிறப் பிக்கவும் முன்வருவார்களேயானுல், இவ்வரிய நம்கலையை பேணிவளர்த்திட நேரம் அதி கஞ் செல்லாது.

பழைய மாணவன் யாழ்ப்பாணம்
ரசிக ரஞ்சன சபா இசைக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமையாசிரியரின் பேனாவிலிருந்து . . .

தா. இராஜலிங்கம் சங்கீதபூஷணம்

ஈழத்தில் இசையார்வம் கொண்ட மாணவர்கள் பலர் இசை பயில அவாவுற்ற வேளையிலே, தற்போது இருபத்தைந்தாவது வயதை எட்டிப் பிடித்துள்ள ரசிகரஞ்சன சபாவினால் தோற்றுவிக்கப்பட்டதே எமது இசைக்கல்லூரி. இக்கல்லூரியின் பதின்மூன்கு வருட வளர்ச்சிக் காலத்தில் கணிசமான காலப்பகுதியை, நான் இக் கல்லூரியின் ஆசிரிய சேவையிலும் தலைமையாசிரியர் பதவியிலும் கழிக்க முடிந்ததையிட்டு மன மகிழ்ச்சியடைகிறேன். சாஸ்திரீக கர்நாடக இசையையும் பண்ணிசையையும் இத்துறையில் ஆர்வம் கொண்ட மாணவர்களுக்கு ஊட்டுதல் இக்கல்லூரியின் பிரதம நோக்கமாகும். தற்போது வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், வீணை, நடனம் ஆகிய துறைகளில் சுமார் 250 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிற்றப்பட்டு வருகின்றனர். பாடத் திட்டங்கள் யாவும் வட இலங்கை சங்கீத சபையின் பாட விதானத்தைத் தழுவியும், அத்துடன்கர்நாடக சங்கீதத்தில் போதிய ஞானத்தை மாணவர்களுக்கு ஏற்படுத்தும் வகையிலும்அமைக்கப்பட்டுள்ளன. இன, மத பேதமின்றி இசையை விரும்பும் யாவரும் நுழையக்கூடியதாக இக்கல்லூரி திறந்து வைக்கப்பட்டுள்ளது. பதின்மூன்று ஆசிரியர்களையும் ஒரு லிகிதரையும் உள்ளடக்கி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இசைக் கல்லூரி சீராக இயங்கி வருதல் குறிப்பிடத்தக்கது.

மேலும், இலங்கையில் இசை வளர்க்கும் நோக்குடன் தோன்றிய மன்றங்களும் இசைக்கல்லூரிகளும் பற்பல. அவற்றுள் இன்றும் இயங்கிக் கொண்டிருப்பன ஒரு சில. அவற்றின் வரிசையில் எமது சபாவும் அதன் இசைக் கல்லூரியும் வீறு நடை போட்டு வெள்ளி விழாக் காண்பது அரிய இசைக்கலையை தம் சொத்தாகப் பெற்ற தமிழ் மக்கள் யாவரும் பெருமை கொள்ள வேண்டிய விடயம். இற்றைவரை எம் கல்லூரி இயங்கிவரத் தனியான இடவசதி இல்லாதிருப்பது ஒரு பெருங்குறையே. அக் குறையை ஓரளவு நிவர்த்தி செய்யும் பொருட்டு யாழ் சன்மார்க்க போதன வித்தியாலயத்தை அரசாங்கக் கல்விப்பகுதியினரும் அதிபரும் முன்வந்து அளித்தமைக்கு அவர்களுக்கு நன்றி பாராட்டாமல் இருக்க முடியாது. மேலும், ரசிகரஞ்சன சபாவின் வெள்ளிவிழாக் கொண்டாடப்படுதல் போன்று இசைக்கல்லூரியின் வெள்ளி விழாக் கொண்டாடப்படும் வேளையிலே இசை பயிலும் மாணவர்கள் ஆயிரத்திற்கும் அதிகமாக இருக்கவேண்டுமென்று நமது இளந் தலைமுறையினரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இக்கல்லூரியில் இசை பயின்ற மாணவ, மாணவியர் இந்திய இசைப் பல்கலைக்கழகங்களின் பட்டப்பரீட்சைகளிலும், பிரவேசப் பரீட்சைகளிலும் வெற்றி வாகை சூடியுள்ளமை பெருமைக்குரியது. அத்துடன் இக் கல்லூரியிற் பயின்ற பல நூறு மாணவர்கள் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் காணப்படுவது கல்லூரியின் ஆற்றல் மிகு சேவையைப் பறைசாற்றுகின்றதெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட தம்பண்ணை

"தம்பி"

ரசிக ரஞ்சன சபா தனது வெள்ளி விழா கொண்டாடும் நேரத்தில் அதன் ஸ்தாபகரும் தனாதிகாரியுமான திரு. K. V. தம்பு அவர்களைப் பற்றி எழுதுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இச் சபையின் ஜீவநாடியாகவும் நடுநாயகமாக வும் இருந்து வருகிறார் என்பதை யாவரும் மறுக்கமுடியாது. ஆரம்ப காலத்தில் ஒரு சிலரின் உறுதுணையோடு இதை ஸ்தாபித்தாலும், அவரது தனி முயற்சியே இந்நிலைக்கு இச்சபை உயர்ச்சி அடைந்திருப்பதற்குக் காரணமெனக் கூறத் துணிகின்றேன். அடியேனும் பலகாலமாக உள்ளிருந்தும் வெளியிருந்தும் சிறிதளவில் அவருக்குப் பக்க பலமாக உழைத்ததையிட்டுப் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தனது வாழ்க்கையினைச் சங்கீதத்திற்கே அர்ப்பணித்து விட்டாரென்றால் மிகை யாகாது. அவர் ஒரு 'சங்கீதப் பித்தன்' அவர் ஈழத்தின் பழம்பெரும் வித்வான், காலம் சென்ற உயர்திரு புத்துவாட்டி சோமசுந்தரத்திடம் பலகாலம் குருகுல வாசம் செய்து இக்கலையை முறையே மரபு பிறழாது கற்றுச் சங்கீத உலகில் தனக்கென ஒரு இடத்தை வகுத்துக் கொண்டு இருக்கின்றார். சங்கீத சம்பிரதாயம் ஓர் எள்ளளவும் பிசகாமல் பேணிக் காப்பவர். தம்பண்ணை என்று அன்பாக அழைக்கப்பட்டு, சங்கீத உலகில் அவரைத் தெரியாதவர் கிடையாது.

தொடக்கத்தில் வண்ணை பெருமாள் கோயிலடி முன்றலில் கோலாகலமாக இசை விழாக்களை நடாத்தியவர், துரதிஷ்டவசமாக அங்கு நடைபெறாத ஒரு சூழ்நிலை ஏற் பட, அரசடிப் பிள்ளையார் கோயில் அருகாமையில் இட நெருக்கடி இருந்தும் தொடர்ந்து இசை விழாக்கள் நடைபெற்றன. 'எல்லாம் நன்மைக்கே' என்ற தத்து வத்திற்கு அமைய அவர் சிந்தனையில் சபைக்கு ஒரு மண்டபம் கட்டவேண்டும் என ஓர் எண்ணம் உருவெடுத்து, அக்கனவு வெகு சிக்கிரத்தில் நனவாகி மூன்று வருடங் களுக்கு முன் ஒரு சபா மண்டபத்தைப் பல அன்பர்களின் அன்பளிப்புடன் கட்டி முடித்தார்.

தம்பண்ணையின் வெற்றிக்கு முக்கிய காரணம் அவரது ஒழுக்கமான வாழ்க்கை யும், இறை பக்தியும், எழ்மையும், தன்னடக்கமுமேயாகும். எல்லோருடனும் அன் பாகப் பழகுவார். நேரத்தைப் பொன்னாக மதித்து எந்நேரமும் சுறுசுறுப்பாக ஏதா வது பிரயோஜனமான தொழிலில் ஈடுபடும் நற்பண்பாளர். அரட்டை அடிப்பது பிடிக்கவே பிடிக்காது. ஒருவரிடம் ஐந்து நிமிடத்திற்கு மேல் பேசியதை நான் அறி யேன். அவர் ஒரு சிறந்த குடும்பத் தலைவனும் சமூகத் தொண்டனும் அன்றியும் சுருங் கக் கூறின் அறிஞர் அண்ணா அவர்களின் தாரக மந்திரமாகிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பன அவரது வாழ்க்கையின் லட்சியம். வருடா வருடம் விழா நடத் துவதோடு நில்லாமல் இதைவிடச் சிறந்த ஒரு நற்கருமத்தை அவர் சாதித்ததைக் கூற வேண்டியது அவசியம். ஒரு இசைக் கல்லூரியை ஸ்தாபித்து அதைச் சிறந்த முறையில் இச்சபையின் நிர்வாகக் குழு நிர்வகித்து வருகிறது. இவரது மேற்பார்வை யில் அரசாங்கமோ அல்லது வட இலங்கைச் சங்கீத சபையோ நடாத்தத் துணியாத நேரத்தில் கிட்டத்தட்ட 350 மாணவர்களைக் கொண்ட இக்கல்லூரியில் வாய்ப் பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், சிறந்த ஆசிரியர்களால் நடைபெறுவதோடு ஒரு நடன வகுப்பும் ஒரு முன்னணி நடன ஆசிரியையால் இயங்குகிறது. பல சபை கள் காலத்திற்குக் காலம் தோன்றி மறைவது போலல்லாமல் தொடர்ந்து 25 வரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டங்கள் அருஞ்சேவை புரியும் இச்சபை தம்பண்ணையாளேதான் இவ் உன்னத நிலையை அடைந்திருக்கிறதென்று தைரியமாகக் கூறுவேன். அவருக்குப் பலர் உதவி செய்தாலும் முக்கியமாக காலஞ் சென்ற மணியம், இச்சபையின் தலைவர் திரு. இ. செ. மன்மதராயன், அதன் காரியதரிசி திரு. ச. தம்பையா அவர்களை விஷேடமாகக் கூற விரும்புகிறேன். சமீப காலத்தில் இச்சபை துரிதமாக முன்னேற்றம் அடைவதற்கு அவருக்கு உறுதுணையாக ஒரு சுறுசுறுப்பான காரியதரிசியாக திரு. ச. தம்பையா கிடைத்ததும் திரு. தம்பண்ணைக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம். சுயநலமற்ற சேவை வீண் போகாது. என்பதற்கு திரு. தம்பண்ணை ஒரு சிறந்த உதாரணம்.

நிற்க, திரு. தம்பண்ணையின் பாண்டித்தியத்தைப் பற்றி இங்கு கூறுவது பொருத்தமாகும். இந்தியா சென்று படிக்காவிட்டாலும் நிறைந்த சங்கீத ஞானத்தைத் தமது குருவிடமிருந்து பெற்றுள்ளார். குருபக்தி என்றால் யாழ்ப்பாணத்தில் அவரிடம் தான் நான் சிறப்பாகக் கண்டுள்ளேன். தனது குருவின் படத்தை அவரது அறையில் மும்மூர்த்திகளின் படத்தின் கீழ்வைத்துத் தினமும் பூஜிப்பதை நான் பார்த்துப் புளகாங்கிதம் அடைந்தேன். சென்ற வருடமும் தனது குருவின் படத்தை விழாவில் திரை நீக்கம் செய்து மகிழ்ச்சி அடைந்தார். நிறைந்த சங்கீத ஞானத்தைத் தனது குருவிடம் இருந்து பெற்றதோடு பாரமான உருப்படிகளையும் கற்று பாவப் பொலிவுடன் பாடுவதையே விரும்புவார். அரியகுடி. செம்மங்குடி பாணியையே பின்பற்றுவார். நல்ல சங்கீத சம்பத்தைப் பெற்றிருக்கிறார்.

தம்பண்ணையின் இன்னுமொரு சிறந்த குணத்தை கூறாமல் இருக்கமுடியாது. யார் அவரிடம் ஒரு இக்கட்டான நிலையில் உதவி கோரினாலும் மனமுவந்து தாராளமாக அவ்வுதவியைச் செய்வார். எத்தனையோ நண்பர்களுக்கு பொருளுதவி செய்திருக்கிறார் என்பதை நான் அறிவேன். "பரோபகாரம் இதன் சரீரம்" என்ற மகா வாக்கியத்திற்கு அமைய ஒரு கொடை வள்ளலாக இருந்து வருகிறார். இப்படியான உயர்ந்த பண்புகளையுடைய ஒருவருக்கு அவருடைய சபை வெள்ளிவிழா எடுக்கும் நேரத்தில் அவருடைய சங்கீத ஞானத்தையும் சங்கீத தொண்டையும் போற்றுமுகமாக அவருக்கு "கான கலாதரர்" என்ற பட்டத்தை வழங்க முன்வந்தது சாலச் சிறந்ததே. தம்பண்ணை வாழ்க! இசை வாழ்க! தமிழ் வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



" நாதஸ்வர பூபதி "

## சுப்பையா வைரவநாதன் அவர்கள்

யாழ்ப்பாணம் வண்ணுர்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். எழுபது ஆண்டுகளுக்கு முன்பே நாதஸ்வரக் கலையில் ஆர்வம் காட்டிச் சிறுவயதிலேயே சிறந்த நாதஸ்வர மேதைகளுடன் சமமாக ஒரே மேடையில் இருந்து வாசித்த பிரபல வித்துவான். சைவ ஆசார சீலராய் இன்றுவரை வாழ்ந்து வருபவர். 1920-ம் ஆண்டில் மாவிட்டபுரம் தேவஸ்தான தர்ம கர்த்தாவான பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக் குருக்களால் "தங்க நாதஸ்வரம்" பரிசாகப் பெற்ற பெருமை இவருக்கே உண்டு. இவரின் பால்ய குருவாக வேதராண்யம் திரு. வேலாயுதபிள்ளை அமைந்தார். பின் தானே தனக்கு நிகராக இக் கலையை இன்றுவரை சுருதி சுத்தமாகவும் லய சுத்தமாகவும் கர்நாடக பாணி கெடாமலும் கேட்போர் மனம் சந்தோஷமடைய நாதஸ்வரம் வாசிக்கின்ருர். பண்டைக்கால மரபு தவருமல் இன்றும் எங்கும் அதை நிலை நாட்டுவதில் நாதஸ்வரத்தில் மிகவும் திறமைவாய்ந்து முன்னிற்கின்ருர். இவரைப் பல பிரபல வித்துவான்களும் சென்று சந்தித்து இசை பற்றிச் சர்ச்சைகள் செய்வது இன்றும் நடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருதங்க அரங்கேற்றம்

தலைவர்:
பேராசிரியர் பே. கனகசபாபதி அவர்கள்
(விஞ்ஞான பீடாதிபதி, இலங்கைப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம்)

ரஸிக, ரஞ்சன சபா
மிருதங்க, வயலின், வாய்ப்பாட்டு மாணவன்




செல்வன் பாலஸ்கந்தன் இராசரத்தினம்

ரஸிக ரஞ்சன சபா மண்டபம்

28-4-76 புதன்கிழமை மாலை 6 மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




— ரஸிக ரஞ்சன சபா ஸ்தாபகர் திரு.K.V.தம்பு அவர்களின் சேவையைப் பாராட்டுமுகமாகச் சைவ பரிபாலன சபைத் தலைவர் சிவநெறிக் காவலர் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை பொன்னுடை போர்த்துக் கௌரவிக்கிறார். பக்கத்தில் நிற்பவர் முன்னாள் தலைவர் திரு. S. P. கந்தையா.



1975-ல் நடைபெற்ற கலாச்சாரப் பகுதியினரின் புத்தாண்டுவிழாவின் போது கலை நிகழ்ச்சிப் போட்டிகளில் எமது கல்லூரி முதலிடம் பெற்றமைக்காக அரசாங்க அதிபரின் பாரியார் திருமதி நிமால் அமரசேகரா அவர்களிடமிருந்து சபாச்செயலாளர் முதல் பரிசைப் பெறுகிறார். —


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் ரஸிக ரஞ்சன சபாவின் 14-வது ஆண்டு இசைவிழாவின் போது உப தலைவர் இசைப்புலவர் சி. செல்லத்துரை அவர்களுக்குச் சபையின் சார்பில் வடமாநில வித்தியாதிபதி திரு. சி. தணிகாசலம் அவர்கள் பொன்னுடை போர்த்துக் கௌரவிக்கிறார். பக்கத்தில் தலைவர் திரு. S. P. கந்தையா அவர்கள்.



சங்கீத பூஷணம்
அமரர் திரு. K. நடராஜா அவர்கள்
வயலின் வித்துவான்



அமரர் திரு. சி. பொ. செல்லையா அவர்கள் யா. ர. ர. சபா ஆரம்ப தலைவர்களுள் ஒருவரும் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரத ராசப் பெருமாள் தேவஸ்தான தர்மகர்த்தா சபைத் தலைவர்களுள் ஒருவரும் ஆவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1955 நிர்வாக சபை



இருப்பவர்கள்: வலமிருந்து —
க. வை. தம்பு (தனாதிகாரி), க. சரவணமுத்து, N. தம்பிரத்தினம் (உபதலைவர்), T. சீனிவாசகம் (தலைவர்), S. P. செல்லையா, R. சிவராசா, S. செல்லத்துரை (உபதலைவர்),

நிற்பவர்கள்: வலமிருந்து —
க. சுப்பிரமணியம், I. பரராசசிங்கம், T. ஆறுமுகம் (உப காரியதரிசி), S. பொன்னுச்சாமி, S. சீவரத்தினம், P. காசிலிங்கம் (செயலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சங்கீதக் கல்லூரி மூன்றாவது ஆண்டு நிறைவு விழா - 1966



நிற்பவவர்கள்: இடமிருந்து வலம் —
திரு. V. அம்பலவாணர், திரு. தா. பாலசுந்தரம், பிரம்மஸ்ரீ S. சர்வேஸ்வர சர்மா, பிரம்மஸ்ரீ விஸ்வநாத ஐயர், திரு. S. சண்முகலிங்கம், திரு. A. S. இராமநாதன், செல்வி சொ. தேவநாயகி, செல்வி ச. சந்திரமதி.

இருப்பவர்கள்: இடமிருந்து வலம் —
திரு. தா. இராசலிங்கம், திரு. S. தணிகாசலம் (யாழ் பிரதேச உதவி வித்தியாதிபதி), உயர்திரு. M. திருச்செல்வம் (ஸ்தல ஸ்தாபன அமைச்சர்), திருமதி P. திருச்செல்வம், செல்வி வ. செல்வரட்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சங்கீதக் கல்லூரிப் பெற்ருேர் தின விழாவில் கல்லூரி மாணவி செல்வி சிவானந்தி மன்மதராயன் பிரதம விருந்தினரை வர வேற்று உரையாற்றுகிருர்.



சென்ற வருட இசைவிழாவில் யாழ் மாவட்ட கலாச்சார அலுவலர் திருமதி சிவசக்தி தியாக ராசா தலைமையுரை நிகழ்த்துகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா. ப. நோ. கூ. ச. சமாச களஞ்சியப் பொறுப்பாளர் திரு. V. M. K. சோமசுந்தரம் அவர்கள் யாழ் ரஸிக ரஞ்சன சபா இசைவிழா மண்டபத்தின் மின் சுற்ருேட்டத்தை ஆரம்பித்து வைக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது சங்கீதக் கல்லூரியின் பெற்றோர் தின விழாவின்போது கௌரவ அமைச்சர் திரு. M. திருச்செல்வம் அவர்களுக்குக் கல்லூரி மாணவன் மாலையிடுகிறான். சபாவின் தலைவரும் செயலாளரும் அருகில் காணப்படுகின்றனர்.



சங்கீதக் கல்லூரியின் வருடாந்த விழாவின்போது திருமதி புனிதம் திருச்செல்வம் அவர்கள் தராதரப் பத்திரங்களை வழங்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சபாவின் இசைவிழாவில் நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி இ. மு. வி நாகநாதன் தலைமையுரை ஆற்றுவதையும் சபாத் தலைவர் அருகில் நிற்பதையும் காணலாம்.



சங்கீதக் கல்லூரி பெற்றோர் தின விழாவில் அரசாங்க அதிபர் திரு. M. ஸ்ரீகாந்தா அவர்களும் சபா போஷகர், நியாயவாதி திரு. த. முத்துசாமிப்பிள்ளை அவர்களும் செயலாளர் அறிக்கை வாசிப்பதை அவதானிக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டு, கிறீல், கேற், சைக்கிள் கரியர்

மற்றும் சகலவிதமான

இரும்பு வேலை செய்பவர்கள்.

குறித்தநேரத்தில் ஆடர் வேலைகள் செய்து

கொடுக்கப்படும்.

# கதிர்காமன்

## இரும்புத் தொழிற்சாலை

90, மணிக்கூட்டு வீதி — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலாயன் கபே

## ரம்மியமான சைவ ஹோட்டல்

மனோரம்மியமான சூழ்நிலையில் மென்மையான பலகாரவகைகள்,

நெய்யில் தயாராகும் டிபன் வகைகள்

இந்திய பாணியில் நன்மணம் கமழும்

டிக்காஷன் காப்பி, தேநீர் மற்றும் குளிர்பானங்களும்

எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம்.

மதிய வேளையில் புனிதமான சாப்பாடு

உங்களுக்கு அன்பான சேவை—இன்றே விஜயம் செய்யுங்கள்

ஓடர் பலகார பட்சணங்கள் குறித்த வேளையில் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ் மாவட்ட விநியோகஸ்தர் :

ஆனந்தவிகடன், தீபம் மற்றும் பத்திரிகைகள்

**மலாயன் கபே**

36, 38, பெரிய கடை, யாழ்ப்பாணம்



அன்பளிப்பு

# ஹரன் ஜுவல்லர்ஸ்

50, கன்னாதிட்டி வீதி

யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# T. SENATHIRAJAH & SONS.

Importers & Wholesalers in Motor spares
Accessories & Electrical Goods.

**20/4, Stanley Road,**

**JAFFNA.**

Specialists in Volkswagen, Peugeot,
Isuzu, Benz & Austin Vehicles spares

Telephone: No. 7192


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# M. M. ABDUL CADER & Bros,
## STORES

SPECIALIST IN HARDWARES

14, Stanley Road,
JAFFNA.

Phone: 443

*office:*
97, K. K. S. Road,
JAFFNA.

KMG

கமலா கராஜ் அன் இன்டஸ்றீஸ்
53, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

விழா இனிது நடைபெற
எமது வாழ்த்துகள்

செட்டியார் அச்சகம்
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜு ஸ்ரோர்ஸ்

அலங்கார அழகுசாதன ஆடம்பரப் பொருட்கள்

கிளாஸ், அலுமீனியம், எனமல், பிளாஸ்ரிக் சாமான்கள்

றெஜிபோம்சீற், கட்டில், மெத்தை வகைகள்

பழரச பானங்கள், பழச்சத்துக்கள், கலர் தினிசுகள்

வெகுமதிப் பொருட்கள், விதம் விதமான விளையாட்டுச் சாமான்கள்

நெற்குற்றும், மாவு அரைக்கும் இயந்திரங்களும்

அதன் உபகரணங்களும்

மின்சார மோட்டார்கள், பல்புகள், — மின்சார உபகரணங்களும்

மற்றும் பலவித சாப்புச்சாமான்களும் மலிவாகப் பெற்றுக்கொள்ள

இன்றே விஜயம் செய்யுங்கள்

**67 & 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

போன் : 372 P. O. Box 64 தந்தி : ராஜு



தந்தி : வைரம் உ தொலைபேசி : 7199

தங்கப் பவுண்,

வைர நகைகள்

எங்களிடம்

மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்

# பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Complments from

# A. Vaithilingam & Co.

General Merchants & Commission Agents

45, K. K. S. Road, — JAFFNA

Phone: 663

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
வேல்முருகன் துணை

*With the Best Compliments from*

# E. K. THANGARAJAH

## இ. க. தங்கராசா

76, Hospital Road,
JAFFNA.

T'phone: 7314

Tele Grams: **EKAYTEE**

T'phone: 530

*With the Best Complimen from*

# *N. Vaitilingam & Co. Ltd.*

General Hardware Merchants, Engineers & Hardware Manufacturers

138, K. K. S. Road.

JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T'Phone: 7022

*With the best Compliments from*

# CHELLAPPA & CO.

Motor Dealers & Lubricants.

*Agents for* : WALKERS SONS & Co. Ltd.

4/1, Stanley Road.

JAFFNA.

*Residence:* T'phone: 7363

உலகப் புகழ்

# " கனிங் "

கம்பனியின்

யந்திர தொழில் நுட்ப ஆலோசனையுடன்

இரும்பு. பித்தளைப் பொருட்கள், கார், சைக்கிள் பாகங்களுக்கு

உத்தரவாதத்துடன்

நிக்கல், குரோமியம், வெள்ளி

மின்பூச்சுக்கள் செய்துகொடுக்கப்படும்.

சிறந்த சேவைக்கு எம்மை நாடுங்கள்

# பிள்ளையார்

## மெற்றல் வேக்ஸ்

107, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி மலாயன் ரேடிங் கொம்பனி

★

சகலவித இரும்பு, பித்தளைச் சாமான்கள் பலவர்ண மை வகைகள்

முதலியன சகாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

★

# சிங்கப்பூர் கம்பனி

128, 130, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்

தொலைபேசி: 547

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த போசனத்திற்கு எப்பொழுதும் ஞாபகம் இருக்கவேண்டிய
போசனசாலை

திறீ கொயின்ஸ் ஹோட்டல்

உங்களுக்கு வேண்டிய ருசிமிக்க சிற்றுண்டி வகைகளை
இங்கே பெற்றுக்கொள்ளுங்கள்.

இன்று யாழ் நகரில் மக்கள் பேச்சில் இடம்பெறும்
சிறந்த ஹோட்டல்:

திறீ கொயின்ஸ் ஹோட்டல்

காலை, மாலை, மதியபோசனம் சுவையுடன் சுத்தமாக அருந்திட

# திறீ கொயின்ஸ் ஹோட்டல்

35, கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம்

அன்பளிப்பு

# S. V. முருகேசு

154, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அம்பிஹா ஜுவெல்ஸ்"

நகை, இரத்தின வியாபாரிகள்

"கன்னாதிட்டியின் ஆதி (1828) முதல்

நகை, இரத்தின வியாபாரிகளின் வம்சாவழியினர்"

**59, கன்னாதிட்டி வீதி — யாழ்ப்பாணம்**

யாழ் இரசிக ரஞ்சன சபாவின் வெள்ளிவிழா சிறப்பாக
நடைபெற வாழ்த்துகிறோம்.

மிருதங்கம், தபலா, டோல், டோல்கி, டோலக் ஆகிய கருவிகள்
அனைத்தும் சிறந்த முறையில் புதிதாகவும், பழுது
பார்த்தும் கொடுக்கப்படும்.

ஒருமுறை எம்மிடம் விஜயம் செய்து பாருங்கள்

ஓடர்கள் சிறந்த முறையில் கவனிக்கப்படும்

உரிமையாளர்:

## கே. கோவிந்தபிள்ளை

194/1 நாவலர் வீதி — யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேற், கிறில், கார், டிறெக்டர், வாட்டர்பம்

முதலியவற்றின் உதிரிப் பாகங்கள் ஒட்டிக்கொடுக்கப்படும்.

★

# வதனு எலெக்ரிக்கல் வெல்டிங் வேக்ஸ்

உரிமையாளர்: சி. செல்லையா

44/3, மணிக்கூட்டு வீதி — யாழ்ப்பாணம்

யாழ் ரஸிக ரஞ்சன சபாவின் வெள்ளிவிழாவிற்கு

எமது வாழ்த்துக்கள்

யாழ்நகரில் 36 வருடகாலம் சிறந்த புகைப்பட சேவைசெய்யும்

ஸ்தாபனம்

★

# பாரத் ஸ்ரூடியோ

82/1, கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சிறந்த ரகப் புடவைகட்கும்

* மற்றும் திருமணச் சேலைகட்கும்

* பட்டுவேட்டி சால்வைகட்கும்

* நம்பிக்கையான சிறந்த இடம்

# கணேசன் ஸ்ரோர்ஸ்

க. செ. கனகசபை (உரிமையாளர்)

63, காங்கேசன்துறை வீதி — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

சுவை மிகுந்த
சைவ உணவு வகைகளுக்கும்

சுத்தமான பசுப்பால், தேநீர், காப்பி, குளிர்பானம்
சுத்தமான பட்டர் வகைகளுக்கும் சிறந்த இடம்

# கிஷ்ண பவான்

## சைவ ஹோட்டல்

உரிமையாளர்: ந. கிஷ்ணபிள்ளை

35, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

திருமணம் மற்றும் கொண்டாட்ட வைபவங்களுக்கும் உரிய
ஆடர்கள் சிறந்த முறையில் குறித்த நேரத்தில்
தயார்செய்து கொடுக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு வேண்டிய அழகிய

தங்கப்பவுண் நகைகளுக்கு

தங்கப்பவுண், வைரங்கள்

ஆகியவற்றிற்கு எம்மை நாடுங்கள்

## வீ. எம். கே. தங்க மாளிகை

கண்டி வீதி — சாவகச்சேரி

தொலைபேசி: 08



யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாவின்

வெள்ளி விழாச் சிறக்க எங்கள் நல்வாழ்த்துக்கள்

## த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

42, 44, பெரியகடை — யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் இசைக்கருவிகள் எதுவாயிருந்தாலும்

சிறந்த முறையில் பழுது பார்த்துக் கொடுப்பதற்கு

சிறந்த ஸ்தாபனம்

இன்றே விஜயம் செய்யுங்கள் எமது ஸ்தாபனத்திற்கு

**ராஜன் மியூஸிக்கல்ஸ்**

இசைக்கருவிகள் திருத்துபவர்

இசைக்கருவிகள் புதிதாகவும் செய்து கொடுக்கப்படும்

ராஜன் மியூஸிக்கல்ஸ்
5, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:
M. நடராசன்



யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபா

வெள்ளி விழா

சிறப்புற நடைபெற எமது வாழ்த்துக்கள்

**கிருன் ஹோட்டல்**

கடற்கரை வீதி,

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் நாள் 17-4-76 சனிக்கிழமை

### நிகழ்ச்சிகள்

பிற்பகல் 6-00 விநாயகர் பூசை

„ 6-15 உயர்திரு லால் விஜயபாலா அவர்கள்
*(யாழ்/மாவட்ட அரசாங்க அதிபர்)*

குத்துவிளக்கேற்றி விழாவினைத் தொடக்கி வைப்பார்கள்.

„ 6-30 சபா தலைவர் வரவேற்புரை

வெள்ளி விழா வாழ்த்துப் பாடல்: இசைப்புலவர் C. செல்லத்துரை

ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ பரமாசார்ய ஸ்வாமிகள்

வாழ்த்துரை: உயர்திரு லால் விஜயபாலா அவர்கள்

பட்டமளிப்பு: உயர்திரு லால் விஜயபாலா அவர்கள்

பட்டமளித்துக் கௌரவிக்கப்படுபவர்கள்:

நாதஸ்வர வித்துவான்
திரு. சு. வைரவநாதன் அவர்கள்
'நாதஸ்வர பூபதி' என்னும் பட்டத்தைப் பெறுவார்

திரு. க. வை. தம்பு அவர்கள்
"சங்கீத கலாதரர்" என்னும் பட்ட்த்தைப் பெறுவார்.

கலைஞர்களைக் கௌரவித்தல் :
சபா தலைவர் திரு. R. C. மன்மதராயன் J. P. அவர்கள்

### மலர் வெளியீட்டு விழா

மலர் பற்றிய மதிப்புரை: திரு. இ. மகாதேவா (தேவன், யாழ்ப்பாணம்)

திரு. ச. தம்பையா (செயலாளர்)

மலர் முதற்பிரதி பெறுபவர்: உயர்திரு S. தியாகராசா அவர்கள்
(S. T. R. பிலிம்ஸ் உரிமையாளர்)

இரண்டாம் பிரதி பெறுபவர்: திரு. V. M. K. சோமசுந்தரம் அவர்கள்
(யாழ். ப. நோ. கூ.ச. சமாசம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புரை: 1. திரு. செ. சிவஞானம் அவர்கள்
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்

2. கலாநிதி கா. இந்திரபாலா அவர்கள்
பேராசிரியர், மனிதப்பண்பியல் பீடம்,
இலங்கைப் பல்கலைக்கழக யாழ்-வளாகம்.

3. திரு. V. S. இராசசுந்தரம் அவர்கள்
(உதவி அத்தியட்சகர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன
தமிழ்ச் சேவை)

4. திரு: C: C. சோமசேகரம் அவர்கள் J. P. U. M.
(சட்டத்தரணி, போஷகர் யா. ர. ர. சபா)

5. திரு. சி. நாகராசா அவர்கள்
யாழ்/கச்சேரி பொதுசனத் தொடர்பு அதிகாரி

6. திரு. மு. பஞ்சலிங்கம் அவர்கள்
உதவி அரசாங்க அதிபர் யாழ்/மாவட்டம்

7. திரு. V. நடராசா அவர்கள்
விசேட ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்

8. திரு. ராம் குமாரசாமி அவர்கள்

9. திரு. பரம் தில்லைராசா அவர்கள்

10. செல்வி. F. சந்தன நங்கை கந்தப்பு அவர்கள்
இளைப்பாறிய பேராசிரியை

LIBRARY UNIVERSITY OF JAFFNA
ARCHIVES
246406
University of Jaffna
246406
Library
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

லிங்கம் கூல் பார்

52 மணிக்கூட்டு வீதி

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன் : 585

அழகிய

பவுண் நகைகள்

தங்கப் பவுண்

வைரங்கள்

* *
*

கே. என். எம். மீருன் சாஹிப்

தங்கப் பவுண் நகை மாளிகை

நகை வியாபாரம்

கன்னுதிட்டி — யாழ்ப்பாணம்

செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org